மாலை 47 மணி 4 ஏப்ரல் 2005 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு



## மதுரையில் சித்திரைப் பெருவிழா
– சிறப்புக் கட்டுரை

## ஸ்ரீகள்ளழகர் ஆற்றில் இறங்குவது ஏன்?

## நாடிய நாலாயிரம் தேடித்தந்த நாத முனிகள்
– ஏ.எம்.ஆர்.
சிறப்புக் கட்டுரை

## இறைதரிசனம்
– "எழுத்துச் சித்தர்" பாலகுமாரன்

## அன்னதானப் பலன் என்ன?
– கி. இராஜநாராயணன்

## ராம நவமியில் அலங்கார ராமாயணம்



உ

அருள்மிகு

# தேவி கருமாரியம்மன் திருக்கோயில்

திருவேற்காடு, சென்னை - 600 077.
தொலைபேசி : 2680 0430, 2680 0487
Website : www.thiruverkadukarumari.com
E-Pooja - E.mail : info@thiruverkadukarumari.com
sridevikarumariamman@sancharnet.in
vedapureeswararthiruverkadu@sancharnet.in
oondreeswararpoondi@sancharnet.in

## சித்திரா பௌர்ணமி இலட்சார்ச்சனை விழா

(21.4.2005 முதல் 25.4.2005 வரை)

அன்புடையீர் வணக்கம்.

தமிழகத்தின் தலைநகராம் சென்னையிலிருந்து சுமார் 18கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருவேற்காடு எனும் புகழ்வாய்ந்த திருத்தலத்தில் குடி கொண்டுள்ள தேவி கருமாரி அம்மனுக்கு நாளது ஸ்ரீ பார்த்திப வருடம் சித்திரைத் திங்கள் 8ஆம் நாள் முதல் 12ஆம் நாள் வரை (21.4.2005 முதல் 25.4.2005 முடிய) சித்திரா பௌர்ணமி விழாவும், இவ்விழாவில் அருள்மிகு முத்துவீர சுவாமிக்கு 22.4.2005 மற்றும் 23.4.2005 ஆகிய இரு தினங்கள் இலட்சார்ச்சனையும் வெகு விமரிசையாக நிகழ்ச்சிநிரலில் கண்டுள்ளவாறு நடைபெற இருப்பதால் அன்பர்கள் அனைவரும் இலட்சார்ச்சனையில் பங்கேற்று அம்மனின் பேரருள் பெற்று பன்னெடுங்காலம் இனிதே வாழ அன்புடன் அழைக்கிறோம்.

**இலட்சார்ச்சனை கட்டணம் ரூ. 50 /-**

நேரம் 22.4.2005 காலை 8–00 மணி முதல் மாலை 5–00 மணி வரை
23.4.2005 காலை 7–00 மணி முதல் மாலை 4–30 மணி வரை

### கருவறை விமானம் மற்றும் இராஜகோபுர கலசங்களுக்கு தங்க முலாம் பூசும் திருப்பணி வேண்டுகோள்

அருள்மிகு தேவி கருமாரி அம்மன் திருக்கோயிலின் கருவறை விமானம் மற்றும் இராஜகோபுர கலசங்களுக்குத் தங்க முலாம் பூசும் திருப்பணி நடைபெற இருப்பதால், பக்தர்கள் தங்களால் இயன்ற பொன்னையோ, பொருளையோ உதவியாக அளித்துத், தாங்கள் அளிக்கின்ற ஒவ்வொரு கிராம் தங்கமும், பொருளும் அன்னை கருமாரி திருக்கோயில் தங்க விமான திருப்பணியில் இடம் பெற்று, தாங்கள் எல்லா வளமும் இறையருளும் பெற்று பல்லாண்டு வாழ அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,

**மா. கவிதா,** B.L.,
துணை ஆணையர் / நிர்வாக அதிகாரி

**எம். நந்தகோபால்**
அறங்காவலர் குழுத்தலைவர்

**பா. சீனிவாசன், மு. உதயகுமார், ஜி. திருநாவுக்கரசு, ஆர். சந்திரா ராஜா**
அறங்காவலர்கள்




# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 பார்த்திப-சித்திரை
மாலை -47 மணி-4 ஏப்ரல் 2005


# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்,

"தாரண" தமிழ்ப்புத்தாண்டு விடைபெற்று, "பார்த்திப" தமிழ்ப் புத்தாண்டு தொடங்கும் இம்மங்கல வேளையில், அனைத்து மக்களும் எல்லா வளங்களும் நலங்களும் பெற்று இன்புற்று வாழ, எல்லாம் வல்ல இறையருளின் திருவருளை வேண்டுகின்றேன்.

அறங்களில் சிறந்தது அன்னதானமே என்பது ஆன்றோர்கள் தெளிவுப்படுத்தியுள்ள கருத்தாகும்.

**"பசித்தோர் முகம் பார்"** என்ற பட்டினத்தடிகளும், **"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்"** என்று பாடிய அருட்பிரகாச வள்ளலாரும், வலியுறுத்திய முதன்மையான அறம்தான் அன்னதானம்.

மண்ணில் பிறப்பெடுத்த பயனே, அன்னதானம் செய்வது தான் என்று அழுத்தம் திருத்தமாகச் சேக்கிழார் பெருமானும்,

**"மண்ணினில் பிறந்தார் பெறும்பயன், மதிசூடும்**
**அண்ணலார் அடியார் தமை அமுது செய் வித்தல்"**

என்று பாடியிருக்கக் காணுகின்றோம்.

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் 23.3.02 அன்று அன்னதானத் திட்டத்தைத் தொடங்கிவைத்தது மட்டும் அல்லாமல் **மாண்புமிகு தமிழ்நாடு முதல்அமைச்சர்** அவர்கள் அதுமுதல் தம் ஒவ்வொரு மாதச் சம்பளத்தையும் அன்னதானத் திட்டத்திற்கெனவே வழங்கி வருகிறார்கள்,

இம்மகத்தானத் திட்டம் இன்று தமிழகத்தில் 171 திருக்கோயில்களில் மிகச் சிறப்புற நடைபெற்று வருவதை ஆன்றோர்களும், சான்றோர்களும் பாராட்டி வருகின்றார்கள்.

நம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் தொடங்கி வைத்த இம்மகத்தான அன்னதானத் திட்டம் மூன்றாண்டுகள் நிறைவு பெற்று, இத்திங்களில் நான்காம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ள மகிழ்ச்சியான செய்தியைத் திருக்கோயில் வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்ப்புத்தாண்டு இதழாய் மலரும் ஏப்ரல் 2005 "திருக்கோயில்" இதழில் 'மதுரைக்கு மாண்புசேர்க்கும் சித்திரைத் திருவிழா' சிறப்புக் கட்டுரை இடம் பெறுகின்றது.

இதழ் முகப்பை மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் வண்ணப்படம் அலங்கரிக்கிறது.

"நாடிய நாலாயிரத்தைத் தேடித் தந்த நாதமுனிகள்" எனும் தலைப்பில் திவ்விய பிரபந்த அமுதம் நமக்களித்த நாதமுனிகளின் சேவையை விவரிக்கின்றார்."ஜோதிடச் சக்கரவர்த்தி" ஏ.எம்.ஆர். அவர்கள்,

இறைதரிசனம் மகா மேதைகளுக்கும், மகாஞானிகளுக்கும் மட்டுமல்ல, தினந்தோறும் சமைத்த பாத்திரம் கழுவி, துணி உலர்த்தித் தூசு துடைக்கும் வேலைக்காரிக்கும் கூட கிட்டக் கூடியது தான் என்பதை எடுத்துக் காட்டுகின்றார் "எழுத்துச்சித்தர்" பாலகுமாரன் அவர்கள் தம் "இறைதரிசனம்" கட்டுரையில்.

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் நாடிசோதிடம் எனும் ஒப்பரிய அறிவியல் கலைக்கு வித்திட்ட சித்தர் காகபுஜண்டரை அடையாளம் காட்டுகின்றார். "செந்தமிழ்வாரிதி" முனைவர் இரா. செல்வக் கணபதி அவர்கள்.

மதுரை கலெக்டர் ரோஸ்பீட்டருக்குக் கிடைத்த அம்மன் மீனாட்சி திருவருளும், அதற்கு அக்கலெக்டர் செலுத்திய நன்றிக் காணிக்கையும் நம்மை நெகிழச் செய்கின்றது "காலச்சுவடுகள்" பகுதியில் வாசகர்களைக் கவரும் நீதிக் கதைகள், கேள்வி-பதில்கள், அரிய துணுக்குள் யாவும் வழக்கம் போல் இவ்விதழை அலங்கரிக்கின்றன.

சித்திரைத் தேர் என அசைந்தாடி அழகு கூட்டி வரும் ஏப்ரல் 2005 திருக்கோயில் இதழை யாவரும் படித்துப் பயன்பெற்று இன்புற அன்புடனே வேண்டுகிறேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்,


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119 உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.





# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அன்னதானத் திட்டத்திற்கு மூன்று மாதச்சம்பளம் நன்கொடை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை 23.03.02 அன்று தொடங்கி வைத்தார்கள். அதுமுதல் தம் ஒவ்வொரு மாதச் சம்பளத்தையும் திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கெனவே வழங்கி வருகிறார்கள்.

2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குரிய தம் சம்பளம் ரூபாய் பத்தாயிரத்தை சென்னை மயிலை அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு வழங்கினார்கள். அத்திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு மோகனசுந்தரம் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் வந்து காசோலையைப் பெற்றுக் கொண்டார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குரிய தம் சம்பளத்தை தஞ்சை மாவட்டம் திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயிலின் அன்னதானத்திட்டத்திற்கு வழங்கினார்கள். அத்திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு தென்னரசு அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் காசோலையைப் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய தம் சம்பளத்தைத் திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு வழங்கினார்கள். அத்திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு மாரியப்பன் அவர்கள் மாண்புமிகு தமிழ்தாடு முதலமைச்சர் அவர்களிடம் காசோலையைப் பெற்றுக் கொண்டார்.

## இதழின் உள்ளே...


1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அன்னதானத்திட்டத்திற்கு மூன்று மாதச் சம்பளம் நன்கொடை 2
2. அன்னதானப் பலன் என்ன? - கி. இராஜநாராயணன் 3
3. மதுரைக்கு மாண்பு சேர்க்கும் சித்திரைத் திருவிழா - பா.பாஸ்கரன், பி.எஸ்.சி.,பி.எல்., 5
4. பூதம் தந்த புனிதநூல் - டாக்டர் கோமதி சூரியமூர்த்தி 8
5. இறைதரிசனம்- "எழுத்துச் சித்தர்" பாலகுமாரன் 9
6. திருவிளையாடல் புராணம் - இரா. அரங்கசாமி 12
7. இராமாயண காலத்தில் தேவ விமானம் - கலைமாமணி மா.லட்சுணன் 15
8. காலச்சுவடுகள் : கலெக்டர் ரோஸ்பீட்டர் மதுரை மீனாட்சி வழங்கிய காணிக்கைப் பொருட்கள் 16
9. தமிழ்நாட்டுச் சித்தர்பரம்பரை : காகபுஜண்டர் - முனைவர் இரா. செல்வக் கணபதி 17
10. நான்கையும்பிடி ஒவ்வொன்றாக விடு - திருமதி இந்திரா ஆராஅமுதன் 19
11. மகாபாரதம் - முனைவர் த. அமிர்தலிங்கம் 20
12. கேள்வி - பதில் 23
13. திருமந்திர உபதேசம் - திருமந்திரச்செம்மல் டி.வி. வெங்கட்ராமன்,இ.ஆ.ப., (ஓய்வு) 24
14. மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே... - பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., 27
15. செருத்துணை நாயனார் - தா. சந்திரசேகரன், இ.ஆ.ப., 29
16. கஞ்சமலை அருள்மிகு சித்தேசுவர சுவாமி திருக்கோயில் - ஏ. கிருஷ்ணன் 31
17. திரைலோக்கி க்ஷீராப்தி சயனநாராயணப்பெருமாள் - ஜி. கிருஷ்ண ரத்தினம் 32
18. சுந்தரரை வா என்றழைத்த திருமழபாடித் திருக்கோயில் - கி. ஸ்ரீதரன், எம்.ஏ., 34
19. பக்தர்களின் பாவம் தீர்க்கும் சித்திரகுப்தன் திருக்கோயில் 36
20. மாதவப் பெருமாள் கோயிலில் அலங்கார ராமாயணம் - இரா. ரகுநாதன் 37
21. நாடிய நாலாயிரம் தேடித்தந்த நாதமுனிகள் - "ஜோதிடச் சக்ரவர்த்தி" ஏ.எம்.ஆர். 38



## "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"

"நீரின்றி அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"
என்று புறநானூறு கூறுகின்றது.

அன்னதானத்தைச் சிறப்பிக்கும் இன்தமிழ்க் காவியமான மணிமேகலையும்,

**"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"**
என்று கூறுகின்றது.

அன்னதான அறத்தின் சிறப்பை வலியுறுத்தும் வகையிலேயே

**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே!"**
எனும் ஒரே தொடர் இருபெரும் இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கக் காணுகின்றோம்.

# அன்னதானப் பலன் என்ன?

**கி.ராஜநாராயணன்**

ஒரு ஊரில் ஒரு கிழவி; அவளுக்கொரு மகன் ; இருவரும் அன்றாடம் கூலி வேலை செய்து காலங்கழித்து வந்தனர். அந்த நிலையிலும் தினந்தோறும் ஒரு அதிதிக்கு அன்னதானம் செய்யாமல் சாப்பிடமாட்டார்கள். மகனுக்கோ இது பிடிக்கவில்லை. "என்னம்மா! நாம இப்படிப் பாடுபட்டுச் சம்பாதிச்சுத் தினந்தோறும் ஒருவனுக்குத் தெண்டச் சோறு போடணுமா? இதனால நீ என்ன புண்ணியத்த கட்டிக்கிடப்போற!" என்று கேட்டான். அவள் "அப்படிச் சொல்லாதப்பா! நிச்சயமாக நாம செய்யிற அன்னதானத்துக்கு நல்ல பலன் கிடைக்கும்" என்று ஆறுதல் சொல்வாள்.

இப்படிப் பல நாட்கள் கழிந்தபின், கிழவி மகனைக் கூப்பிட்டுச் சொன்னாள்; அப்பா! நீ ரொம்ப நாளாக் கேட்டிக்கிட்டிருந்தயே, நாம செய்யிற அன்னதானத்துக்கு என்ன பலன் என்று; அதைக் கடவுளிடமே போய்க் கேட்டுவா! என்று சொல்லிக் கட்டுச் சோறு கட்டிக் கொடுத்தனுப்பினாள்; மகனும் காடு செடி, வனம், வனாந்திரமெல்லாம் கடந்து நடந்தான். வழியில் எதிர்ப்பட்ட ஒருவன் எங்கப்பா போகிறாய் என்று கேட்டான். அவன் தனது தாயார் செய்து வரும் அன்னதானத்துக்குப் பலன் கேட்கக் கடவுளைத் தேடிப் போகிறேன் என்று சொன்னான். உடனே அவன் அப்படியானால் நல்லதாப்போச்சு; என் விஷயமும் ஒண்ணக் கேட்டு வாப்பா என்ற கூறி இவன் ஏதென்று கேட்க, அவன் சொன்னான்; "தம்பி எனக்குச் சொத்துச் சுகத்தில் குறைச்சலில்லை. ஒரு தனிக்குளமே இருக்குது. அந்தக் குளம் ஒவ்வொரு வருஷமும் பெருகும். பயிர் பொதிப்பட்டமா இருக்கும் போது குளம் டமாருண்ணு உடைந்து வயலையெல்லாம் அழித்துப் போய்விடுகிறது. இப்படியொரு நாலைந்து வருஷமா நடக்கு. இதற்குக் காரணம் கேட்டு வா" என்று கூறினான்.

அதைத் தாண்டி வேறொரு ஊரில் எதிர்ப்பட்ட ஒருவனும் "தம்பி எனக்கு மூன்று மாமரங்கள் இருக்குது. அந்த மரம் பூவும் பிஞ்சுமாகக் காய்க்கும்! அப்புறம் அப்படியே பலபலண்ணு வெம்பி உதிர்ந்து மாராயிடும்; இதுக்கும் காரணத்தைக் கேட்டு வா தம்பி" என்று கூறியனுப்பினான். இவனும் நடந்தான். இருட்டிவிட்டது. நடுக்காடு; எங்கேயாவது தங்கலாமாவென்று மரத்தின் மேல் ஏறிப்பார்த்தான்.

சற்றுத் தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது. அங்கே சென்றான். அது ஒரு காட்டு வேடனுடைய குடிசை. அங்கு வேடனும் வேடத்தியும் மட்டும் இருக்கின்றனர். அவ்வப்போது வேட்டையாடிக் கிடைத்ததைத் தின்றுவிட்டுப் பரண் வீட்டில் வாழ்கின்றனர். இவன் அவர்களிடம் போய் தன் வரலாற்றைச் சொல்லி அன்று ராத்திரி மட்டும் தங்க இடம் கேட்டான். வேடத்தியோ முன்பின் தெரியாதவருக்கு இடம் தரக்கூடாது என்று பிடிவாதம்செய்கிறாள். வேடன் இரக்கமுள்ளவன் தன் பங்குக்குரிய ஒரு உருண்டை மாவில் பாதியை இவனுக்குக் கொடுத்தான். அதேபோல் பரண் வீட்டில் பாதியை அவள் மறித்துக் கொண்டாள். மீதிப் பாதியில் இருவரும் படிக்கவேண்டியதாயிற்று.

வெளிப்பக்கம் வேடன் படுத்துக் கொண்டு உட்பக்கம் இவனைப் படுக்க வைத்தான். இரவில் தூக்கக் கலக்கத்தில் உருண்டு விழுந்து வேடன் புலியடித்துக் கொல்லப்பட்டான். விடிந்தது. "அடசண்டாளப் பாவி; என் புருஷனைக் கொன்னுட்டயே"ண்ணு இவனை அடித்து விரட்டினாள். இவனும் தனக்கு இடங்கொடுத்த வேடன் கதி இப்படியாய் விட்டதே என்று வருத்தத்தோடு நடந்தான்.





**ஈரோடு மாவட்டம் பாரியூர் குண்டத்துக் காளியம்மன் திருக்கோயில் திருவிழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. ராமசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.**

இடையில் கடவுள் ஒரு முனிவர் வேடத்தில் வந்து "யாரப்பா நீ! எங்கே போகிறாய்?" என்று கேட்டார். இவன் தன் கதையைச் சொன்னான்; உடனே அந்த முனிவர், "இங்கிருந்து 10வது மைலில் ஒரு ஊர் அங்கு ஒரு ராஜா, அவருக்கு இன்று மத்தியானம் 12 மணிக்கு ஆண்குழந்தை பிறக்க இருக்கின்றது. நீ போய் அந்தக் குழந்தையை ஓர் வெள்ளித் தட்டில் ஏந்திக் கொண்டுகேள்! அது சொல்லும் நீங்கள் செய்கின்ற அன்னதானத்தின் பலனை" என்று கூறி மறைந்தார்.

இவனும் அங்கு போய் ராஜாவைக் கண்டு தான் வந்த விஷயத்தையும், முனிவர் சொல்லியனுப்பியதையும் கூறி அந்தப் பிள்ளையை வெள்ளித் தட்டில் ஏந்திக் கொண்டு "எங்கள் தாயார் செய்யும் அன்னதானத்துக்குப் பலன் என்ன?" என்று கேட்டான். அப்போது அந்தக் குழந்தை பேசியது. "நான் யார் தெரியுமா? ஒரு நாள் நள்ளிரவில் தங்க இடம் கேட்டு வந்தாயே ஒரு வேடன் குடிசைக்கு! அங்கே உனக்கு அரை உருண்டை தினைமாவு, படுக்க அரையடி இடமும் கொடுத்தானே வேடன்; அந்த வேடன்தானப்பா நான். இந்த அரை உண்டை மாவுக்கும் அரையடி இடத்துக்கும் எனக்குக் கிடைத்த பலன் ராஜா வீட்டில் பிறந்திருக்கிறேன். இவ்வளவுக்கு இவ்வளவு பலன் என்றால், நீங்கள் பரம்பரையாகச் செய்து வருகின்ற அன்னதானத்துக்குப் பலன் எவ்வளவோ! அதைச் சொல்ல என்னால் முடியாதப்பா!" என்றது.


பின்னர் இவன், அந்தக் குளம் உடைந்து போகும் சங்கதியைச் சொல்லி அதற்குப் பரிகாரம் என்னவென்று கேட்டான். அந்தக் குளத்துப் பண்ணையாரிடம் கல்யாண வயதில் ஓர் பெண் இருக்கிறாள்; அவள் கல்யாண ஏக்கத்தில் பெருமூச்சுவிடும் போது அந்தக் குளம் உடைந்து போகின்றது. அவளுக்குச் சீக்கிரமே கல்யாணம் கட்டிவைத்துவிட்டால் அந்தக் குளமும் நன்றாக விளையும் என்றது.

மேலும் அந்த மாமரங்கள் வெம்பிப் போவது ஏன் என்று கேட்டான்; அந்த மரத்தினடியில் ஒரு அண்டா நிறையப் புதையல் இருக்கின்றது. அதை எடுத்து ஏழை எளியவர்களுக்குத் தானம் பண்ணினால் அந்த வெம்மை தீர்ந்து போகும். அதுவும் வெம்பாமல் காய்க்கும் என்றது. இவன் இவ்வளவையும் கேட்டுக் கொண்டு சரி என்று கிளம்பினான்; பின்னும் குழந்தை பேசியது. இன்னொன்று கேள்! அரை உருண்டை மாவு கொடுத்ததால் நான் ராஜாவாகப் பிறந்திருக்கிறேனல்லவா!. உனக்கு இடமும் உணவும் தர மறுத்தாளே என் மனைவி வேடத்தி. அவளுக்குக் கிடைத்த பலனைக் கேட்டாயா? நீ செல்லும் வழியில் குழுவக்குடி இருக்கும். அங்கே ஒரு பன்றி 7 குட்டி போட்டுள்ளது. அது நெத்திச் சுட்டி, நாலு கால்சிலம்பம், வெடிவாலோடு ஒரு பொட்டக் குட்டியும் கெடக்கு. பாத்துப்போ. அதுதான் அந்த வேடத்தி" என்று சொல்லியது.

சரி! என்று திரும்பினான். வழியில் பன்றிக் குட்டிகளையும் கண்டான். குளம் உடைந்ததற்குப் பரிகாரம் சொன்னான். அந்தப் பண்ணையாரும் இவ்வளவு தூரம் சாதனை புரிந்த உனக்கே என் மகளைத் தருகிறேன் என்று அவனுக்கே கல்யாணம் செய்து பண்ணையாராக்கினான். அடுத்துமாமரம் வெம்பியதற்கான பரிகாரத்தையும் சொன்னான். அவனும் அப்படியே புதையலை எடுத்து இவனுக்கே கொடுத்தான். இப்படியாக இவனது தாய் செய்த அன்னதானத்துக்குப் பலன் கிடைத்தது. இவனும் நலமாக வாழ்ந்தான்.

நன்றி : "கிராமியக் கதைகள்" நூல்,
வெளியீடு : அகரம்,1, நிர்மலா நகர், தஞ்சாவூர்

★



# மதுரைக்கு மாண்புசேர்க்கும் சித்திரைத் திருவிழா

**பா. பாஸ்கரன்,** பி.எஸ்.சி.,பி.எல்.,
இணை ஆணையர், நிர்வாக அதிகாரி,
அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

"பாண்டிய நாடே பழம் பதி" என்பதை விளக்கும் பாங்கில் மலைமகள் மலயத்துவச பாண்டியனுக்கு மகளாகத் திருஅவதாரம் செய்தும், பரமேசுவரன் சுந்தரபாண்டியராகத் திருக்கோலம் கொண்டு மதுரைக்கு எழுந்தருளி, அன்னை மீனாட்சியைத் திருமணங்கொண்டும், பாணடியர் மரபு தழைக்க முருகப்பெருமான் உக்கிர குமார பாண்டியராகத் திருஅவதாரம் செய்தும் சிறப்புமிக்க பாண்டிய நாட்டை பாண்டியர்க்குப் பாங்காக மூவரும் எழுந்தருளி அருளாட்சி நல்கிய திருவிளையாடற் புராண வரலாறு நிகழ்வு, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் ஆண்டு தோறும் நடைபெறும் சித்திரைப் பெருவிழாவில் அமைவது பெருஞ்சிறப்பை உடையதாகும்.

**மீனாட்சி திருஅவதாரம்**

மதுரையை ஆண்ட மலயத்துவஜ பாண்டியனின் மனைவியாக காஞ்சனமாலைக்கு அவளின் முற்பிறவியில் அவளுக்கு அம்மை அருளிய வரத்தின்படி, பரஞான வடிவமாகிய சத்தி, மீனாட்சியாக யாகத்தீயில் திருவவதாரம் செய்தார். மூன்று தனங்களுடன் அன்னை மீனாட்சி விளங்குவதைக் கண்டு மலயத்துவசன் மனம் வருந்தினான். அவனின் வருத்தம் தீரும்படியாக அப்பொழுது ஆகாயத்தில் இருந்து "இவளுக்கு ஏற்ற கணவன் எதிர்ப்படும் போது கூடுதலான ஒரு தனம் மறையும்; அதனால் கவலைப்படவேண்டாம். இவளுக்கு "தடாதகை" எனப் பெயரிட்டு ஆண்மகவிற்குரிய அனைத்து வித்தைகளையும் கற்பித்து ஆட்சியை அவளிடம் தந்து, அகம் மகிழ்வாயாக" என்று அசரீரீ மொழிந்தது.

**அன்னையின் ஆட்சி**

அதைக்கேட்டு மகிழ்ந்த மலயத்துவஜன் அதன்படியே "தடாதகை" எனப் பெயரிட்டான். பிள்ளை கிட்டிய மகிழ்ச்சியில் அனைவருக்கும் பரிசுகள் வழங்கி மகிழ்ந்தான். தடாதகைப் பிராட்டியும் கலை ஞானம் கல்லாமலே பாங்கினொடு உயர்ந்து பொருந்தியும், படைப்பயிற்சியும் பெற்று விளங்கினார். மலயத்துவஜ பாண்டியன் பிராட்டியாருக்கு ஒரு



ஆதிதிராவிடர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் அவர்கள் வழிபாடு செய்ய நல்ல முறையிலே கோவில்கள் அமையவில்லை என்று குறையைத் தீர்க்கும் பொருட்டு சென்ற 2004 - ஆம் ஆண்டு அப்பகுதிகளில் 6000 திருக்கோயில்களைச் சீரமைத்துப் புதுப்பிக்க சுமார் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.


- மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்.
**திருமிகு.பி.சி. இராமசாமி** அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து...

நன்னாளில் முடிசூட்டி மந்திரி சுமதி என்பவளை நியமித்து சுவர்க்கம் அடைந்தான். தடாதகைப் பிராட்டியும் அறநெறியை மேற்கொண்டு ஆட்சிநடத்தினார். அன்னையின் ஆட்சியில் அறம் கொலு வீற்றிருந்தது. செயல் திறம் சிறந்து விளங்கியது. அம்மை கன்னியாக இருந்து அரசு புரிந்தமையால் பாண்டி நாடு கன்னிநாடு என வழங்கலாயிற்று. மதுரையம்பதி கன்னிபுரம் எனப் பெயர் பெற்றது.

**திக்கு விஜயம்**

திருவருள் வடிவாக விளங்கும் பிராட்டியார் அருளாட்சி நடத்திக் கொண்டிருக்கும் நாளில் அவள்தாய் காஞ்சன மாலை மகளுக்குத் திருமணப் பருவம் வந்தும் மணம் இன்னும் நிறைவேறவில்லையே எனக் கவலையுற்றாள். அன்னையின் மனவருத்தம் அறிந்த பிராட்டியார் அன்னைக்கு ஆறுதல் கூறி, தான் திக்கு விஜயம் மேற்கொள்ள விருப்பதை எடுத்துரைத்தார். தாயின் ஆசிபெற்ற பிராட்டியார் திக்கு விஜயம் மேற்கொண்டார். நால்வகைச் சேனைகளையும், நாற்றிசையில் நடத்தி வெற்றித் திருமகளை மணந்தார். பின்பு இந்திரன் முதலாய அட்டதிக்குபாலர்களையும் வென்று சிறை கொண்டாள். இறுதியாக பரமசிவனையும் எதிர்க்க எண்ணி திருக்கயிலாய மலை அடைந்தாள். அன்னையின் வருகை அறிந்த காவலர்கள் திருநந்தி தேவரிடம் முறையிட அவர் பூதகணங்களோடு எதிர்க் கொண்டு தோல்வியுற்றார். இதனையறிந்த பெருமானும் படைக்கலங்களைப் புன்னகையோடு ஏந்திக் கொண்டு யுத்தகளம் அடைந்தார்.

பிராட்டியாரும், பிரானும் படைக்கலங்களோடு எதிர்த்தனர். பெருமான் பிராட்டியாரை புன்முறுவலோடு நோக்கிய பொழுது பிராட்டியாரின் கூடுதலான ஒரு தனம் மறைந்தது. அவரிடம் பெண்மைக் குணங்கள் குடி கொண்டன. பிராட்டியார்



## திருக்குட நீராட்டுவிழாவில் ஒரு சரித்திர சாதனை

*மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்றது முதல் கடந்த 4 ஆண்டு காலத்திற்குள் அதாவது 16.3.2005 வரை 2817 திருக்கோயில்களில் திருப்பணி செய்து திருக்குட நீராட்டு விழா நிகழ்த்தப் பெற்றுள்ளது.*

*21.3.2005 அன்று ஒரு நாள் மட்டும் 753 சிறிய, பெரிய திருக்கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது என்பதை இம்மாமன்றத்திற்குப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் இதுவரை ஒரே நாளில் கும்பாபிஷேகம் நடந்த சரித்திரமே இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்.*

*– மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்,*
*திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து.*



நாணம் கொண்டு தலைக்கவிந்து நின்றார். உடன் சென்ற சுமதி என்ற அமைச்சர் பிராட்டியாரிடத்து "இவரே உன் மணவாளன்" என்று அவரிடம் முன்பு அசரீரீ மொழிந்ததை எடுத்துக் கூறினார். சிவபிரான் பிராட்டியாரிடத்து "நீ எப்பொழுது திக்கு விஜயத்திற்காக மதுரையில் இருந்து புறப்பட்டாயோ, அப்பொழுதே நாமும் உன்னைத் தொடர்ந்தோம். எதிர் வரும் சோமவார நன்னாளில் மதுரையில் வந்து உன்னை மணப்போம். நீ மதுரை மீள்வாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

**மதுரை நகரம் விழாக் கோலம் கொள்ளல்**

பிராட்டியார் மதுரை மீண்டார். நிகழ்ந்ததை அறிந்த காஞ்சனமாலை பெரிதும் மகிழ்வுற்றாள். உடன் மந்திரிகளை அழைத்துத் திருமண ஏற்பாடுகளைக் கவனிக்கச் செய்தார். மந்திரிமார்கள் மதுரையை அலங்கரித்தனர். மணமுரசு முழங்கியது. மதுரை நகரமே விழாக்கோலம் பூண்டது. செய்தியறிந்த மதுரை நகர் மக்கள் மகிழ்ச்சியுற்றுத் தங்களது இல்லத் திருமணம் போல் தங்களது வீடுகளை அலங்கரித்தனர். திருமண மண்டபம் இரத்தினங்களால் இழைக்கப் பெற்று அழகு செய்யப்பட்டது. மணமக்கள் அமர இரத்தினங்களால் இழைக்கப்பெற்ற சிங்காசனம் தயார் செய்யப்பட்டது.

இவ்வாறு மதுரை நகரே எழில் கொண்டவேளையில் சிவபெருமான் பிராட்டியாரை திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு தான் அணிந்துள்ள சர்ப்ப ஆபரணங்கள் பொன் ஆபரணங்களாகவும், கொன்றை மாலை வேப்பம்பூ மாலையாகவும், புலித்தோலோடை பொன்னாடையாகவும், சடைமுடி இரத்தின முடியாகவும், தான் சுந்தரபாண்டியராகத் திருக் கோலம் தாங்கி மதுரை நகருக்கு எழுந்தருளினார்.

சுந்தர பாண்டியராகத் திருக்கோலம் தாங்கிய பெருமான் தேவாதி தேவர்களும், பூத கணங்களும், புடைச் சூழ திருமண மண்டபத்திற்கு எழுந்தருளினர். அவரின் திருக்கோலம் கண்டு மக்கள் மயங்கினர். அவரை காஞ்சன மாலை எதிர்கொண்டு வரவேற்றாள்.

திருமால் சிவபெருமானுடைய திருவடி களைப் பொன்செம்பு நீரினால் சுத்தம் செய்து சந்தனமும் மலரும் சாத்தித் தூபதீபம் காட்டினார்.

பிரமன் திருமண வேள்விசெய்ய, வேதமந்திரங்கள் முழங்கத் திருமால் சிவ பெருமானின் திருக்கரத்திலே பிராட்டியாரின் திருக்கரங்களை வைத்து பாணிக்கிரகம் செய்து, தாராதத்தமும் செய்து தாரை வார்த்துக் கொடுத்தார். பிறகு பெருமான் பிராட்டியாரின் திருக்கழுத்தில் திருமங்கல நாண் அணிவித்தார். திருமணம் நடைபெற்ற நிகழ்வு கண்ட மதுரை நகர் மக்கள் கண்இமையாது தேவர் ஒப்ப வீற்றிருந்தனர். திருமணக்கோலம் கொண்ட பிரானும் பிராட்டியாரும் கொண்ட எழிற்கோலத்தினையும் திருமண நிகழ்வுகளையும் பரஞ்சோதியார் தமது திருவிளையாடற் புராணத்தில் விவரிக்கின்றார். பின்பு இறைவரும் இறைவியும் திருமணத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் அருளாசி வழங்கினர். அனைவருக்கும் அவரவர்க்கு ஏற்ற பரிசுகள் நல்கினர்.


சுந்தரபாண்டியராகத் திருக்கோலம் கொண்ட பிரான் மதுரை நகரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். உலகத்தைக் காக்கும் அரசர்கள் உண்மைநிலை தெரியும் பொருட்டு சுந்தரபாண்டியராகத்திருக்கோலம் கொண்ட பெருமான் நகரத்தின் நடுவே நடுவூர் எண்ணும் நகர் அமைத்து அங்கே ஆலயம் அமைத்து 'இம்மையே நன்மை தருவார்' என்ற இறைநாமம் கொண்ட சிவலிங்கம் தாபித்து தம்மைத் தாமே பூசை செய்து உலகத்தவர்க்கு வழிகாட்டினார்.

மதுரையில் சித்திரைப் பெருவிழா 13 நாட்கள் சிறப்பாக நடைபெறும். இவ்வருடம் 12.4.05 முதல் 24.4.2005 வரை இவ்விழா நடைபெறுகின்றது.

★

சித்தாந்த கலாநிதி,
டாக்டர் கோமதி சூரியமூர்த்தி, மதுரை

# பூதம் தந்த புனித நூல்



நக்கீரர் கடைச்சங்க காலப் புலவர். இறையனார் அகப் பொருளுக்கு உரை கண்டவர். சோமசுந்தரக் கடவுளோடு வாதிட்ட பாவம் தொலைய தீர்த்த யாத்திரை செய்தார்.

இவர் ஒருநாள் திருப்பரங்குன்ற குளக்கரைக்கு வந்து அரச மரத்தடியில் அமர்ந்து சிவபூஜை செய்தார். அவ்வமயம் அரசமரத்திலிருந்து உதிர்ந்த ஒரு இலை, பாதி நீரிலும், பாதி தரையிலும் விழுந்தது. நீரில் விழுந்த பகுதி மீனாகவும், தரையில் விழுந்த பகுதி பறவையாகவும் மாறி ஒன்றையொன்று இழுத்தது.

நக்கீரர் அவ்விசித்திர காட்சியில் ஈடுபட்டுச் சிறிதுநேரம் சிவபூஜையில் தவறியதால் கற்கிமுகி என்னும் பூதம் அவரைப் பிடித்து மலைக்குகையில் சிறை வைத்தது. ஏற்கனவே அக்குகையில் 999 பேர் சிறைப்பட்டிருந்தனர். 1000 பேரானதும் அப்பூதம் அனைவரையும் ஒன்றாகச் சாப்பிடக் கருதி இருந்தது. இதை அறிந்த நக்கீரர் முருகப் பெருமானை உள்ளம் உருக திருமுருகாற்றுப்படையைப் பாடிப் போற்ற, முருகப்பெருமானின் வேல் குகையைப் பிளந்து பூதத்தைக் கொன்று அனைவரையும் விடுதலை செய்தது. பகழிக் கூத்தர் இந்நிகழ்ச்சியை,

**"ஏர்கொண்ட பொய்கைதனில் நிற்கும் ஒரு பேரரசின்**
**இலைகீழ் வீழில் பறவையாம்**
**இது நிற்க நீர் வீழில் கயலாம் இதன்றியோர்**
**இலையங்கும் இங்குமாகப்**
**பார்கொண்ட பாதியும் பறவை தானாக அப்**
**பாதியும் சேலதாகப்**
**பார் கொண்டிழுக்க அது நீர் கொண்டிழுக்க இப்**
**படிகண்டது அதிசயமென**
**நீர் கொண்ட வாவிதனில் நிற்கும் ஒரு பேழ்வாய்**
**நெடும்பூதம் அது கொண்டு போய்**
**நீள்வரை எடுத்ததன் கீழ் வைக்கும் அதுகண்டு**
**நீதிநூல் மங்காமலே**
**சீர்கொண்ட நக்கீரனைச் சிறை விடுத்தவா**
**செங்கீரை ஆடியருளே!**
**திரையெறியும் அலைவாய் உகந்த**
**வடிவேலனே**
**செங்கீரை ஆடி அருளே"**

என்று திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில் பாடியுள்ளார்.

**"பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்குமொரு கவிப்புலவன்**
**இசைக்கு உருகி வரைக் குகையை இடித்து வழிகாணும்"**

என்று அருணகிரிநாதரும் வேல்வகுப்பில் குறிப்பிடுகின்றார்.

நக்கீரர் இருந்து பூஜை செய்த இடம் சரவணப் பொய்கைக்கு அருகிலுள்ள பஞ்சாட்சரப்பாறை ஆகும். அதனருகில் நக்கீரருக்கு ஒரு ஆலயம் உள்ளது. நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியங்களுள் பத்துப்பாட்டுள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுள்ளது. மேலும் அந்நூல் சைவத்திருமுறைகளுள் பதினொன்றாம் திருமுறையில் தொகுக்கப்பட்ட சிறப்பும் கொண்டு விளங்குகின்றது. ★

# இறைதரிசனம்



"எழுத்துச் சித்தர்"
**பாலகுமாரன்**

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி என்னைவிட வயது சிறிய பள்ளித் தொழி. இப்போது ஐம்பத்தாறு வயதுடையவர். என்னிடம் புலம்பினார்.

தினந்தோறும் சமைத்துப் பாத்திரம் கழுவி, வீடு பெருக்கி, துணி உலர்த்தி, தூசு துடைத்து, வருவோர் போவோருக்குக் காப்பிபோட்டே காலம் கழிகிறதே! எனக்கு எந்த ஞானமும் வராதா? கடவுளை நான் அறிய முடியாதா? உயர்ந்த ஞானம் அடைய முடியாதா? உள்ளொளி பெருக்குவது என்பது எனக்கு நடக்கவே நடக்காதா?! கடைசிவரை நான் சமையல்காரிதானா? பாத்திரம் தேய்ப்பவள்தானா? காபி டம்ளர் கழுவும் சூழ்நிலையிலேயே சுருண்டு விழுந்து செத்துவிடுவேனா?

தினந்தோறும் சிவநாமம் ஜபிக்கிறேன். ராமநாமம் எழுதுகிறேன். முடிந்தபோதெல்லாம் கோயிலுக்குப் போகிறேன். எல்லாப் பண்டிகைகளையும் முறைப்படி கொண்டாடுகிறேன். ஆனாலும் எனக்கு எதுவும் தெரியவில்லை என்ற எண்ணமே அதிகமாக நிற்கிறது. எந்த முன்னேற்றமுமில்லாததற் குரியதாகவே நிற்கிறேன் என்பதே கவலையாக இருக்கிறது என்று கண்களில் நீர்விட்டுப் புலம்பினார். தொடர்ந்து அழுதார்.

நான் சமாதானப்படுத்தினேன். இந்தப் புலம்பல் கூட நல்ல ஆரம்பம் தான். எனக்கு இது கிடைக்கவில்லை என்று எண்ண ஆரம்பித்துவிட்டீர்களானால் இதுவே தேடலின் துவக்கம் தான். குடும்பத்தலைவியாய் இருப்பதால் தான் எனக்குக் கிடைக்கவில்லை என்று நீங்கள் பேசுவது தவறு! **"ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ"** என்பது தான் உண்மை. எல்லா உயிர்களிலும் வெளிப்படுகிறான் என்று சமாதானம் சொன்னேன்.

நான் அடுத்தவாரமே திருவாலங்காடு என்கிற தலத்திற்கு போகும்படியாய் நேர்ந்தது. கோவிலைச் சுற்றி வரும்போது அந்தக் கோயிலில் முக்தி அடைந்த காரைக்கால் அம்மையார் பற்றி யோசிக்க முடிந்தது.

காரைக்கால் என்கிற சிறிய கடற்பட்டினத்தில் தனவணிகர் குடும்பத்தில் பிறந்தவர் புனிதவதி. தனதத்தன் என்பவருக்கு மனைவியாகி நல்லபடி இல்லறம் நடத்தி வந்தவர். சிவன் மீதும் அடியார்கள் மீதும் பக்தி உள்ளவர். சிவனைப் பற்றி யார் சொன்னாலும் மனமுருகக் கேட்பார்.

புனிதவதியின் கணவர் ஒருநாள் தனக்கு அன்பளிப்பாகக் கிடைத்த இரண்டு பெரிய வாசனையுள்ள மாம்பழங்களை வேலையாள் மூலம் வீட்டிற்கு அனுப்பிப் பகல் நேர உணவிற்கு வந்து சாப்பிடுவதாகச் சொல்லியிருந்தார். கணவர் விரும்பிய மாம்பழங்களைப் புனிதவதியார் பத்திரப்படுத்தித் தொடர்ந்து சமையலில் ஈடுபட்டிருந்தார்.

சோறு வெந்து வடித்தாகிவிட்டது. வெஞ்சினமும், குழம்பும், ரசமும் தொடர்ந்து தயாராகிக் கொண்டிருந்தது. வாசலில் யாரோ அழைக்கும் சப்தம் கேட்டது.

முதியவராக திருநீறு பூசிய ஒரு சிவனடியார் தள்ளாடி நின்றிருந்தார். மெல்லிய, வாடிய குரலில் பேசினார்.


"அம்மா... நெடுந்தூரத்திலிருந்து வருகிறேன். இரண்டு நாளாய் உணவு உண்ணவில்லை. பசி காதை அடைக்கிறது. வீட்டு வாசலில் துவண்டு தூங்கிவிட்டேன். சோறு பொங்கும் வாசனை மூக்கைத் துளைத்தது."

"அம்மா... சிவன் பெயரால் கேட்கிறேன். தயவு செய்து சோறு போடுங்கள். இல்லையெனில் என் உயிர் இந்த உடம்பில் தங்காது" என்று அரற்றினார். திலகவதியார் பதைத்துப் பின் வாங்கினார்.

என்ன செய்வது என்று யோசித்தார்.

உடனடியாக அவரை நோக்கிக் கைக்கூப்பி "உள்ளே வாருங்கள்" என்று அழைத்தார். கால் கழுவ

## இறைவனைக் காணமுடியும்



*என் அருமைக் குழந்தைகளே!*
*உண்மையாகவே*
*இறைவனைக் காணமுடியும்.*
*நாம் எப்படி உட்கார்ந்து பேசிக்*
*கொண்டு இருக்கிறோமோ,*
*அது போலவே கடவுளைக் கண்டு அவரோடு பேச*
*முடியும். நான் இப்படிச்*
*சொல்வது வெறும் வார்த்தைகள் அல்ல,*
*சத்தியமான வார்த்தைகளே ஆகும்.*

**- இராமகிருஷ்ணப்பரமஅம்சர்**

ஜலமெடுத்து வைத்தார். முற்றத்தில் இரங்கி அவர் கால் கழுவிக் கைகழுவி முகம் கழுவிக் கொண்ட நேரத்தில் இலைபோட்டு சொம்பு நிறைய நீர் எடுத்து வைத்தாள். பானையிலிருந்து சோறு எடுத்து தட்டில் வைத்து ஆற்றினார். உள்ளே போய் தயிர் தோய்ந்து விட்டதா என்று பார்த்தார். பசுந்தயிர் நன்றாகத் தோய்ந்திருந்தது. இனிப்புவாசனை வீசியது.

சோறும் இருக்கிறது. இனிப்புத் தயிரும் இருக்கிறது. பசியார இது போதும். உள்ளிருக்கும் பசித்தீயை இது அணைத்து ஆசுவாசப்படுத்தும்.

இரண்டையும் எடுத்துக் கொண்டு அப்பெண்மணி கூடத்திற்கு வந்தார். இலைக்கருகே வைத்தார். முகம் கழுவிய அவர் நெற்றி நிறைய திருநீறு பூசி நமசிவாயம்... நமசிவாயம்.. நமசிவாயம்.. என்று உரக்கக் கூறிக் கொண்டே இலைஎதிரில் அமர்ந்தார்.



"அட மறந்து போனேனே. வெஞ்சினம் ஏதுமில்லையே. குழம்பு கொதித்துக் கொண்டிருக்கிறது. இனிமேல் தானே வாழைக்காயைப் புரட்டி எடுக்க வேண்டும்" புனிதவதியார் கவலைப்பட்டார்.

அடுக்களைக்கு ஓடினார். வேலையைத் துரிதப்படுத்தினார். மறுபடியும் வந்து கூடத்தில் சிவனடியாரைப் பார்த்தார்.

"அம்மா சோறு போடுங்கள். சோறு பார்த்ததும் உமிழ்நீர் சுரந்து பசிவேகம் அதிகமாகிவிட்டது. ஜீரம் வந்ததுபோல் உடம்பு நடுங்குகிறது. தயவு செய்து சீக்கிரம் சோறுபோடுங்கள்."

அவர் கைகூப்பி இறைஞ்சினார். நமச்சிவாயம்.. நமச்சிவாயம் என்று உரக்கக் கூவினார்.

அவர் குரலில் பசி இருந்தது. புனிதவதியார் மனம் பதறினார். ஒரு மனிதரைக் கூடத்தில் பசிக்கவைத்துவிட்டு அடுப்பில் உட்கார்ந்து காய் பிரட்டுவது எப்படி?

ஆபத்திற்குப் பாவமில்லை.

ஓடிப்போய் கணவர் அனுப்பி வைத்திருந்த மாங்கனி இரண்டில் ஒன்று எடுத்துவந்து இலையிலிட்டார். சோறு கவிழ்த்தார். தயிர் ஊற்றினார். உண்ணுங்கள் என்று வேண்டினார். விசிறி எடுத்து விசிறத் துவங்கினார்.

மாம்பழத்தின் வாசனை அந்தக் கூடம் முழுவதும் வீசிற்று.

இறைவனுக்கு நன்றி சொல்லிய சிவனடியார் மாம்பழத்தை வாயிலிட்டுக் கடித்து உறிஞ்சி ருசித்தார். சில நிமிடங்களில் சோறு முழுவதையும் தயிரில் பிசைந்து ஆசைதீர உண்டார். பெரிதாய் ஏப்பம் விட்டார். கைகழுவினார்.

புனிதவதிக்கும், சிவனுக்கும் நன்றிகூறி விடைபெற்றார். புனிதவதியார் மனம் நிரம்பியவராகத் தொடர்ந்து சமையலில் ஈடுபட்டார். எல்லாவித உணவு வகைகளும் தயாராயின. புருஷன் வர இலையிலிட்டு நீர் தெளித்து மனைபோட்டு அவரை உண்ண அழைத்தார்.

புருஷன் வந்து உட்கார்ந்ததும் "மாம்பழம் எங்கே?" என்று தான் கேட்டான்.

புனிதவதியாருக்கு திடுக்கென்று இருந்தது. இருப்பினும் சாமாளித்துக்கொண்டு மீதியிருந்த ஒரு மாம்பழத்தைக் கொண்டு வந்து இலையில் வைத்து உணவு பரிமாறினார். மறுபடியும் மாம்பழ வாசனை கூடம் முழுவதும் நிரம்பியது. வாசனையால் கவரப்பட்ட புனிதவதியாரின் புருஷன் மாம்பழத்தை ஆவலாகக் கையில் ஏந்திக் கடிக்க உண்ணும் சோறு வேகமாக இறங்கியது.

"ருசியான பழம். அற்புதமான சுவை!. இரண்டு கொடுத்தேனே!, இன்னொன்று இருக்குமே! அதையும் கொண்டுவா. குழம்பு சோறோடு மாம்பழம் சாப்பிடுவதை விட தயிர் சாதத்தோடு மாம்பழம் சாப்பிடுவது இன்னும் சுவையாக இருக்கும். இன்னொன்றும் கொண்ட வா."

ஆவலாகக் கேட்டான்.

புனிதவதியார் மனம் சோர்ந்தார். "இறைவா! இது என்ன சோதனை. ஒரு சிவனடியாரைக் காக்க வைக்கக்கூடாது. அவமதிக்கக் கூடாது என்று பழமிட்டேன். பசி தீர்க்கத்தானே சோறும் தயிரும் பரிமாறினேன். என்னை இப்படி இக்கட்டான நிலையில் நிற்கவைத்து விட்டாயே! என் புருஷன் எரிந்து விழுந்தால் என்ன செய்வது? தவறு என்றுகடிந்து கொண்டால் என்னாகும்.? எனக்கென்று கொடுத்த பழங்களை யாருக்கோ வழங்கிவிட்டாயே என்று கூச்சலிட்டால் எப்படி ஏற்பது? இது மிகப் பெரிய அவமானமல்லவா! எனக்கு இந்தச் சோதனை தேவைதானா? உன் அடியாருக்கு இரங்கியது பாவமா? சிவனே! என் சிவனே! நான் என்ன செய்வேன்" என்று புலம்பினார்.

வானம் நோக்கி கையேந்தினார். சட்டென்று ஒரு பழம் அவர் கைகளில் வந்து விழுந்தது. அதே

அளவான பெரிய மாம்பழம். வாசனை கூடுதலாக இருந்தது. வாசனையில் தூண்டப்பட்ட புனிதவதியாரின் புருஷன் அந்தப் பழத்தைச் சுவைத்து உண்டான்.

"அற்புதம்... அற்புதம்... அந்தப் பழத்தைவிட இந்தப் பழம் இன்னும் சுவையாக இருக்கிறது. இன்னும் வாசனையாக இருக்கிறது. இன்னும் சதைப்பற்றாக இருக்கிறது. இது எப்படி?"

வியப்போடு வினவினான்.

புனிதவதியார் இதற்குமேல் எதையும் மறைக்க விரும்பாதவராக, "இது இறைவன் கொடுத்தபழம்" என்று சொன்னார்.

"என்ன. இறைவன் கொடுத்த பழமா? என்னாயிற்று உனக்கு?" என்று வினவினான்.

புனிதவதியார் மொத்தவிவரமும் புருஷனுக்குச் சொல்ல புருஷன் திகைத்தான். "கையேந்திக் கடவுளைக் கேட்டால் கடவுள் மாம்பழத்தைக் கொடுப்பாரா? எங்கே மறுபடியும் கேள்." புருஷன் மறுபடியும் கேட்க கட்டளையிட்டான்.

புனிதவதியார் தயங்கினார்.

புருஷன் வற்புறுத்தினான். புனிதவதியார் கையேந்தி "என் புருஷன் காண ஒரு பழம் கொடு" என்று சிவனிடம் கேட்க, மறுபடியும் கையில் கனி வந்து விழுந்தது. புனிதவதியாரின் புருஷன் பயந்துபோய் கை உதறி எழுந்திருந்தான்.

"ஆச்சரியம்.,... எவ்வளவு மகத்தான சக்தி. கடவுளோடு என் மனைவியால் பேசமுடிகிறதே! அவரிடம் கேட்க முடிகிறேதே! இவர் கேட்டால் கடவுள் கொடுக்கிறாரே!" என்று வியந்தான். இவளோடு எப்படிக் குடித்தனம் செய்வது? தயங்கினான், வெளியேறினான். காணாமற்போனான்.

சில வருடங்கள் கழித்து வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து அந்தப் பெண்ணிற்குப் பிறந்த பெண் குழந்தையை அழைத்துக் கொண்டு வந்து புனிதவதியார் முன்பு நிறுத்தினான்.

"என்னை மன்னித்துக் கொள்ளம்மா. நான் வேறு திருமணம் செய்து கொண்டு விட்டேன். இவள் எங்களுக்குப் பிறந்த குழந்தை. இவளுக்குப் புனிதவதி என்று பெயரிட்டிருக்கிறேன். இறைவனோடு பேசுகின்ற பெண்ணோடு நான் எப்படி குடித்தனம் செய்து கொள்ள முடியும்? எப்படி ஏவல் இடமுடியும்? நான் சாதாரண வியாபாரி. வெறும் புருஷன். ஏதேனும் தீங்கு செய்திருந்தால் தயவு செய்து மன்னித்துவிடு. என்னையும், என் மனைவியையும், என் குழந்தையையும் ஆசீர்வாதம் செய்" என்று காலில் விழ எத்தனிக்க புனிதவதியார் விலகிக் குழந்தையை ஆசீர்வதித்துத் தன் நகைகள் முழுவதையும் அந்தக் குழந்தைக்கு வழங்கினார்.

"சிவனே! நல்லதாயிற்று. என் புருஷனுக்காக ஏற்பட்ட இந்த என் உடல் சதைத் தொகுதியை கரைத்து என்னைப் பேயுருவாக்கு! எப்போதும் உன்னையே நினைக்கும் எண்ணம் கொடு" என்று வேண்டினார். உருமாறினார். சிவனைத் தேடி கயிலாயம் போனார். நடக்க முடியவில்லை. கைகளினால் ஊர்ந்தும், முதுகு தேய நகர்ந்தும் கயிலாயத்தில் ஏறினார்.

"என்ன இது ஒரு எலும்புக்கூடு வருகிறதே" என்று அனைவரும் திகைத்தார்கள்.

**"வருபவர் நம்மைப் பேணும் அம்மைகாண்"** என்று சிவன் அவர்களைச் சமாதானப்படுத்தினார்

உன் நடனம் காணவந்திருக்கிறேன் என்று சொல்லிய அம்மையை திருஆலங்காட்டிற்குப் போகுமாறு பணித்தார். "அங்கே நடனம் காட்டுகிறேன்" என்றார்.

ஒரு சாதாரண குடும்பத்தில் மிகச் சாதாரணப் பெண்ணாக இருந்த புனிதவதியாருக்கு மிகப்பெரிய பேறு கிடைத்தது.

இறைதரிசனம் என்பது படித்த மேதைகளுக்கும், பண்பட்ட தவநெறியார்களுக்கு மட்டுமே என்பது இல்லை. எந்த எதிர்பார்ப்பும் இல்லாது அமைதியாய் இருப்பவருக்குள் இறை தரிசனம் நிகழ்ந்து விடுகிறது.

இதை என்னுடைய பள்ளித் தோழிக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் சொல்லிக் கொள்ள இங்கே கட்டுரையாக்கினேன். ★

# திருமகள் வழிபட்ட திருத்தலம்



திரு - திருமகள்

ஆ - காமதேனு

இனன் - சூரியன்

கு - பூமிதேவி

டி - அக்கினி

இவர்களால் பூசிக்கப்பட்ட திருத்தலம் என்பதால் பழநிக்குத் திருஆவினன்குடி என்பது திருப்பெயர் ஆகும்.

திருஆவினன்குடி திருக்கோயிலில் இந்த ஐவருக்குத் தனித்தனி சன்னதிகள் உள்ளன.


**வே**தத்துக்குப் பொருள் அருளிச் செய்த படலம்

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களும் ஒரு காலத்தில் தம் தம் நிலையிலிருந்தும் பிறழ்ந்தன. பதினான்கு உலகங்களும் அடங்கின. பின்னர் சிவபெருமான் திருமுன்னர் யாவும் தோன்றின. இறைவன் திருவாக்கில் இருந்து பிரணவம் தோன்றியது. அதிலிருந்து வேதங்கள் தோன்றின. கண்ணுவர் முதலிய முனிவர்கள் வேதங்களின் உட்பொருளை அறியமுடியாமல் மயங்கி இருந்தனர்.

கண்ணுவர் முதலிய முனிவர்கள் அரபத்தரை வணங்கி விடைபெற்று மதுரையை அடைந்தனர். பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி, இறைவனை அடைந்து வணங்கி, "இறைவா! வேதத்தின் உட்பொருளை உணராது தவிக்கும் எங்களுக்குத் தாங்களே வேதங்களுக்குப் பொருளாக நின்றருளினீர்" என்று வணங்கினர். உமையம்மையையும் வழிபட்டனர். இவ்வாறு அம்முனிவர்கள் கார்த்திகை பௌர்ணமி முதல் அடுத்த ஆண்டு கார்த்திகை பௌர்ணமி வரை ஓராண்டுப் பூசை செய்து வழிபட்டு வந்தார்கள்.

# திருவிளையாடல் புராணம்

**இரா. அரங்கசாமி**



அப்போது அரபத்தர் என்ற முனிவர் அங்கு வந்தார். முனிவர்கள் அரபத்தரை வரவேற்று உபசரித்தனர். அம்முனிவரிடம், "சிவபெருமான் அருளிச் செய்த வேதங்களைப் பயின்றோம். ஆனால் அதன் உட்பொருளை உணர முடியவில்லை. அதை உணர்த்தும் குருவும் கிடைக்கப் பெற்றிலோம். இதற்குத் தக்க யோசனை யாது?" என்று கேட்டனர்.

அதற்கு அரபத்தர் "முனிவர்களே! வேதத்தை அருளிச் செய்த சிவபெருமானே குருவாக வந்து அவ்வேதத்தின் பொருளை உணர்த்த வேண்டும்" என்றார். அத்துடன் "மதுரை மாநகரில் எழுந்தருளியிருக்கும் தட்சிணாமூர்த்தியே உங்களுக்கு வேதத்தின் உட்பொருளை உணர்த்தி அருளுவார். நீங்கள் அங்குச் சென்று தவம் செய்யுங்கள்" என்றும் கூறியருளினார்.

இதன் விளைவாக, தட்சிணாமூர்த்தியாகிய இறைவன் முப்பத்திரண்டு இலட்சணமும் பொருந்திய பதினாறு வயது உடையவராய் பிராமண குரு வடிவம் கொண்டு எழுந்தருளி வந்தார். அவர் கையில் "சிவஞானபோதம்" என்ற நூல் இருந்தது.

முனிவர்கள் அவரை வணங்கி "நாங்கள் உய்யும் பொருட்டு வேதங்களின் பொருளைத் தாங்கள் இப்பொழுது உபதேசித்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தனர்.


உடனே குருவானவர் அம்முனிவர்களுக்கு வேதங்களின் உட்பொருளை அருளிச் செய்யத் தொடங்கினார்.

சிவலிங்கமும் வேதமும் வேறல்ல என்பதையும், பிரணவத் தோற்றம், வேதாகமங்களின் உற்பத்தி, ஞானகாண்டம்,

## ஸ்ரீ கள்ளழகர் ஆற்றில் இறங்குவது ஏன்?

*ஸ்ரீ கள்ளழகர் வைகையாற்றில் இறங்கி, வண்டியூர் சென்று தன் அழகர் மலைக்குத் திரும்பும் வைபவம் சைவ – வைணவ மதங்களை இணைக்கும் அரிய வைபவம் ஆகும். மீனாட்சித் திருக்கல்யாணத்தைக் கேள்விப்பட்டு ஸ்ரீ அழகர் கள்ளழகர் திருக்கோலத்துடன் மதுரையை நோக்கி வருகிறார். வழியில் பல மண்டபங்களில் தங்கி அவர் தல்லாகுளத்தில் உள்ள பெருமாள் கோயிலை அடைகிறார். இந்த சேவையைப் பார்ப்பதற்கும், அழகரை எதிர்கொள்வதற்கும் மதுரைமக்கள் திரண்டுவரும் காட்சி ஸ்ரீ கள்ளழகர் எதிர்சேவை எனப்படும்.*

*சித்ரா பௌர்ணமி விடியற்காலையில் அழகர் குதிரை வாகனத்தில் புறப்பட்டு வைகையை நோக்கிச் செல்கிறார். புறப்படும் முன்பு ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வரும் ஆண்டாள் சூடிய மாலையை தரித்துக் கொள்கிறார். ஸ்ரீ அழகர் ஆற்றுக்குச் செல்லும் போது முதலில் வெட்டிவேர் சம்பரத்திலும், பிறகு ஆயிரம் பொன் சம்பரத்திலும் எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.*
*வைகை ஆற்றில் ஸ்ரீகள்ளழகர் எழுந்தருளியதும் மதுரை ஸ்ரீ வீரராகவ பெருமாள் இவரை எதிர்கொண்டு அழைக்கிறார். இவ்வைபவம் அழகர் ஆற்றில் இறங்குதல் என்று சொல்லப்படுகிறது. இதைக் காண லட்சக்கணக்கான மக்கள் திரண்டுவருவது கண்கொள்ளாக் காட்சியாகும். மண்டூக மகரிஷிக்குக் சாபவிமோசனம் அளிக்கவே ஸ்ரீ கள்ளழகர் ஆற்றில் இறங்குவதாகச் சொல்லப்படுகிறது.*



கருமகாண்டம், வைதிகம், சைவம், வீடுபேறு ஆகியவற்றையும் அவர்கட்கு உபதேசித்தருளினார்.

**மாணிக்கம் விற்ற படலம்**

வீரபாண்டிய மன்னனுக்குப் பல போகங்களும் விளைகின்ற நிலங்கள் நிறைந்திருந்தன. தனது குலமனைவியின் மூலம் வீரபாண்டிய மன்னனுக்கு ஒரு குழந்தை கூடப் பிறக்கவில்லை. வீரபாண்டியனும் அவனது மனைவியும் சோமசுந்தரப் பெருமானைத் துதித்துப் பலவிதமான விரதங்களையும் முறையாய்க் கடைப்பிடித்து வந்தார்கள். அதன் விளைவாக அரசியின் வயிற்றில் ஈசனருளால் சற்புத்திரன் ஒருவன் தோன்றினான்.

அச்செல்வன் அழகுற வளர்ந்து வரும் காலத்தில் வீரபாண்டியன் ஒருநாள் வேட்டைக்குச் சென்றான். அங்குப் புலிக்கு இரையாகி உயிர் நீத்தான். நகரமக்கள் அச் செய்தி அறிந்து துன்பமடைந்தனர். அதுவே தக்க நேரமாகக் கருதிய வீரபாண்டியனின் நெருங்கிய உறவினர் சிலர் யானை, குதிரை முதலானவற்றையும் பொன் ஆபரணங்களையும், மணிமகுடத்தையும் கவர்ந்து சென்றுவிட்டனர். அரசிளங்குமரன் விண்ணுலகு அடைந்த வீரபாண்டியனுக்குச் செய்ய வேண்டிய ஈமக் கடன்கள் அனைத்தையும் செய்தான்.

பிறகு பாண்டியநாட்டு அமைச்சர்கள் வீரபாண்டியனின் மைந்தனுக்கு முடிசூட்டுவதற்கு விரும்பினார்கள். பொக்கிஷத்தில் ஒன்றுமில்லை. திகைத்தார்கள். இதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசித்தார்கள். இறைவனின் திருவருளையும் அறிந்து கொள்வோம் என்று, அரசிளங்குமரனையும் தம்முடன் அழைத்துக் கொண்டு மதுரைத் திருக்கோயிலின் திருக்கோபுரவாயிலை அடைந்தனர்.

அங்குச் சோமசுந்தரக்கடவுள் இடையில் கோவணம் திகழவும், பிடரியின் மேல் ஒளிவீசும் இரத்தினப் பொதி மூட்டை தொங்கவும், தோளின் மேல் விலையுயர்ந்த வாகுவளையம் விளங்கவும், பூணூல் புரளவும், மார்பில் இரத்தின மணிமாலை திகழவும் ஒரு இரத்தின வியாபாரியைப் போல வேடந்தாங்கி வந்தருளினார். அங்கு வந்த அமைச்சர் முதலானவர்களை நோக்கி "நீங்கள் கவலை கொண்ட மனத்தினராய் வரும் செய்தி யாது?" என்று வினவினார்.

மந்திரிகள் முன் நிகழ்ந்ததைக் கூறினர். அதைக் கேட்ட இறைவராகிய வணிகர் "நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். என்னிடம் நவரத்தினங்கள் உள்ளன. அவற்றைக் காட்டுகிறேன் பாருங்கள். அவை பலகோடி விலையுள்ளவை" என்று ஒரு ரத்தினக்கம்பளத்தை விரித்தார்.

அக்கம்பளத்தில் எட்டுத் திசைகளிலும் முத்து முதலிய எட்டு மணிகளை எடுத்து வைத்தார். இம்மணிகள் வலன் என்னும் அசுரனின் உடற்கூறுகள் என்றார். உடனே அமைச்சர்கள் "அவ்வலன் என்பவன் யார்? அவன் உடல் மணிகள் ஆயினமை எப்படி?" என்று கேட்டனர்.

அந்த வணிகர், அமைச்சர்களிடம் அந்த வலனின் வரலாற்றைச் சொல்லத் தொடங்கினார்.

"வலன் என்பவன் ஓர் அசுரன். அவன் சிவபெருமானை வேண்டி, போரின்கண்

யாவராலும் பிளவுபடாத வரம் வேண்டும், அவ்வாறு இன்றி ஊழ்வினையால் இறந்தால் உடல் உறுப்புகள் நவரத்தினங்களாக வேண்டும்" என்று வேண்டி வரம் பெற்றான்.

உடனே வலன் இந்திர உலகம் சென்றான். இந்திரனை வென்றான். இந்திரன் ஒரு சூழ்ச்சி செய்து வலனைக் கொல்ல வேண்டும் என்று கருதினான். தேவர்களை அழைத்துக் கொண்டு வலனை அடைந்தான். அவன் வலனிடம், "இறவாத புகழ் பெற்றவனே! வெற்றிமிக்கவனே! உன் தோள்வலியும், புகழும் எட்டுத்திசைகளிலும் பரவியுள்ளது. அப்புகழ்ச்சியைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். உனக்கு வேண்டிய வரம் யாது? அதனைக் கேள்" என்றான்.

இந்திரன் கூறியதைக் கேட்ட வலன் இருகைகளையும் தட்டி ஆரவாரம் செய்து நகைத்தான். "சிவபெருமான் எனக்கு அருள் செய்த வரங்கள் இருக்கவும், வேறு வரம் எனக்கு எதற்கு? என்னிடம் உனக்கு வேண்டிய வரம் யாது? கேள் தருகிறேன்" என்று கூறினான்.

அப்போது இந்திரன் மகிழ்ச்சி அடைந்தான். "நன்று வலனே! நான் சிவபெருமான் எழுந்தருளியுள்ள வெள்ளிமலைச் சாரலில் ஒரு வேள்வியைச் செய்வேன். அப்போது தேவர்களுக்கு அவியூட்ட ஒரு பசுவாகி வர வேண்டும்" என்றான். அதைக் கேட்ட வலாசூரன் அவ்வாறே வருவேன் என்று கூறினான்.

அதன்படியே இந்திரன் வேள்வி செய்ய, வலன் வேள்விப் பசுவாகி இந்திரனை அடைந்தான். வேள்விப் பசுவாகி வந்து நின்ற அவனை தேவர்கள் கொன்றனர். இறந்து போனவன் சத்தியலோகம் அடைந்தான். இந்திரன் வலனின் உடலைத் தீயில் இட்டுத் தேவர்களுக்கு உண்பித்து வேள்வியைச் செய்து முடித்தான்.

"வேள்விப் பசுவாய் வந்த வலனின் இரத்தம் மாணிக்கம், பற்கள் முத்து, மயிர் வயிடூரியம், எலும்பு வயிரம், பித்தம் மரகதம், நிணம் கோமேதகம், தசை பவளம், கண்கள் நீலம், கோழை புருடராகம் எனத் தோன்றிற்று" என்று இறைவன் வலன் வரலாற்றைக் கூறி, நவமணிகள் தோன்றிய இடங்களையும், அவற்றின் நிறங்களையும், சாதிகளையும், குணங்களையும், குற்றங்களையும், உடலில் அணிபவர் அடையும் பயன்களையும் கூறி முடித்தார்.

பின்னர் அவர் வடக்குத் திசையினை நோக்கி இருந்து மணிகளைக் கையில் எடுத்து "இவ்வரசிளங்குமரனுக்கு நிறைந்த செல்வமும், நீண்ட வாழ்நாளும் அமைக" என்று வாழ்த்தி வழங்கினார். அரச குமாரனும் சொக்கலிங்கப் பெருமானைப் பணிந்து அம்மணிகளைக் கையில் வாங்கினான்.

அப்போது வணிகராக வந்த சோமசுந்தரக் கடவுள் இவ்வொன்பான் மணிகளைக் கொண்டு மணிமகுடம் செய்து சூட்டி இக்குமரனுக்கு "அபிடேக பாண்டியன்" என்று பெயரிட்டு அழைப்பீராக என்றார். இவ்வாறு கூறியவுடன் அவ்வணிகேசராகிய இறைவர் மறைந்தருளினார்.

இப்பூமியில் வணிகராய் வந்தவர் இறைவரே என்று அமைச்சர்கள் உணர்ந்தனர். உடனே சோமசுந்தரக் கடவுள் திருமுன்னர் சென்று அரசகுமாரன் விழுந்து வணங்கினான். சான்றோர் அவனை வாழ்த்தினர். மக்கள் ஆசி கூற அரசிளங்குமரன் அரண்மனை அடைந்தான்.

பின், நவமணிகளைக் கொடுத்து மணிமகுடம் செய்தனர். நல்லநாளில் அரசிளங்குமரனுக்கு முடிசூட்டி "அபிடேக பாண்டியன்" எனப் பெயரிட்டனர். அபிடேக பாண்டியன் நகர்வலம் வந்து இறைவனை வணங்கி அரண்மனை அடைந்தான். அவன் பகைவர்களை வென்றுநீண்ட நாள் உலகாண்டான்.

**(தொடரும்...)**

நன்றி : இராமலிங்கர் பணி மன்றம், சென்னை.

## சைவமும், வைணவமும் ஒன்று




16 மாகாணங்கள் சுற்றியிருக்கின்றேன். கடல்கடந்தும் பல நாடுகள் சென்றிருக்கிறேன். இதுவரை நான் ஒரே பக்கமுள்ள காகிதத்தைக் கண்டேனில்லை.

ஒரே பக்கமுள்ள காகிதம் எங்காகிலும் இருக்க முடியுமா? எத்துணை மெல்லிய கடிதமாய் இருப்பினும் அதற்கும் இருபக்கங்கள் இருந்தே தீரும். அதைப் போல ஒரே கடவுளுக்கு இருபக்கங்கள்.

ஒன்று - சிவம்

ஒன்று - விஷ்ணு

**- அருளரசு டாக்டர்**
**திருமுருக கிருபானந்தவாரியார்**



# இராமாயண காலத்தில் தேவ விமானம்

கலைமாமணி **மா. இலட்சுமணன்**

**பா**ரத மண்ணிலே பிறந்தவர்கள் குறிப்பாக மஹாபாரதத்தையும் - இராமாயணத்தையும் படிக்க வேண்டும். இவைகளில் கூறப்பட்டுள்ள நீதி நியாயங்கள் எத்தன்மையுடையது என்பதை முழுமையாக அறிய வேண்டும்.

புராணத்தைப் பழமை புராதன கற்பனை என்று ஒதுக்கக் கூடாது. வைரத்தில் எல்லாப்பட்டைகளும் ஒளி வீசுவது போல இவைகளில் எல்லாப் பகுதிகளுமே தர்மத்தை சத்தியத்தை நேர்மையை வலியுறுத்துபவை.

அரியணை ஏறி ஆட்சிபுரிபவர்க்கு எனச் சில சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அரசு ஆள்வோன் தனியனாக சிம்மாசனத்தில் அமரக் கூடாது.

அரசியாருடன் தான் அமர வேண்டும். யாகம் நடத்தும் போது கூட துணைவியாருடன்தான் யாகம் நடத்த வேண்டும். இது தான் மரபு. அரசியார் தவறிவிட்டால் மகனுக்கு இளவரசு பட்டம் சூட்டி மணமானபின் அரியணை ஏற்ற வேண்டும்.

மக்களுக்காகத் தான் சட்டம் என்றில்லை. மன்னனுக்கும் சட்டம் உண்டு. யுத்த தர்மம் கூட அப்படித்தான். கதிரவன் மறைந்து விட்டால் யுத்தம் தொடரக்கூடாது. நிறுத்தப்பட்டு மீண்டும் உதயத்துக்குப் பின்தான் தொடர வேண்டும்.

இராமாயணத்திலே சீதை "களங்காண்படலம்" என்று ஒன்று உண்டு. எந்தக்களத்தை எப்போது, ஏன் கண்டார்? என்ற விவரம் பலர் அறியாத ஒன்று.

இராவணனால் கடத்தப்பட்டு இலங்கையிலே அசோகவனத்திலே சிறை வைக்கப்பட்டாள் சீதை. மாற்றான் மனைவி என அறிந்தும் அவள் மீது மையல் கொண்டான் இலங்கை வேந்தன்.

நீதி நெறியறிந்தோர் பலர் எடுத்துக் கூறியும் அவன் திருந்தவில்லை. அதற்காக ஒரு துளியும் அவன் வருந்தவில்லை. செய்தியறிந்த இராமன் -இலக்குவனின் உதவியோடும் வானரங்களின் துணையோடும் போர் தொடுத்தான்.

இராமபிரானுக்குத் துணையாக நின்றவர்கள், அனுமன், சுக்ரீவன், அங்கதன், நீலன், இடபன், குமுதன், மயிந்தன், பனசன், துமிந்தன், கேசரி, இவர்களனைவரும் வல்லமைமிக்க போர்வீரர்கள், மலைகள் அதிரப் போர்புரிபவர்கள், மாபெரும் விருட்ஷங்களை வேருடன் பிடுங்கி எறிந்து சண்டை செய்பவர்கள். இவர்களை நொடிப்பொழுதில் தனது அஸ்திரங்களால் இந்திரஜித் அழித்துக் கொண்டிருந்தான்.

இலக்குவன் தனது முழுபலத்தையும் பிரயோகிக்க வேண்டுமென விபீஷணன் கேட்டுக்கொண்டான். இந்திரஜித்துக்கும் இலக்குவனனுக்கும் போர் மூண்டது. நாகாஸ்திரத்தை ஏவினான் இந்திரஜித்து.

இலக்குவன் அனுமன் பலரும் மயங்கி விழுந்தனர் களத்திலே.

அப்போது இராமனில்லை. அஸ்திர பூஜை செய்ய பாடி வீட்டுக்கு சென்றிருந்தான்.

விபீஷணன் மூலம் செய்தி கேட்டுக் களத்துக்கு ஓடி வந்தான் இராமன். அப்போது இரவு நேரம், களத்திலே பலரும் மாண்டு கிடந்தனர். இலக்குவனும், அனுமனும், சுக்ரீவனும் மாண்டு கிடப்பதாக எண்ணினான் இராமன். இந்த அதிர்ச்சியில் மயங்கி விழுந்தான்.

இராமன் உட்பட அனைவரும் மயங்கிக் கிடப்பதாக இராவணனுக்குச் செய்தி எட்டியது. "அசோகவனத்திலுள்ள சீதையை தேவவிமானத்தில் அழைத்துப் போய் அந்தக் காட்சியைக் காட்டுங்கள். இனி வேறு வழியில்லையென மனம் மாறி என்னையடைவாள்" என்று கூறித் திரிசடையை அனுப்பி வைத்தான் இலங்கைக்கு அதிபன்! அசோக வனத்திலே திரிசடைமட்டும் நம்பிக்கைக்கு உரியவளாக விளங்கியதால் எங்கே போகிறோம், ஏன் போகிறோம் எனக் கேட்காமல் அவளுடன் தேவ விமானத்தில் புறப்பட்டாள் சீதை. களத்திலே அவள் கண்ட காட்சி சீதையை அதிரவைத்தது; கதறினாள்.

"அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வராதீர்கள். அவர்கள் அனைவரும் மயக்க நிலையில் உள்ளனர். ஜீவகளையுடன் காணப்படுகிறார்கள். அது மட்டுமல்ல, அமங்கலிகளை இந்த தேவ விமானம் ஏற்றிக் கொள்ளாது. நீங்கள் இதிலே தான் வந்தீர்கள். இதிலேயே திரும்பப் போகிறீர்கள்" எனத் தேற்றி சீதாப்பிராட்டியை அசோக வனத்துக்கு அழைத்துப் போனாள் திரிசடை.....

சீதையின் நம்பிக்கை இராமனை வெற்றி பெற வைத்தது. ★

# கலெக்டர் ரோஸ்பீட்டர் மதுரை மீனாட்சிக்கு வழங்கிய காணிக்கைப் பொருட்கள்

19ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவராகத் திழ்ந்தவர் ரோஸ்பீட்டர்.

ஆங்கிலோ கிருத்தவரான இவர், நீதி தவறாமல் நேர்மையான முறையில் மக்கள் நலங்கருதியே ஆட்சி செய்து வந்தபடியால் மக்கள் இவரைப் பாசத்துடன் "பீட்டர் பாண்டியன்" என்றே அழைத்து வந்துள்ளார்கள்.

பிறப்பால் கிருத்துவர் ஆன போதிலும் இவருக்கு அன்னை மீனாட்சியின் பால் அளவு கடந்த பக்தி இருந்துள்ளது.

நாள்தோறும் நான்கு மாட வீதிகளை வலம் வந்து மானசிகமாக அன்னை மீனாட்சியை வழிபடுவதையும் தம் கடமையாகக் கொண்டு வாழ்ந்துள்ளார் இவர்.

ஒருநாள் நள்ளிரவு. இடி மின்னலுடன் பெருமழை பெய்து கொண்டு இருந்துள்ளது.

ரோஸ்பீட்டர் தம் மாளிகையின் மாடியில் ஒரு கட்டிலில் அயர்ந்து உறங்கிக் கொண்டு இருந்தார்.

அப்போது ஒரு சிறுமி துரையின் கட்டில் அருகே வந்து, கையைத் தட்டி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ஆட்சியாளரை எழுப்பிவிட்டு மிக விரைவில் கீழே இறங்கி ஓடினாள்.

ரோஸ்பீட்டரும் திடுக்கிட்டெழுந்து சிறுமியைப் பின் தொடர்ந்து கட்டிடத்திற்கு வெளியே ஓடினார்.

அவர் தம் கட்டிடத்தை விட்டு வெளியே வந்த அடுத்த விநாடியிலேயே அக்கட்டிடம் இடிந்து விழுந்து, அவர் படுத்திருந்த மாடிக் கட்டிடம் சரிந்து தரைமட்டம் ஆனது.

இவர் படுத்திருந்த கட்டிலும் முறிந்து நொறுங்கிப் போனது.

தன்னைத் தட்டி எழுப்பிய சிறுமி, கோயில் கோபுரத்துக்குள் நுழைவது அவருடைய கண்களுக்குத் தெரிந்தது.

மதுரை மீனாட்சியே தன்னைக் காப்பாற்றியதைத் தெரிந்து கொண்ட ரோஸ்பீட்டர் அன்னை மீனாட்சிக்குத் தன் காணிக்கையைச் செலுத்த விரும்பினார்.




28 தோலா எடையில் 412 சிவப்புக் கற்களும், 80 பச்சை வைரமும், 72 மரகதக் கற்களும், நான்கு முத்தும், நான்கு நீலமும், நான்கு வைடூரிமும் பதிக்கப் பெற்ற இரண்டு மிதியடிகளைச் செய்து அன்னையின் இரு திருவடிகளையும் தாங்கும் வண்ணம் செய்து காணிக்கை அளித்துள்ளார்.

அம்மாவட்ட ஆட்சியாளர் தாம் ஓய்வு பெற்ற பிறகும் மதுரையிலேயே தங்கி மீனாட்சி அம்மனின் அருளை நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்துள்ளார்.

அவர் இறந்த பிறகும், அவரது உடல் மீனாட்சி அம்மனின் கோபுரத்தைப் பார்த்த வண்ணமே இருக்கும் வகையில் கல்லறையில் நல்லடக்கம் செய்யப் பெற்றுள்ளது.

★

# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை



## காகபுஜண்டர்

முனைவர் இரா. **செல்வகணபதி**

**நாடிசோதிடத்தின் தந்தை**

இன்று தமிழ் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டு வரும் நாடி சோதிடம் என்ற கலையின் மூலவராகவும், முதல்வராகவும் திகழ்பவர் காகபுஜண்டர்.

நவநாதசித்தர்கள், பதினெண்சித்தர்கள் என்ற பட்டியலில் இவர் குறிப்பிடப்படவில்லை. இந்திய நாடு தழுவிய ஓர் அருளாளராக, வியப்பூட்டும் பல அனுபவங்களை அறிந்து அறிவிக்கவல்ல ஞான மூர்த்தியாக , சித்தாடல்கள் வல்ல ஓர் இருடியாக, அற்புத ஞானம் நிறைந்த உபதேசங்களை வழங்கிய குருமூர்த்திகளாகக் காகபுஜண்டர் திகழ்கிறார்.

வடபாரதத்தில் இவர் அறியப்பட்ட அளவு தென் தமிழ் நாட்டில் இவரை மக்கள் அறிந்திருக்கவில்லை. இந்திமொழியில் இராமாயணம் எழுதிய துளசிதாசர், தம் இராமாயணத்தைப் படைக்க "புசுண்ட இராமாயணம்" என்ற ஒரு நூலை முன் மாதிரியாகக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அதனை இயற்றியவர் காகபுஜண்டரே ஆவார்.

**காகபுஜண்டர் பெருவாழ்வு**

வடமொழியில் 'ஞானவசிட்டம்' என்ற ஓர் நூல் உண்டு. அது வசிட்ட மாமுனிவரால் இராமனுக்கு உபதேசிக்கப்பட்ட ஓர் ஆத்மபோத நூல். அந்நூலுள் ஒரு கதையாகக் காகபுஜண்டர் வரலாறு இடம் பெற்றுள்ளது.

மேற்குறித்த நூல் தமிழில் "ஞானவாசிட்ட அமல இராமாயணம்" என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, இதனுள் 29 ஆவது கதையாக இவர் வரலாறு "புசுண்டன்கதை" என்ற தலைப்பில் 99 பாடல்களில் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

காகபுஜண்டர் பாடியதாகத் தமிழில் காகபுசுண்டர் பெருநூல்காவியம் 1000 என்ற ஒரு நூலும், தமிழ்ப்பாடல்களாக 144 பாடல்களும், 16 குறள் வெண்பாக்களும் கிடைத்துள்ளன. மேலும் இவர் இயற்றியனவாக வைத்தியவாத யோகஞானம், வைத்திய வாதயோக சூத்திரம், மெய்ஞானவிளக்கம் என்னும் மூன்று நூல்களும் குறிக்கப்பட்டுள்ளன. நூல்களுள் இவர் காக வடிவனராகவும், பாம்பு (புஜண்டம்) வடிவினராகவும் குறிக்கப்பட்டுள்ளார். காகம் என்ற வடசொல் அவிட்ட விண்மீனைக் குறிக்கும். எனவே, அந்நாளில் பிறந்த பாம்பின் பெயர் பூண்ட ஒரு சித்தராகவே இவர் இருத்தல் கூடும்.

**துளசிராமாயணக் குறிப்புக்கள்**


துளசி இராமாயணத்தில் தலையாய நான்கு உரையாடல்களும் அடங்கும். இதில் மூன்றாவது உரையாடல் சிவனுக்கும் காகபுஜண்டருக்கும் இடையேயும், நான்காவது உரையாடல் காகபுஜண்டருக்கும் கருடனுக்கும் இடையேயும் நிகழ்ந்ததாக அமைக்கப்பட்டுள்ளது.

துளசி இராமாயணத்தின் ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தில் காகபுஜண்டர் வரலாறு விரித்துரைக்கப்பட்டுள்ளது. சிவபிரான் முன்னிலையில் மதுவுண்டு அன்னங்கள் இரண்டு களித்திருந்தன. சிவன் அவற்றை உற்றுநோக்க, அவற்றிடம் சிவகலை காக உருவத்துடன் பதிந்தது. பெண் அன்னம் இருபத்து ஒன்றாவதாகப் பொரித்த முட்டையிலிருந்து காகபுஜண்டர் தோன்றினார் என்று ஒரு குறிப்பு அபிதான சிந்தாமணியில் காணப்படுகிறது. இவர் மனைவி பெயர் பகுளாதேவி. இவர் குமாரர் உரோமரிசி என நாடி நூல்களில் குறிப்புகள் உள்ளன. பல்கற்பகாலங்களையும் கடந்து பலயுகங்கள் மண்ணில் வாழ்ந்தவர் இவர்.

**அழகிய குறள்வெண்பாக்கள்**

பலயுகங்கள் காகபுஜண்டர் உயிர் வாழ்ந்தமைக்குரிய மூல காரணங்களை அவரே குறிப்பிடுகிறார்.

சென்றதையோ, வரப்போவதையோ நான் ஒருக்காலும் நினைப்பது கிடையாது. நடப்பதை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பேன், என்மனம் நன்மையை அடையும்போது மகிழ்ச்சி



## இடும்பன் மலைக்கோவிலுக்குக் கம்பிவட ஊர்த்தி



மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 3.11.2004

*அன்று பழனிக்கு வருகை தந்து கம்பி வட ஊர்தியைத் துவக்கிவைத்த பொழுது பக்தர்கள் பெரும்பாலோர் பழனிமலைக் கோவிலுக்கும், இடும்பன் மலைக் கோவிலுக்கும் இடையே ஒரு கம்பிவட ஊர்தியை ஏற்படுத்தித்தர வேண்டுமென வேண்டுகோள் வைத்தனர்.*

*மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இதைக் கனிவுடன் பரிசீலித்து பழனிமலைக் கோவிலுக்கும், இடும்பன் மலைக் கோவிலுக்கும் இடையே சுமார் 4 - கோடி ரூபாய் மதிப்பீட்டில் கம்பி வட ஊர்தி 2005 - 2006 ஆம் ஆண்டிலேயே அமைக்க வேண்டுமென ஆணையிட்டுள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

- மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
**திருமிகு பி.சி.இராமசாமி** அவர்கள்.

அடைவதில்லை. தீமை ஏற்படும்போது துன்புறுவது இல்லை. எவன் உறவு? எவன் அந்நியன்? என்று நான் வேறு பிரித்துப் பார்ப்பதில்லை. ஆசை முதலான மனத்துன்பங்களுக்கு நான் இடம் கொடுப்பதில்லை.

"சித்தர் பதினெண்மர் செங்கையில் தோன்றாத அத்தனரு ம்புசுண்டன்யான்."

"நேத்திரத்தைக் காகம்போல் நிச்சயமாம் நிற்க ஆத்துமத்தில் ஆனந்தமாம்."

'உலகமே மாயமென உன்மனதில் கண்டு நலமாக நாதனடி நம்பு."

"உலகியல் அறிந்தோர் ஒருநாளும் மாளார்
பல நினைவை விட்டு நீ பார்."

"கண்டோரும் சொல்லார் கருத்தால் பெரியோரைத் தொண்டுசெய்து பெற்ற சுகம்."

### அறம் உரைத்த பண்பு

சித்தர் நூல்கள் கடவுள் பத்திமை குறித்த வழிகாட்டுதல்களில் அதிகம் ஈடுபாடு கொள்வதில்லை. அவற்றுள் அறம் உரைக்கும் பகுதிகள் பலஉள்ளன. காகபுஜண்டர்

"தாம் என்ற உலகத்தில் மனிதரோடே
சஞ்சாரம் செய்யாதே தனித்து நில்லே
ஓமென்று ஊண்மிகுத்து உண்டிடாதே
ஓரமாய் வழக்கதனை உரைத்திடாதே
ஆமென்ற அட்சரத்தை மறந்திடாதே
ஆயச மாகவுந்தான் திரிந்திடாதே
காமப்பேய் கொண்டவனோ டிணங்கிடாதே
காரணத்தைக் கண்டுவிளை யாடுவாயே."

என ஒரு பாடலில் நல்லறங்களைத் தொகுத்துச் சுட்டியுள்ளார்.

### பெருநூல்காவியம் :

இவரது பெருநூல் காவியம் ஆயிரத்தில் கருவில் இருக்கும் குழந்தை ஆணா-பெண்ணா என்பதைக் கண்டறியும் முறை குறிக்கப்பட்டுள்ளது. கனாக்களின் தோற்றம் மற்றும் பயன் உரைக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டுச் சித்தர்கள் பலரின் பெயர்களும், அவர்களோடு இவருக்கு இருந்த தொடர்புகளும் இவர் பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளன. சித்தர்களுள் அகத்தியரை இவர் பெரிதாக மதிக்கிறார். மனத்தியல்பு நுட்பமாக விரித்துரைக்கப் பட்டுள்ளது. கருடன் இவரை நோக்கி எழுப்பிய வினாக்களும், இவர் தந்த விடைகளும் பெரும் சிறப்புக்குரியன.

### காகபுஜண்டர் ஆலயம்:


காகபுஜண்டருக்கான ஆலயம் ஒன்று காரைக்காலை அடுத்த திருமலைராயன் பட்டினத்தில் நற்பலீயானந்த அம்பாஜீ என்ற காகபுஜண்டர் அருள் பெற்ற ஒருவரால் எழுப்பப்பட்டுள்ளது. மேலும் சிதம்பரத்தை அடுத்த ஆச்சாள்புரம் சிவாலயம் ஒன்றில் இவர் திருமேனி உள்ளது. நாடிசோதிடர் பலரும் காகபுஜண்டர் நாடியையே மூல நூலாகக் கொண்டு பலன் உரைத்து வருகின்றார்கள்.

*(காகபுஜண்டரின் விரிவான வரலாறு-கட்டுரை ஆசிரியரால் ஆராய்ந்து எழுதப்பட்டு 217 பக்கங்கள் கொண்ட நூலாக 2001இல் வெளியிடப்பட்டுள்ளது.)*

# நான்கையும் பிடி, ஒவ்வொன்றாக விடு

திருமதி இந்திரா ஆராஅமுதன்

குஞ்சு சுவாமிகள் என்பவர் கேரளாவில் பிறந்து வளர்ந்தவர். இவர் குழந்தையாக இருக்கும்போது தனது தந்தையுடன் குளத்தில் நீராடுவதற்காகப் போவார். குளத்தில் நீராடி விட்டுச் செல்லும் அன்பர்கள் ஒரு பையைத் திறந்து தன் நெற்றியில் தரித்து கொள்வதும், அது திருநீறாக மாறுவதையும் பார்த்ததும் அவ்வாறு செய்து கொள்ள இவருக்கும் ஆசை வந்தது.



அன்று இரவு கனவில் பரமசிவன் தோன்றி ஒரு குறிப்பிட்ட மரத்தடியைச் சென்று பார்க்கச் சொன்னார். மறுநாள் அவ்வாறு அந்த மரத்தடிக்குச் சென்றபோது அங்கு 12 அணா இருப்பதைப் பார்த்தார். அதை எடுத்துக் கொண்டு கடைக்கு சென்று விசாரித்தார். விபூதி வைக்கும் அந்தப் பட்டுப்பையின் விலை பன்னிரண்டு அணா என்று கடைக்காரர் சொன்னவுடன் வாங்கி விபூதி பூச ஆரம்பித்தார்.

வேறு சிலர் ருத்திராட்ச மாலையை அணிந்திருப்பதைப் பார்த்து இவருக்கு தானும் அதை அணிய வேண்டும் என்ற ஆசை வந்தது. அன்று இரவிலும் பரமசிவன் வந்து, குளத்தில் உள்ள தாமரை மலர் ஒன்றில் இருப்பதாக அறிவித்தார். அதே போல் மறுநாள் காலை ஒரு தாமரை மலரில் தங்கத்தில் கட்டிய ருத்திராட்ச மாலை இருப்பதை எடுத்துஅணிந்து கொண்டார். ஆனால் எப்படி ஜபம் செய்ய வேண்டும் என்று தெரியவில்லை.

இரவில் அதேபோல் சிவன் வந்து அவரது வலது காதில் "ஓம் நமசிவாய" என்று மூன்று முறை ஓதினார். மந்திரத்தை இவரும் ஜெபிக்க ஆரம்பித்தார்.

சிவபெருமானின் அருளால் நினைத்த காரியம் உடனேயே நடைபெறுவதைப் பார்த்த இவர்தம் பெற்றோர் மிகவும் வியப்புற்று வேதம் கற்றுக் கொள்ளுமாறு ஒரு குருவிடம் கொண்டு சேர்த்தனர். ஆனால் குருவிடம் அவருக்கு நாட்டம் ஏற்படவில்லை. ரமணரைப் பார்க்க ஆசையாக இருக்கிறது என்று சொல்ல, "ரமணர் பேசமாட்டார், எவ்வாறு உபதேசம் பெற முடியும்" என்று சிலர் சொன்னார்கள். ஆனால் இவருக்குத்தான் சிவனின் அருள் இருக்கிறபடியால், திருவண்ணாமலைக்கு வந்தார், பார்த்தார், ரமணரை,

ரமணரும் இவரைப் பார்த்தார். இவர் எதற்காக வந்துள்ளார் என்பது அவருக்கு தெரியாதா என்ன? சிலை போன்று இருந்தார். இவரும் பொறுமையாக அவர் சொல்லப் போகும் உபதேச வார்த்தைக்காக எப்பவும் அவர் எதிரில் இருந்து வந்தார்.

ஒருநாள் ரமணரிடம் இருந்த 4 நாய்க்குட்டிகளுக்கு சீடர் ஒருவர் வந்து கலயத்தில் கஞ்சி ஊற்றினார். கஞ்சி சூடாக இருந்தது. அப்போது ரமணர் சொன்னார் இவரைப் பார்த்து; 4 ஐயும் பிடி, ஒவ்வொன்றாக விடு என்றார். அதன் அர்த்தம் என்னவென்றால் பாராயணம், ஜபம், த்யானம், ஆத்மவிசாரம் ஆகிய ஒவ்வொன்றையும் வரிசைக் கிரமமாக செய்ய வேண்டும் என்பதாகும். முதலில் பாராயணம் செய்து, பின் அதை விட்டுவிட்டு ஜபம் செய்வது, அதன்பின் அதை விட்டுவிட்டு தியானம், கடைசியில் தியானத்தையும் விட்டுவிட்டு ஆத்ம விசாரம் செய்தால் ஞானியாகலாம் என்பது தான் ரமணர் சொன்ன உபதேசமாகும்.

இவ்வாறு அவர் புரிந்து கொண்டு செயல்பட்டு நல்ல ஞானிக்குத் தேவையான மிதமான பேச்சு, மிதமான ஆகாரம், மிதமான நித்திரையுடன் காலம் கழித்து வந்தார்.

இவரது இன்னும் ஓர் ஆசை, சேஷாத்திரி சுவாமிகளைக் காணவேண்டும் என்பதாகும்.

ஒரு நாள் இவர் ரமணருக்காக சாப்பாடு எடுத்து வரும் போது, சேஷாத்ரி சுவாமிகள் எதிரில் வந்தார். கேரியரில் இருக்கும் உணவுப் பண்டங்கள், நார்த்தங்காய் முதற்கொண்டு சொல்லி இவர் முதுகில் தட்டிக் கொடுத்து "நூறுஆண்டு வாழ்வாய்" என்று ஆசீர்வதித்தார்.

அதேபோல சிவன் அருளால் குஞ்சு சுவாமி நினைத்த காரியங்கள் சித்தி ஆகி, சேஷாத்திரி சுவாமிகள், ரமணர் ஆகியோரைத் தரிசித்து ஆசிகள் பெற்று சுத்த ஞானியாக நூறு ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார். ★

# மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

12

தனக்குக் கடமையும் தருமமும் துரியோதனனுக்குப் பட்டிருக்கும "செஞ்சோற்றுக் கடனை அடைப்பது தான்" என்று உறுதிபடக் கூறிவிடும் கர்ணன், மேலும் தன் தாய் அதனை மறுத்துப் பேச இடம் கொடுக்காமல் "யுத்தமோ மூண்டுவிட்டது. இப்பொழுது என்னை மகன் என்று சொந்தம் கொண்டாடுவதில் என்ன பயன்? எதற்காக என்னைக் காண வந்தீர்களோ, அந்தக் காரணத்தை மறைக்காமல் கூறுங்கள்" என்று தாயின் பாசத்தைத் தடை செய்து பேச, கர்ணனின் வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ள முடியாதவளாகிய குந்தி, கண்ணீர் விட்டுக் கதறி அழுது விடுகிறாள்.

தாய் சிந்தும் கண்ணீரை எந்தத் தனயன்தான் தாங்கிக் கொள்ள முடியும்? அதுவும் "தாய்க்குத் தலைமகன்" என்ற பழமொழியும் நாட்டில் வழங்கக் காணுகின்றோம்.

கர்ணனைப் பாசமின்றி ஆற்றிலே விட்டவள் அல்லள் குந்தி. திருமணத்திற்கு முன்னமே குழந்தை பெற்றுவிட்ட தன்னை உலகம் பழிக்குமே!, அந்தப் பழியால் தன்னை ஈன்றெடுத்த பெற்றோர், ஊராரின் முன் தலைகுனிந்து நிற்க நேருமே என்று, பழிக்கு அஞ்சித்தான், தான் பெற்ற குழந்தை எங்கேயிருந்தாலும் நலமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, பெட்டியில் இட்டு ஆற்றிலே விட்டாள் குந்தி.

அப்படி ஆற்றிலே விடப்பட்ட தன் மூத்தமகனே தன் மற்ற மக்களுக்குப் பகையாக யுத்த களத்தில் வந்து நிற்பான் என்று அந்தத் தாய் ஒருபோதும் எண்ணியிருக்க மாட்டாள். ஆனால், யாரறிவார் ஈசனின் திருவிளையாடலை!



"இப்பொழுது மகன் என்று சொந்தம் கொண்டாடிப் பயனென்ன?" என்று மகனே தாயைக் கேட்க, தாய் அதனைத் தாங்க முடியாமல் கண்ணீர் விட்டுக் கதறக், கர்ணனின் மனமும் கல்மனம் அல்லவே! ஆகவே அன்னையின் கண்ணீரைத் துடைக்கின்றான். **"மூண்ட வல்வினையின் பயன் அலாது யார்க்கும் முயற்சியால் வருவதொன்றுண்டோ"**? என்று கூறித் தேற்றுகின்றான்.

"இதுகாறும் என்னை நாடிவந்து ஒன்று கோரியவர்களின் குறை தீர்க்காமல் நான் விட்டதில்லை",

"நீங்களும் கேளுங்கள் தாயே! எது வேண்டுமானாலும் கேளுங்கள் தருகிறேன்" என்று தன்னைத் தந்த அன்னைக்குத் தான் என்ன தரவேண்டும் என்று கேட்கிறான் கர்ணன்.

குந்தியும் விதியை நொந்து தேறியவளாய் தன் மகனிடம் தனக்கு இரண்டு வரங்கள் வேண்டுமெனக் கேட்கிறாள்.

**"பார்த்தன் வெஞ்சமரில்**
**நின்னுடன் மலைந்தால்**
**பகைப் பெரும்பாந்தள் பகழி**
**கோத்தலும் பிழைத்தால் மடுத்து நீ விடுத்து**
**கோறல் என்றொரு வரம் குறித்தாள்**
**வாய்த்த மற்றவர்கள் இளைஞர் என்று அவரை**
**மலையல் என்றொருவரம் குறித்தாள்"**

(கிருட்டிணன் தூது 258)

"அர்ச்சுனன் மேல், நாகாத்திரத்தை நீ ஒருமுறை ஏவி அவன் உயிர் பிழைத்துக்

# தமிழில் அர்ச்சனை



உச்சநீதிமன்றம் 2.4.1992 நாளிட்ட தீர்ப்பில் திருக்கோயில்களில் வழிபாடுகள் வடமொழியின் ஆகமவிதிகளின் அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது என்றும், இருப்பினும் விலை மதிப்பற்ற தமிழ்நூல்களான தேவாரம் மற்றும் திருவாசகம் போன்றவைகள் பொதுமக்களின் வழிபாட்டுக்கேற்ப அமைக்கப் பட்டுள்ளது என்றும், இத்தகைய வழிபாட்டு முறைக்கு நல்லாதரவு வழங்கப்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளது.

எனினும், தற்போதைய ஆகம அடிப்படையிலான வழிபாடு தொடர்ந்து செய்யப்பட வேண்டுமென்றும், தமிழ் வழிபாட்டு முறையில் தேர்ச்சி பெற்ற அர்ச்சகர்கள் மூலமாக திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் வேண்டுகோளுக்கு இணங்க தமிழில் வழிபாடு நடத்தலாம் எனவும் ஆணை பிறப்பித்துள்ளது.

இதன் அடிப்படையில் தற்போது பக்தர்களின் தேவைக்கேற்ப வழிபாட்டு முறைகள் பின் பற்றப்பட்டு வருகின்றன. தமிழ் அர்ச்சனை முறையைப் பரவலாக்கும் நோக்கத்துடன் இதுவரை 15 போற்றி நூல்கள் வெளியிடப் பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

- மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்
**திருமிகு பி.சி. இராமசாமி** அவர்கள்

கொள்வானேயானால், அதனை மறுபடியும் அர்ச்சுனன் மேல் ஏவுதல் கூடாது" என்பதனைக் குந்தி தன்னுடைய முதல் வரமாக கர்ணனிடம் கோருகின்றாள். கண்ணபெருமான் கர்ணனிடம் குந்தி கோரிப் பெற வேண்டிய வரமாக இதனையே கூறியிருந்தது நாம் அறிந்ததுதான். கண்ணபெருமான் கூறாத மற்றொரு வரத்தையும் கூட கர்ணனிடம் கோருகின்றாள் குந்தி.

"தருமன், பீமன், நகுலன், சகாதேவன் ஆகிய மற்ற நால்வரையும் உன் உடன்பிறந்தார்கள் எனக் கொண்டு அவர்களைக் கொல்லாதே" என இரண்டாவது வரத்தையும் குந்தி கோர, முன்பின் அறியாதவர்களுக்கெல்லாம் முகம் மலர்ந்து கேட்டதெல்லாம் கொடுக்கக் கூடியவனாகிய வள்ளல் கர்ணன், "**உறுகணையொன்றே பார்த்தன் மேற்தொடுப்பன், ஒழிந்துளோர் உய்வர்**" என்று தாய் கேட்ட வண்ணமே அருள் புரிகின்றான்.

"அர்ச்சுனன் மேல் நாகாத்திரத்தை ஒரு முறை மட்டுமே ஏவ வேண்டும்" என்பதைக் குந்தி வரமாகக் கோரியிருக்கா விட்டாலும் "வீரனாகிய நானும் அவ்விதமே செயல் பட்டிருப்பேன்" என்பதை எடுத்துக் கூறும் கர்ணன் "தெறுகணையொன்று தொடுக்கவும் முனைந்து செருச் செய்வோன் சென்னியோடு இருந்தால் மறுகணை தொடுப்பது ஆண்மையோ, வலியோ, **மானமே மன்னவர்க் கறமோ**" என தாயிடம் வினவுவது நெஞ்சீரத்தில் மட்டுமே அல்லாமல், நெஞ்சுரத்திலும் கர்ணன் வல்லவனே ஆவதை நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறாகத் தாய் கேட்ட இரு வரங்களையும் அன்பினோடு அளித்தவனாகிய வள்ளல் கர்ணன், தானும் இரு வரங்களைத் தன் தாயிடம் கோருகின்றான். கர்ணன் கோரும் அவ்விரண்டு வரங்களும், அவன் பெரிதும் மதிக்கும் அவனுடைய தாய்ப்பாசத்தையும், செஞ்சோற்றுத் தருமத்தையுமே எடுத்துக் காட்டுவனவாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

**"பெருவரம் இரண்டும் பெற்றபின் தன்னைப் பெற்ற தாயினைக் கரங்குவித்து**
**தருவரம் எனக்குமிரண்டுள உலகிற் சராசரங்களுக் கெலாந் தாயீர்**
**வெருவருமமரிற் பார்த்தனால் அடியேன் வீழ்ந்த போது அவனிபர் அறிய**
**மருவரு முலைப்பால் எனக்களித்து உந்தம்மகனெனும் வாய்மையும் உரைப்பீர்"**

*(கிருட்டிணன் தூது 260)*

**"உய்வருந்திறல் வெம்போர் முடிப்பளவும் உமக்கு நான் மகனெனுந் தன்மை**
**ஐவரும் அறியாதவண்ணம் நீர் காப்பீர், அல்லது அங்கவர் சிறிதறியின்**
**மைவரும் கடற்பார் அனைத்தையும் எனக்கே வழங்குவர், வழங்கினால் யானென்**
**கைவருந் துணைவன் தனக்கல்லால் வழங்கேன் கடைப்பிடி கருமமீ தென்றான்."**

*(கிருட்டிணன் தூது, 261)*

"அர்ச்சுனனால் தாயே! நான் மாண்டு தரையில் விழும் போது, உலகோர் அறிய என்னை உம் மகன் என்று அறிவிக்க வேண்டும். அதுவே உலக மாதாவாகிய உம்மிடம் நான் வேண்டும் முதல் வரமாகும். மேலும் நான் உங்கள் மகன்தான் என்ற உண்மையை என் தம்பிகளிடத்தில், நான் இறப்பதற்கு முன்பாகக் கூறக் கூடாது. இதுவே நான் உங்களை வேண்டும் இரண்டாவது வரமுமாகும்" என்று இரண்டு வரங்களைத் தாயிடம் கேட்கின்ற கர்ணன், தான் இரண்டாவது வரத்தைக் கோரியதற்கான காரணத்தையும்

## தெய்வத்தமிழின் சிறப்பு



*திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் முதற்தமிழ்ச்சங்கத்தின் தலைமைப்புலவராய் வீற்றிருந்து தமிழ் ஆய்ந்துள்ளார்.*

*சுந்தரருக்கும், சேக்கிழாருக்கும், அருணகிரியாருக்கும் அவர்கள் தெய்வநூல்கள் யாக்கத் தமிழில் அடிஎடுத்துக் கொடுத்துள்ளார். முதலையுண்ட பாலனை உயிர்க்கொடுத்து மீட்டது தமிழ். கற்புணையை மிதப்புறச் செய்து கரையேற்றியது தமிழ். பிட்டுக்கு மண்சுமக்கச் செய்து ஈசனாரைப் பிரம்படி கொள்ளச் செய்ததும் தமிழ்.*

*இத்தகைய அற்புதங்கள் பல விளைத்த அருமையினாலேயே தமிழைத் தெய்வத் தமிழ் என்று போற்றுகின்றனர் நம் சான்றோர் பெருமக்கள்.*

தெரிவிக்கின்றான்.

"நான் பாண்டவர்களில் மூத்தவன் என்ற உண்மை பாண்டவர்களுக்குத் தெரிந்து விட்டால், அவர்கள் போர் செய்து வெல்லவிருக்கும் நாட்டின் அரசாளும் உரிமையை எனக்கே வழங்கி விடுவார்கள். நான் அந்த உரிமையைப் பெறுவேனேயானால், என்னுடைய உற்ற நண்பனாகிய துரியோதனனுக்கே அந்த உரிமையை வழங்கி விடுவேன். ஆகவே அது நேராமல் இருக்க வேண்டுமானால் நான் இறந்த பிறகே என்னுடைய பிறப்பின் உண்மையை உலகிற்கு உணர்த்த வேண்டும்" என்று தான் கோரிய வரத்திற்கான காரணத்தையும் கூறுகின்றான் கர்ணன்.

இறந்த பிறகேனும் தான் அனாதையில்லை என்ற உண்மையை உலகிற்கு உணர்த்த விழைகிறது அவனுடைய தாய்ப்பாசத்திற்கு ஏங்கும் அன்பு உள்ளம். தம்பிகள் நாடு கொடுத்தால், அதையும் நண்பனுக்கே காணிக்கையாக்கத் துணிகிறது அவனுடைய பண்பு உள்ளம்.

ஈன்றெடுத்த பிள்ளை, தான் இறப்பதைப் பற்றித் தன்னுடைய தாயிடமே பேச நேர்ந்தால் அதை எந்தத் தாயின் உள்ளம் தான் தாங்கிக் கொள்ளும்? குந்தியும் தாங்க முடியாத துக்கம் கொண்டவளாய் "என்னுடைய உயிர் இப்போதே பறந்து விடுவதானால், எவ்வளவு நலமாயிருக்கும்! உன்னுடைய பிரிவைக் காணும் கொடுமை நேராதே!" என்பதைக் கூறி கண்ணீர் விட்டவளாய் கர்ணனை அணைத்து அவன் கோரிய வரங்களின் படியே செயல்படுவதாக உறுதியும் கூறி விடை பெறுகின்றாள்.

தாயைப் பிரிய மனம் இல்லாதவனாய் கர்ணனும் குந்தியுடனே தன் அரண்மனை வாசல் வரை தொடர்ந்து வர, அவனைப் பச்சிளம் குழந்தையாய் இருந்த போது எவ்வளவு துயரத்துடன் பெட்டியில் வைத்து ஆற்றிலே விட்டுப் பிரிந்தாளோ, அதைப் போலப் பல மடங்கு அதிகமான துயரம் கொண்டவளாய் குந்தி, மைந்தனை வாசலிலேயே நிற்கக் கூறி அவனைப் பாசம் மிக மீண்டும் தழுவிப் பின் பிரிபவளாய் விடைபெற்று, தன்னுடைய அரண்மனைக்குத் திரும்புகிறாள்.


குந்தியினுடைய அரண்மனையில், அவளுடைய வருகைக்காகக் காத்திருக்கின்றார் கண்ணபெருமான். அவரிடம் நடந்ததையெல்லாம் நடந்தபடி எடுத்துரைக் கின்றாள் குந்தி.

கண்ணனும் தான் எண்ணிய காரியம்யாவும், செம்மையாகவே முடிந்ததென்ற மனநிறைவோடு அப்பொழுதே குந்தியிடம் விடைபெற்றுப் பாண்டவர்கள் பாடி வீடு அமைத்துத் தங்கியிருக்கும் உபப்பிலாவியம் அடைகின்றார். தான் அத்தினாபுரி அடைந்ததும், விதுரன் வீட்டில் விருந்துண்டு தங்கியதும், துரியோதனனிடம் சமாதானம் பேச முயன்று தோற்றதும், விதுரன் வில்லை முறித்ததும், துரியோதனன் படுகுழி அமைத்துத் தன்னைச் சிறைபிடிக்க முயன்றதும் முதலான எல்லாவற்றையும் பாண்டவர்களுக்குக் கண்ணன் எடுத்துரைக்கின்றார்.

கர்ணன் குந்தியின் மைந்தன் என்ற உண்மையையும், அவனிடம் குந்தி பெற்ற வரத்தையும் கூறாமல் மறைத்துவிடும் கண்ணபெருமான் அடுத்துப் பாரதப் போருக்குப் பாண்டவர்களைத் தயார்ப்படுத்துகின்றார்.

(தொடரும்)

# ? பதில்



★ கு. கண்ணன், மேலப்பாளையம், குறிச்சி

**கேள்வி** - எல்லாம் விதிப்படி நடக்கும் என்று பெரியவர்கள் கூறுகின்றார்கள். அவ்வாறானால் கடவுளை ஏன் வழிபட வேண்டும்?

எல்லாம் விதிப்படி நடக்கும் என்ற மொழி உண்மையானாலும் விதியையும் கடவுள் அருளால் வெல்ல முடியும் என்பதை மார்க்கண்டேயர் வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. "முருகப் பெருமானின் கால்பட்டு அழிந்தது அயன் கையெழுத்தே" என்று அருணகிரிநாதரும் கடவுள் வழிபாட்டால் விதியை வெற்றி கொள்ள இயலும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றார்.

முன்பிறவியில் உண்டான விதியை வெல்வதற்குத்துணை செய்வது இறைவழிபாடு. இனிவரும் பிறவியில் உண்டாகும் விதி நன்மை செய்வதற்கும் நாம் செய்ய வேண்டுவதுதான் இறைவழிபாடு.

★ ஜி. கமலா, திருவொற்றியூர்

**கேள்வி** : சென்ற ஜனவரி மாதம் எனக்கு ஒரு பெண் குழந்தைபிறந்தது. குழந்தை பிறந்த மறு மாதத்தில் என் மாமியார் காலமாகி விட்டார். குழந்தை பிறந்து பாட்டியை விழுங்கிவிட்டாள் என்று சிலர் என் காதுபடக் குழந்தையைக் குறைகூறுகிறார்கள். அதனால் என் மனம் மிகவும் வருத்தப்படுகின்றது. தாங்கள் கூறும் சமாதானம் என்ன?

**பதில்** : அவரவர் பிறந்தபோதே இவ்வுலகை விட்டு மறையும் நாளும் நிச்சயித்தே அனுப்பப்படுகிறோம். நாம் நுகர்கின்ற இன்பதுன்பங்களுக்குப் பிறரைக் குறை கூறுவது அறியாமையே ஆகும்.

**"தீதும் நன்றும் பிறர்தர வாரா"**

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புறநானூற்றில் கூறப்பட்டுள்ள கருத்தும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

★ கோபால், மதுராந்தகம்

**கேள்வி** : அண்மையில்தான் எனக்குத் திருமணம் ஆயிற்று. நானும் என் மனைவியும் ஒரு சிறிய வீட்டில் வசித்து வருகிறோம். தனியாகப் பூஜை அறை இல்லை. கூடத்திலேயே இறைவனுடைய படங்களை வைத்து வணங்கிவருகிறோம். இது தவறா?

**பதில்** : இது தவறு இல்லை. "இல்லறம் அல்லது நல்லறம் அன்று" என்று பெரியவர்கள் கூறியுள்ளார்கள்" நீங்கள் வசிக்கின்ற சிறு வீட்டில் பூஜையறை எனத் தனியறை இல்லாத போதும். கூடத்திலே இறைவனுடைய படங்களை வைத்து வழிபட்டுவருவது நல்லதே. உங்களுக்கு இறையருள் துணை புரியும்.

★ சண்முக செல்வன், பாவூர்சத்திரம்

**கேள்வி** : நான் பழநிக்குச் சென்று முடி இறக்கிக் கொள்வதாக வேண்டிக் கொண்டிருந்தேன். இப்போது அதற்குப் பதிலாக திருத்தணி சென்று முடிஇறக்கிக் கொள்ளலாமா என்று எண்ணுகிறேன். இதில் ஏதேனும் பிழை உண்டா?

**பதில்** : எல்லாக் கோயில்களிலும் இருக்கின்ற முருகன் ஒருவன்தான். ஆகவே பழநிமுருகனை நினைத்தவாறே திருத்தணிகைக்குச் சென்று முடியிறக்கிக் கொள்ளலாம். அதனால் தவறு ஒன்றும் இல்லை.

★ கதிர்வேல், போரூர்

**கேள்வி** : குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இறந்து போகும் சிலர், பிதிர்க்கடன் செய்ய ஆள் இல்லாததால் அவர்கள் ஆத்மா சாந்தி அடையுமா?

**பதில்** : ஆத்மா சாந்தி அடைவது என்பது பிதிர்க்கடன்செய்வதனால் மட்டும் உண்டாவது அல்ல. புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் உயர்ந்த புண்ணியங்களைச் செய்வதால் ஆத்மா சாந்தி பெறலாம். இல்லறத்தார் அல்லாத துறவிகள் தத்தம் புண்ணியத்தால் வீடுபேறு பெறுவதைப் போலவே, இல்லறத்தாரும் புத்திரர்கள் இல்லாத போதும் தத்தம் புண்ணியங்களால் ஆத்மசாந்தியும் வீடுபேறும் பெறலாம்.

குழந்தைப் பேறு இல்லாத வந்தி என்ற மூதாட்டி சிவபுண்ணியத்தால் வீடுபேறுபெற்றதைத் திருவிளையாடல் புராணம் கூறுகின்றது.

# திருமந்திர உபதேசம்

திருமந்திரச் செல்வர்
**டி.வி. வெங்கட்டராமன்,** இ.ஆ.ப.,(ஓய்வு)

மனிதன் அறவழி மேற்கொள்ளும் செயல்பாடுகளெல்லாம் அன்பின் விளக்கமாகவே அமைய வேண்டும். அறச் செயல்கள் வெறும் சடங்குகளாக இருக்கும் போது அவை உள்ளத்திற்கு நிறைவு தராது. சிவபுண்ணியங்கள் என்கிற வகையிலும் அவற்றின் பயன் மிகக் குறைவாகவே இருக்கலாம்.

அன்பு ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடும் போது, அறச் செயல்கள் அன்பின் செயல்களாக மாறுகின்றன. அந்த அன்பைக் கொண்டே சிவபெருமானை வழிபாடு செய்வது என்பது எளிதாகிறது.

அன்பு உள்ளம் இறைவனை இயல்பாகவே நெருங்குகிறது; சிந்தையை இறைவனுக்கு ஆக்கிக் கொள்கிறது. சிந்தையுள்ளே சிவனவன் புகுந்தால் அவன் அருளே எல்லாச் செயல்களிலும் வியாபித்து நிற்கிறது. மனதில் சிவப்பரம்பொருள் வந்து அமர, தோத்திரங்கள் உள்ளிருந்து எழுகின்றன. மனம் செம்மையடைகிறது.



மனதில் நினைந்தும், வாயால் துதித்தும் இறைவனை வழிபடுவது போதாது என்று தோன்றுகிறது. அவனுடைய திருமேனியை நீராட்டி, திருவடிகளிலே மலர் வைத்து, “நமசிவாய போற்றி, புயங்கனே போற்றி, மயங்குகின்றேன் தாங்கிக் கொள்ளே!” என்றெல்லாம் உள்ளம் நெகிழ்ந்து வழிபடவேண்டுமென்ற அவா தீவிரமடைகிறது. இந்த அவாவின் வெளிப்பாடு பூசையாக அமைகிறது.

புறப்பூசையாயினும், அகப் பூசையாயிலும் சிவனை எவ்வாற்றாலும், மனம் நெகிழ்ந்து வழிபடுவதே அவனை அடைந்து, உய்யும் நெறி என்பதை சைவ சமய அருளாளர்கள் கோடிட்டுக் காண்பிக்கின்றனர். சிவவழிபாடு அன்பின்றி நிகழ்ந்தால், அது வழிபாடுமில்லை என்று தெளிவாகச் சொல்லுகின்றனர்.

**“நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்**
**பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கண்டு**
**நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே”** என்கிறார் திருநாவுக்கரசர் பெருமான். (தி 5.ப.90. பா.9)

சிவப்பரம்பொருள் உயிருக்கு அப்பாலாகவும், உயிருக்குத் துணையாகவும், உயிருக்கு உயிராகவும் நிற்கும் நிலைகளை தவத்தால் கண்டறிய வேண்டும். அப்போது உயிர் தனித்த பொருளல்ல! அது சார்ந்த பொருளின் தன்மையைப் பெறும் என்ற விளக்கங்கள் கிடைக்கும்.

இதுவே ஞானபூசை என்பார் திருமூலர். புலன் வழி செல்லாமல், உடலைச் சார்ந்த கருவிகளை நெறிப்படுத்தி, மனத்தைப் புலன் வழி போகாமல், அகமுகமாகத் திருப்பி, அகத்தில் சூக்கும உடலில் இயங்கும் ஆதாரங்களில் கவனத்தைச் செலுத்தி பிராணனையும் கட்டுப்படுத்தி உள்ளே ஒரு ஒளி தோன்ற அதையே தியானித்து ஒன்றிக் கொள்ளல் மகாயோகப் பூஜை என்றார்.

இறைவனுடைய உருவத்திரு மேனியை முறையாகத் திருக்கோயிலில் தாபித்து. ஆகமங்கள் கூறும் சடங்கு நெறிகளை மேற்கொண்டு உருவத் திருமேனியை உயிர் உள்ளதாகச் செய்து அதனை விதிப்படி வழிபாடு செய்தல் புறப்பூசையாகும். எந்த வகையில் சிவபூசை செய்தாலும், தூய்மைநிறைந்த அன்புடன் செய்யும் பூசையே சாலச் சிறந்தது என்கிறார் திருமூலர்பெருமான்.

“உயிர்க்குயிராய் நிற்றல் ஒண்றான பூசை
உயிர்க்கொளி நோக்கல் மகாயோகப் பூசை
உயிர்ப்புறும் ஆவாகனம் புறப்பூசை
செயிர்க்கடைதேறும் சிவபூசையாமே”

செயிர் = குற்றம் (திருமந்திரம் 1444)

திருக்கோயில்களிலும், இல்லங்களிலும் சிவபெருமானை விதிமுறைப்படி வழிபடுவதே உயிருக்கு ஒரு ஒழுக்க உணர்வை ஊட்டும்.

# நந்தவனத் திருப்பணி



***நூறு திருக்கோயில்களில் அந்தந்தத் திருக்கோயில்களின் தேவைக்கான மலர்களைப் பெறும் வகையில் புதிய நந்தவனங்கள் ஏற்படுத்தப்படும்.***

- மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் **திருமிகு பி.சி. இராமசாமி** அவர்கள்

அன்பினை வளர்க்கும். தன் முனைப்பைக் குறைத்து, இறைவனே தலைவனாகத் தன்னை அடிமை எனக் கருதும் மனப்பான்மையைக் கொடுக்கும்.

நாடும் நகரமும் சென்று, திருக்கோயில் இருக்கும் இடங்களை எல்லாம் தேடிச் செல்லுங்கள் என்கிறார் திருமூலர் பெருமான். எங்கும் வீற்றிருக்கும் சிவப்பரம் பொருளின் திருமேனிதனைக் கண்டு, வணங்கி துதித்து இன்புறுங்கள்.

சரியையாகிய நெறிக்கு இலக்கணமான திருத்தொண்டினைச் செய்யுங்கள். திருக்கோயிலில் தூய்மைப்பணி செய்து, எல்லா வகையிலும் அலங்கரித்து விளக்கேற்றி வழிபடுங்கள். நந்தவனங்கள் வைத்து பராமரித்தலைச் செய்யுங்கள். பெருமானுக்காக மலர்களைத் தக்கவாறு எடுத்து, மாலையாகக் கோர்த்து வழிபாட்டுக்கு உதவுங்கள்.

நீங்களே, மலராலும், நீராலும் உள்ளம் கனிந்தபடி, இறைவனைப் போற்றி மனநிறைவுபெறுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய அருளாளர்கள் நமக்கு அருளித்தந்த எண்ணற்ற திருப்பதிகங்களைப் பாடி, உங்களுடைய உள்ளம் உருகும் நிலைக்கு வந்தால், சிவபெருமான் உவகையுடன் உங்கள் நெஞ்சங்களில் புகுந்து அவற்றையே கோயிலாக்கிக் கொள்வான் . திருமூலர் அருளிய பாடல் இது:

**"நாடும் நகரமும் நற்றிருக்கோயிலும்**
**தேடித்திரிந்து சிவபெருமான் என்று**
**பாடுமின் பாடிப்பணிமின் பணிந்த பின்**
**கூடியநெஞ்சத்தைக் கோயிலாக் கொள்வனே!"**

*(திருமந்திரம் 1445)*

வேதங்களும், சிவாகமங்களும் சிவப்பெரும்பொருளைத் துதித்து வேள்விகளை செய்தலை ஒரு வழிபாட்டு நெறியாக அமைத்து அதற்கான மந்திரங்களையும் எடுத்துக் கொடுத்து, சிவவழிபாட்டில் வேள்விகளின் பங்கினைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

சிலர் வேள்வித் தீயில் சிவனை வழிபடுகிறார்கள். தீயில் உணவை இடுகின்றார்கள். அவர்கள் கருத்துப்படியே, இறைவனும், அந்த உணவை ஏற்று அவர்கள் வேண்டியதைச் செய்கின்றான்.

திருக்கோயில்களில் இறைவனுக்கு நைவேத்தியம் என்ற வகையில் பலவிதமான உணவுப் பொருள்களைக் காட்டுகிறார்கள். அவனும் அதை ஏற்றுக் கொள்கிறான். ஆனால் இந்த வகையில் இறைவனை வழிபட இயலாதவர்கள் அவனை வேறு எவ்வழிகளில் மகிழ்விப்பது? காலையும் மாலையும் இது செய்யப்பட்டாக வேண்டுமே! திருமூலர் ஒரு தகுந்த வழியைச் சொல்கிறார். அவனுக்கு நாம் தரும் உணவு ஒன்று நம் கையிலேயே இருக்கின்றது என்கிறார். அது எது? அவனை மகிழ்விப்பது தோத்திரப் பாடல்களேயாகும். இறைவனே சுந்தரர் பெருமானிடம் தனக்கு "அன்பில் சிறந்த அருச்சனை பாட்டேயாகும்" என்கிறார். தோத்திரப் பாடல்களாகிய பாடல் அமுதத்தை அவனுக்கு ஊட்டினால் அவன் மிகுந்த மகிழ்ச்சி அடைவான் என்கிறார் திருமூலர்.

**"வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்**
**காட்டவும் யாமிலம் காலையும் மாலையும்**
**ஊட்டவி யாவன உள்ளங் குளிர்விக்கும்**
**பாட்டவி காட்டுதும் பால் அவியாமே"**

*(திருமந்திரம் 1824)*

சிவபூசை எளிதாகச் செய்ய வேறொரு வழியும் உண்டு. சிவ புண்ணியம் செய்ய விரும்புபவர்களுக்கு மலர்கள் உண்டு. நீரும் உண்டு. அவை எளிதில் கிடைக்கக் கூடியவை. நீரைச் சொரிந்து, மலராய் வழிபடுபவர்களுக்குச் சிவன் ஐயமின்றி அருள் புரிவான். இதை அறிந்து கொள்ளாத மாந்தர் உலகத்தில் காலத்தை வீணாக்கிப் பிறப்பு-இறப்பு ஆகிய சூழலில் உழலுகின்றனர்.

**"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அது கண்டு அருள் புரியாநிற்கும்**
**எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை**
**நண்ணறியாமல் நழுவுகின்றார்களே"**

*(திருமந்திரம் 1828)*

மலரும், நீரும் சிவபூசைக்கு

இன்றியமையாதவை என்று திருமூலர் தெளிவாக, ஏழாம் தந்திரத்தில் சிவபூசை என்கிற பகுதியில் சொல்கிறார். தேவர்களும், பூவுலகில் இந்தச் சாதனங்களைப் பயன்படுத்திச் சிவபுண்ணியம் செய்ததன் பலனாகக் கிடைத்த இன்ப அனுபவங்களை விண்ணுலகில் என்றும் துய்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

முருகநாயனார் சிவனடியார்களில் ஒருவர். திருப்புகலூரில் அவதாரம் செய்தவர். திருஞான சம்பந்தருக்கு சமகாலத்தவர். சிவபெருமானிடம் ஆழ்ந்த பற்றுடையவர். சிவபெருமானுக்கு மலர்த்தொண்டு செய்வதில் புகழ்பெற்றவர். அவர் மேற்கொண்ட பணியை, சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் சிறப்பாக எடுத்துரைக்கின்றார்.

பொழுது புலர்வதற்கு ஒரு மணிநேரத்திற்கு முன்னதாகவே விழித்தெழுந்து, காலைக் கடன்களை முடித்துக் கொண்டு திருநீறு உடல் முழுவதும் பூசிக் கொண்டு, நந்தவனம் செல்வார். பறிப்பதற்குத்தகுந்த மலர்களைச் சிவசிந்தனையுடன் பறிப்பார்.

பிறகு விதவிதமான மாலைகளைக் கட்டி ஆறுகாலங்களிலும் இறைவனுக்குச் சாத்துவார். மலர்களைப் பறிக்கும் போதும், அர்ச்சனை செய்யும் போதும் ஓயாமல்ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரிப்பார். முருகநாயனார் திருஞானசம்பந்தருக்குத் தோழராகிய பேற்றினைப் பெற்றார். ஆளுடைய பிள்ளையாருடைய திருமண நிகழ்ச்சிக்குச் சென்று, அங்கே எழுந்த சிவ சோதியில் கலந்தார்.

சரியை, கிரியை ஆகியநெறிகள் உள்ளத்தைப் பக்குவப்படுத்த உதவுகின்றன. அலையும் மனதை ஒருமுகப்படுத்துகின்றன. சிவப்பரம்பொருளைத் தன்னுள் கண்டு, அனுபவிப்பதற்கான ஒழுக்கத்தைத் தருகின்றன. சாலோகம், சாமீபம் ஆகிய பேறுகளைச் சரியை, கிரியை ஆகிய நெறிகளை மேற்கொள்ளும் ஆன்மாக்கள் பெற இயலும் என்று சைவ சாத்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

தொடரும்....

## வாசகர் எண்ணங்கள்



★ முன்னிலும் பன்மடங்கு பொலிவாய் வெளிவரும் திருக்கோயில் இதழ் உண்மையில் பக்தர்களுக்குப் பழநிப் பஞ்சாமிர்தமாய்த் தித்திக்கின்றது,

ஆணையாளர் அவர்கள் வடித்துள்ள தலையங்கம் திருக்கோயில்களின் பராமரிப்பில் அறநிலையத்துறை கொண்டுள்ள ஆர்வத்தைத் தெளிவுபடுத்துகின்றது,

**“திரிசேர் விளக்கெனக் காப்பார்**
**பொற்பாதம் என் சென்னியதே”**

என்ற பராக்கிரமபாண்டியன் கல்வெட்டு எங்கள் உள்ளத்தை உருக்கியது,

“தமிழிசை வளர்த்த சீர்காழிமூவர்” கட்டுரை மிகமிக அருமை. இதுகாறும் அறியாத பல அரிய செய்திகளை வெளியிட்டிருந்தமைக்கு அரசுச் செயலர் அவர்களை மனமாரப் பாராட்டுகின்றேன்.

**- டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி**
சிங்கம்பட்டி ஜமீன்.

★ எனது குறத்தி ஆசைப்படுகிறாள் என்ற வார்த்தைக்குக் கட்டுப்பட்டு உடனேயே வைரபதக்கத்தைக் கழற்றித் தந்த ராணியின் பெருந்தன்மையை என்னவென்று சொல்வது?. இப்பேர்பட்ட பக்தி உள்ள கட்டபொம்மனைத் தூக்கிலிருந்து தடுத்திருக்கக் கூடாதா அந்த ஆண்டி என்ற ஏக்கத்தை ஏற்படுத்திவிட்டது “காலச்சுவடுகள்”.

**- திருமதி இந்திரா**
**ஆராஅமுதன்,**
திருவரங்கம்

★ கண்ணனாக இருந்தாலும் 7 1/2 நாட்டுச் சனி விடாது பிடிக்கும் என்பதை வெகு அழகாகத் தெரிவித்ததுடன் கடைசியில் நன்மையில் தான் முடியும்படி செய்வார் சனிபகவான் என்ற கருநிறத்தானின் கட்டுரை வெகு அருமை. “பழநியில் பங்குனி உத்திரம்” நேரிலே சென்று பழநியைத் தரிசித்த மனநிறைவை வழங்கியது,. மொத்தத்தில் தெய்வத் திருமணங்கள் பற்றிய இந்த பங்குனி மாத இதழ் அரியசெய்திகளுடன் அருமையாக இருந்தது.

**- ரங்கமணிபாட்டி**,திருவரங்கம்

★ தாரண ஆண்டில் “திருக்கோயில் இதழ்” புதுப் பொலிவுடன் தரணி போற்றச் சிறந்தது. வரும் பார்த்திப ஆண்டிலும் பார்முழுவதும் போற்றிடும் வகையில் “திருக்கோயில் இதழ்” சிறப்பும் புகழும் பெற வாழ்த்துகின்றேன்.

எல்லோரும் இன்புற்று இத்தரணியில் வாழ்ந்திடவே ஏற்றமிகு திருக்கோயில் பொற்பணிகள் ஆற்றிடுக. பார்த்திப நல்லாண்டில் திருக்கோயில் இதழ் சீர்மிகவே சிறந்திடுக.

**ஏ, பட்டம்மாள் ஆனந்தா**, இராஜகீழ்ப்பாக்கம்
சென்னை-73.

# "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே"


**பு.ஏ. இராமையா,** இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,
தமிழ்வளர்ச்சி-பண்பாடு மற்றும்
அறநிலையத்துறை.




பக்தி இலக்கியங்களில் பல்வேறு அடியார்கள் குறிப்பாக 63 நாயன்மார்கள் சிவபெருமானை வேண்டிச் சாகா வரம் பெற்று வாழ்ந்து சரித்திரங்களை மாற்றிய நிகழ்ச்சிகளும் கதைகளும் உண்டு. துர்நடவடிக்கை மூலமும் பேராசைச் செயல்கள் மூலமும் பல இன்னல்களையும், இடைஞ்சல்களையும் பெற்று எல்லோருடைய அவப்பெயருக்கும் உள்ளான அசுரர் பற்றிய கதைகளும் உண்டு.

ஆயிரம் ஆண்டு காலம் வாழவேண்டும் என்று ஆசைப்பட்டு ஆதி சிவனிடம் வரத்தைப் பெற்றுப் பின் வாழ்க்கையில் அழியாத வடுவோடு மறைந்த மா பாவிகளும் உண்டு. இப்பேர்ப்பட்ட வேண்டுகோள்களையும், விண்ணப்பங்களையும் மனித வாழ்க்கையில் வைத்து இருப்பது ஒரு சாதாரண மனிதனுடைய இயல்பு. லௌகீக வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள், பேராசை கொண்டவர்கள் எல்லாம் இது போன்ற வேண்டுகோள் களையும், விண்ணப்பங் களையும் அனைத்து பகுதிகளிலும் வைத்து வாழ்வது இயல்புதான். அதை வாழ்க்கையின் பிணைப்பு என்றே கூறலாம்.

ஆனால் எவ்வித ஆசையும் இல்லாமல் மனித சமுதாயம் உய்ய வேண்டும் என்று தன் வாழ்நாள் முழுவதும் அளப்பரிய தியாகங் களைச் செய்த தெய்வப் பிறவிகளும், செம்மல்களும், தியாகிகளும் உண்டு. அண்ணல் காந்தியடிகளை எடுத்துக் கொண்டோமேயானால் அவர் காலமெல்லாம் மனித சமுதாயம் முன்னேற வேண்டு மென்று ஓயாது உழைத்து வரலாற்றில் ஒரு உன்னதமான இடத்தைப் பெற்றார். ஒரு பற்றற்ற வாழ்க்கையைத் தேர்வு செய்து இந்திய வரலாற்றில் ஒரு ஈடு இணையற்ற பெரும் புகழைத் தேடிக் கொண்டார். நிறவெறிக் கொடுமையை எதிர்த்து, தன் வாழ்நாள் முழுவதும் போராடி 27 ஆண்டுகள் சிறையில் வாழ்ந்து சேவை செய்த செம்மல் நெல்சன் மண்டேலா போன்ற சமுதாயச் சிற்பிகளும் உண்டு.



அதுபோல் பல அருளாளர்கள் குறிப்பாக அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர், காரைக்காலம்மையார், ஆழ்வார்கள் எல்லாம் தனக்கென வாழாமல் பிறருக்காக வாழ்ந்து பற்றற்ற வாழ்க்கையைக் கடைப்பிடித்து எந்தவித ஆசையும் இல்லாமல் ஆண்டவனை அனுதினமும் வணங்கி அவனுடைய காலடியிலேயே இருக்கக் கூடிய பேறு ஒன்றே போதும் என்று வேண்டியே தங்கள் வாழ்நாளைக் கழித்தனர். அதன் மூலம் மனித குலம் தழைக்க மிகப் பெரிய செய்தியை அனுப்பினார்கள். ஒழுக்கமான வாழ்க்கை, பற்றற்ற நிலை போன்றவற்றைக் கொண்டால் பரமனை அடையலாம் என்ற செய்தியைப் பாமர மக்களுக்கும் தெரியப்படுத்தினார்கள்.



"யாம் இரப்பவை
பொன்னும்
பொருளும் அல்ல;
நின்பால்
அருளும் அன்பும் அறனும்"

என்று பரிபாடலின் புலவர் கடுவன் இளவெயினனார் கூறுவார் தான் வேண்டுவதெல்லாம் பொன்னும் பொருளும் அல்ல. அன்பும் அருளும் அறமும்தான். பொன் பொருள் நிலையற்றதன்மை கொண்டவை. நிலைத்த பெருமையுடைய அறமும் அன்பும் தான் வேண்டுமென்கிறார் புலவர் கடுவன் இளவெயினனார். இப்புலவர் பெருமான் சொன்ன கருத்திற்கு அடையாளமாக தமிழ் மண்ணில் மிகப் பெரிய ஞானிகள் எல்லாம் தோன்றி அழியாப் புகழைப் பெற்றுப் பரம்பொருளாம் ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவனை அடைந்ததாக வரலாறு. அந்த வகையில் சைவ சமயக் குரவர்கள் என்று மக்களால் பெரிதும் போற்றிப் பாராட்டப்படும் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் மற்றும் அருணகிரிநாதர், காரைக்கால் அம்மையார், திருவருட்பிரகாச வள்ளலார் போன்ற பெருமக்கள். ஆதி சிவனின் அருள் மட்டும் தான் வேண்டும் என்று காலமெல்லாம் இறைவனுக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்.

இறைவன் அருளால் பெயர் சூட்டப்பெற்று பெரும் புகழ் கொண்ட திருத் தொண்டர்கள் மூவர் ஆவர். ஒருவர் திருநாவுக்கரசர். ஏனைய இரண்டு பேர்களும் கண்ணப்பரும், சிறுத்தொண்டரும் ஆவர். இதில் ஆண்டவன் மேல் எல்லையில்லாப் பற்று கொண்டு தேன் மதுரத் தமிழ் மணக்கும் தேவாரப் பாடல்களைத் திருநாவுக்கரசர் பெருமான் பாடி அருந்தமிழை வளர்த்தார்.

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனாருக்கும், மாதினியாருக்கும் இரண்டாவது மகனாக, தமக்கையான திலகவதியாருக்குப் பின் அவதரித்தார். பெற்றோர் இட்ட பெயர் மருணீக்கியார். இளமையிலேயே இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு தேவாரப் பாடல்களைப் பாடி 82-ஆம் வயதில் இறைவனோடு கலந்தார்.

காலம் காலமாக மனிதன் பேராசை கொண்டு பெரும் அல்லல் அவதியுற்றுக் கொண்டிருந்த காலகட்டங்களில் ஆண்டவன் அருளைத் தவிர, அவன் அருளாட்சியைப் பாராட்டுவதைத் தவிர எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம் என்று கூறுகின்றார். பற்றற்றான் பற்றினைப் பற்ற வேண்டும் என்ற ஆசையில் சிவபெருமான் திருவடியைப் பார்க்கக் கூடிய வாய்ப்பு ஒன்று கிடைக்குமானால் எனக்கு மீண்டும் ஒரு பிறவி வேண்டும் என்கின்றார் அப்பர் பெருமான். சாதாரணமாக நமது தர்ம முறையில் மறுபிறவி வேண்டாம். ஏன் என்றால் பிறப்பானது பல இடைஞ்சல்களுக்கும், இன்னல்களுக்கும் இழுத்துச் செல்லும். மனித பிறப்பு என்பது பிறருக்கு நன்மை செய்வதை விட்டுத் தீங்கு செய்யக் கூடிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது என்பது நாம் அறிந்த ஒன்று. அடுத்த பிறவி வேண்டுமானால் சிவபெருமானுடைய திருவடியை எந்த நேரமும் பார்த்து அவருடைய அருளைப் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்படுமேயானால் எனக்கு மனித பிறப்பு வேண்டுமென்று இறைஞ்சுகின்றார் அப்பர் பெருமான். அதுவும், பிறைச் சந்திரன் போல் புருவமும், கோவைப் பழம் போல் உள்ள சிவந்த வாயும், அதிலே உதிக்கின்ற சிரிப்பழகும், அழகான சடையும், அங்கம் முழுவதும் பூசப்பட்ட பால் வெண்ணீறும், மிகுந்த பேரழகு கொண்ட பொற்பாதமும் உடைய சிவபெருமானைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தால் இவ்வுலகத்தில் மீண்டும் பிறக்கும் நிலை வேண்டும் என்கிறார்.

தில்லைத்திருத்தலத்தில் இறைவன் திரு முன்பு ஊன் உருக, உள்ளம் உருக சிவபெருமானுடைய திருவடி வேண்டுமென்று பாடுகின்றார். மாநிலமெல்லாம் ஆள வேண்டும். மகிமை பெறவேண்டும், தனக்கு முன்னால் யாரும் நிற்கக் கூடாது என்ற எதேச்சதிகார மனப்பான்மை உள்ள இந்த உலகத்தில் இதுபோன்ற ஒரு வேண்டுகோளையும் அப்பர் பெருமான் எடுத்து வைக்கின்றார்.

**"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்**

**பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்நீறும்**

**இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்**

**மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"**

இந்த வேண்டுகோள் உண்மையில் அறம் வளர்த்து, அன்பு என்னும் நீர் பாய்ச்சி மனித வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இது போன்ற அருளாளர்கள் அளித்த அருள் தமிழ்ப் பாடல்களின் காரணமாகத்தான் ஏற்ற இறக்கங்கள் இருந்தால் கூட மனித சமுதாயம் இன்னும் கட்டுக்கோப்பில் இருக்கிறது என்பது உண்மையாகும். இந்த வேண்டுகோள் மனித சமுதாயத்திற்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும்.

★

## சித்திரையில் நாயன்மார்



குருபூசை நட்சத்திரங்கள்

| | | |
|---|---|---|
| பரணி | - | சிறுத்தொண்டர் |
| உரோகிணி | - | மங்கையர்க்கரசியார் |
| திருவாதிரை | - | விறன்மிண்டர் |
| சித்திரை | - | இசைஞானியார் |
| சுவாதி | - | திருக்குறிப்புத் தொண்டர் |
| சதயம் | - | திருநாவுக்கரசர் |



**மதுரகவியாழ்வார் நட்சத்திரம்**

சித்திரை - சித்திரை

இறைவனிடம் ஆராக் காதல் கொண்ட நாயன்மார்களின் அன்புக்கும் ஏனைத் தொண்டர்களின் அன்புக்கும் வேறுபாடு உண்டு. நாயன்மார்களின் சிவபக்தி உயிரினும் சிறந்தது. உலக இயல்புக்கு எட்டாதது. உலகியலை உணர்பவர்களுக்கு விளங்காதது.

இயற்பகையாரைப் பற்றிச் சொல்லவந்த

கருதவில்லை. அவர் செய்த செயலுக்குக் காரணம் பக்தி.

சிவபக்தருக்குத் தீங்கு விளைத்தமையால் அவர் தீங்கு விளைத்தவர்களைத் தண்டித்தார். சிவபக்தி உலகத்தில் உள்ள தனியாட்சித் தண்டனை அது என்று அவருக்குத் தோன்றியது. அவரை அரசன் தூக்கில் ஏற்றியிருந்தாலும் அதுபற்றி அவர் கவலைப்பட்டிருக்க மாட்டார்.

# செருத்துணை நாயனார்


**தா. சந்திரசேகரன்,** இ.ஆ.ப.,
அரசுச் சிறப்புச்செயலர், தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமயஅறநிலையத்துறை

சேக்கிழார் அவரை '**உலகியற்பகையார்**' என்று கூறுகிறார். அந்த நிலை அவருக்கு மாத்திரம் இருந்ததன்று. நாயன்மார்களில் பெரும்பாலானவர்களும், சிவபக்தியில் உருகி நின்று, உலகியலுக்கு மாறான செயல்களைச் செய்தவர்களே.

உலகியலோடு ஒட்டி வாழும் அன்பர்களுக்கு அது வெறியாகத் தோன்றும். உலகியலொழுக்கத்தையே போற்றும் மக்களுக்கு அது ஒழுக்க விரோதமாகத் தோன்றும்.

வீரர்களுக்குக் கோழையாகத் தோன்றும் நிகழ்ச்சிகள் உண்டு. அஹிம்ஸாவாதிகளுக்கு ஹிம்ஸையாகத் தெரியும் நிகழ்ச்சிகளும் உண்டு.

அவரவர்கள் தத்தம் நிலையிலிருந்து பார்க்கும்போது தம் சீரிய கொள்கைகளுக்கு எதிராகப் பல நாயன்மார் செயல்கள் இருப்பதைக் காணலாம். அத்தகைய செயல்களுக்கெல்லாம் எது மூல காரணம் என்பதை ஆராய வேண்டும்.



தம் உடல், பொருள், உயிர் மூன்றையும் வழங்கும் தியாகப்புத்தி உடையவர்கள் நாயன்மார்கள். அடியார் நலன் கருதிச் செய்யத் கூடாத செயல்களையும் செய்பவர்கள். பக்திக்கு மாறான செயல் செய்பவர்களைத் தாமே தண்டிப்பவர்கள். இவை யாவும் உலகியலுக்கு மாறானவையே. தனி மனிதனது ஒழுக்க வகையிலும், சமுதாய அற வகையிலும் வைத்துப் பார்த்தால் இந்தச் செயல்களைப் பாராட்டத் தோன்றாது. இந்தச் செயல்களால் விளைந்த விளைவைக் காணும் கண்ணுக்கு இவை செய்யத் தகாதவை என்றே தோன்றும்.

நாயன்மார்கள் செய்த செயலுக்கு மூல காரணம் பக்தி. தனக்குப் பகையாக இருக்கும் ஒருவனை ஒரு மனிதன் கொன்று விடுகிறான். அவன் கொலையாளியாகிறான். ஆனால் எறிபத்த நாயனார் யானையைக் கொன்று பாகர்களையும் கொல்கிறார். அவரை அரசன் கொலையாளியாகக்

ஆனால் இவற்றைச் செய்வதற்குக் காரணமான நோக்கம் என்ன? இவற்றால் இவற்றைச் செய்பவர்களுக்கு நேரே உண்டான நலம் ஏதேனும் உண்டா என்பதை ஆராய்ந்தால், அவர்களின் செயலில் குற்றம் காணும் எண்ணம் உண்டாகாது. பக்திமுறுகி விட்டால் அதுவும் ஒரு வெறியாகவே மாறும்; கொள்கையில்லாத வெறி யாவருக்கும் தீங்கு பயக்கும். ஆனால் இந்த முறுகிய பக்தியோ, கொள்கையிற் பிறழாமல் நிற்கும்.

கழற்சிங்க நாயனார் இறைவனுக்காக இருந்த மலரை எடுத்த தம் மனைவியின் கையைத் தடிந்தார். அதனோடு தொடர்புடையது செருத்துணை நாயனாரது வரலாறு.

சோழ நாட்டுப் பகுதியாகிய மருகல் நாட்டில் உள்ள தஞ்சாவூரில் தோன்றினவர் செருத்துணையார். மன்னர்களுக்குப் போரில் துணையாகச் செல்லும் இயல்புடையராதலின் அந்தப் பெயர் வந்ததென்று தோன்றுகிறது. வேளாண் குடியிலே பிறந்த இவர் இறைவனிடத்தில் மெய்யன்புடையவராகிப் பல திருத்தொண்டுகளைச் செய்து வந்தார். திருவாரூர்த் திருக்கோயிலில் ஈடுபாடு மிக்கவர் அவர். அங்கே உரிய காலங்களில் சென்று திருத்தொண்டுகளைச் செய்து வந்தார்.

ஒரு நாள் பல்லவ அரசனும் அவனுடைய பட்டத்தரசியும் அங்கே தரிசனத்துக்கு வந்தார்கள். திருவலங்கல் கட்டும் மண்டபத்துக்கு வந்தபோது புறத்தே விழுந்திருந்த மலர் ஒன்றை எடுத்து மோந்து பார்த்தாள் அரசி. அதனைச் செருத்துணையார் பார்த்தார். அவருக்கு அச்செயல் பொறுக்கவில்லை.

அரசி மோந்து பார்த்ததுபுறத்தே விழுந்து கிடந்த சிறு மலர்தான். செருத்துணையார் அரசியின் மனோபாவத்தை எண்ணினார். 'இந்தச் சிறு மலரைச் சிவனுக்குரியது என்பதை மறந்து மோந்து பார்க்கும் இச்சிறு செயலே பின்பு இன்னும் பெரிய அபசாரங்களைப் புரிய காரணமாகும் 'என்று அவர் எண்ணியிருக்க வேண்டும்.

நெருப்பில் சிறு பொறி, பெரும் பொறி என்று வேறுபாடு இல்லை. பாம்பில் குட்டியென்றும் பெரிதென்றும் வேற்றுமை இல்லை. சிவாபசாரத்திலும் சிறிது பெரிதென்று அளவு காணக்கூடாது. இப்படியெல்லாம் ஓடிய அவர் சிந்தனையில் கோபம் மூண்டது.

உடனே அரசியைப் பிடித்து வீழ்த்தி அரிவாளால் மலரை மோந்த மூக்கை அறுத்து விட்டார். அவருக்கு அப்போது சிவாபசாரம் நேர்ந்து விட்டதே என்ற எண்ணம் ஒன்றுதான் இருந்தது. தாம் செய்யப் போகும் செயலின் விளைவை அவர் நோக்க வில்லை. இந்தச் செயலை செய்தார் யார் என்று கவனிக்கவில்லை. மலரை மோந்தது ஒரு மூக்கு; அதைத் தடிந்து விட்டார்.

இது சமுதாய அறத்திற்கோ, தனி மனிதனது அறத்திற்கோ இணங்கிய செயல் என்று சொல்வதற்கு இல்லை. ஆனாலும் உலகியலுக்கு அப்பாற்பட்ட முறுகிய சிவபக்தித் திறத்தால் விளைந்தது இது. இதைச் செய்ததனால் செருத்துணையாருக்கு நலம் ஒன்றும் விளையாது; தீங்கே விளையும். ஆயினும் அதை எண்ணாத அவருடைய பக்தி உணர்ச்சியிலே நிகழ்ந்த நிகழ்ச்சி இது. தம்முடைய மனைவியாக இருந்தாலும் இக்காரியத்தை அவர் செய்திருப்பார்.


கழற்சிங்கரும் அதைத்தானே பிறகு செய்தார்? 'மூக்கு மோந்து பார்ப்பதற்கு முன் கைதானே அதை எடுத்தது?' என்று கையைத் தடிந்தவர் அவர். இத்தகைய செயல்கள் நாம் பின்பற்றுவதற்காக அமைந்தவையல்ல. **சிவஅபராதம் சிறிதும் செய்யக்கூடாது என்பதை உணர்த்தும் வரலாறுகளே இவை என்று எண்ணிப் பார்த்து நாம் செம்மை நெறி ஒழுக வேண்டும்.** ★

# தங்கரதம்



***பண்ணாரி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன், திருக்கோயில், சிறுவாச்சூர் அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர் அருள்மிகு முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், கோவை அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் தங்கரதம் நிர்மாணிக்கப்படும்.***

மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் **திருமிகு பி.சி.இராமசாமி** அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து



அதியமான் பெற்றது இக்கஞ்சமலைச் சித்தரிடமே என வரலாறு கூறுகின்றது.

இக் கஞ்சமலை இரும்பால் செய்யப்பட்ட வீரவாள் தான் மாவீரன் அலெக்சாண்டர் கைகளில் உள்ளதாக கூறுவார்கள். சுமார் 8000 ஆண்டுகட்கு முற்பட்ட ஆலயம், கனிவளம் மிகுந்த இம்மலையில் அரிய பலமூலிகைகள் உள்ளன. பல ஊர்களிலிருந்தும் ஆராய்ச்சியாளர்களும், சித்தமருத்துவர்களும் இவ்விடம் வருகின்றனர்.

இம்மூர்த்தியின் பெயர் கஞ்சமலை அருள்மிகு சித்தேசுவரசுவாமி. மூலவர் ஓர் இளம் யோகியின் உருவம். சின்முத்திரையுடன் வீராசனத்தில் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறார். மூலஸ்தானம் மேலே வட்டமாக அமைந்த விமானத்துடன் கூடியது. அதற்கு முன் அர்த்தமண்டபம், மகா மண்டபம் வலப்புறம் உள்ளது. முருகப் பெருமானும், இடப்புறம் உற்சவர், சித்தரும், காளியம்மனும் உள்ளனர். திறந்த மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் நவக்கிரகம் உள்ளதைக் காணலாம். திருக்கோயிலுக்குத் தென்புறம் மாதேஸ்வரன் சன்னதியும் விநாயகர் சன்னதியும் உள்ளது.

இத்திருத்தலத்திற்கு தென் மேற்கில் கிழக்கிலிருந்து வடமேற்காக பொன்னி ஆறு

# கஞ்சமலை

# அருள்மிகு சித்தேசுவர சுவாமி திருக்கோயில்

**- ஏ. கிருஷ்ணன்**

மணம் கமழும் தமிழ்த் திருநாட்டில் மலைகளிலும், குகைகளிலும் எத்தனையோ சித்தர்களும், யோகிகளும் இன்றும் தவம் செய்து வருகிறார்கள் என்பது காணலாம்.

சேலம் மாநகருக்கு மேற்கில் 15 கி.மீ. தொலைவில் இளம்பிள்ளை என்ற ஊருக்கு செல்லும் நெடுஞ்சாலையில் கஞ்சமலையின் அடிவாரத்தில் அருள்மிகு சித்தேசுவரசுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. இம்மலை கிழக்கு மேற்காக உள்ள நீண்ட தொருமலைத் தொடர். இக்கோயிலிலிருந்து கிழக்கில் சுமார் 10 கி.மீ. தொலைவு வரை மலை உள்ளது.

சித்தர் அடிபட்டு நல்ல அண்ணன் ஆன ஊர், இது நல்லண்ணம்பட்டி என இன்றும் வழங்கப்படுகின்றது. சித்தர்கள் செய்த செயற்கைத் தங்கத்தை மாத்துரைத்து ஆன ஊர்; ஏழுமாத்தானூர். முதியவர்களான இருவர் (கஞ்சமலை சித்தர் திருமூலர்) கறுத்த சோற்றை உண்டு இளம்பிள்ளை ஆன ஊர் இளம்பிள்ளை என வழங்கப்படுகின்றது.

இத்தகைய சிறப்பு மிக்க ஊர்கள் இத்தலத்தின் மேற்கில் இருக்கின்றன. வடகிழக்கில் சிறுகுன்றின் மீது அருள்மிகு பாலமுருகன் ஆலயமும், தெற்கில் அருள்மிகு காளியம்மன் திருக்கோயிலும் உள்ளன. தமிழ் வாழ வேண்டும் எனக் கூறி ஔவை மூதாட்டியிடம் கொடுத்த கருநெல்லிக்கனியைக் என்றழைக்கப்படும் சித்தர் சிற்றருவி உள்ளது.

சித்தர் அருளால் என்றும் வற்றாத ஜீவ நதியாக ஓடுகின்றது. பொன்னி ஓடையில் கிடைக்கப் பெற்ற பொன்னால்தான் சிதம்பரம் நடராஜர் பொற்சபை பராந்தக சோழனால் பொன் ஓடுகளால் வேயப்பட்டுள்ளது. இக் கோயிலுக்கு மேற்புறம் ஸ்காந்த தீர்த்தம் என அழைக்கப்படும் திருக்குளம் உள்ளது.

இக்குளத்தில் உப்பு,வெல்லம், மிளகு ஆகிய பொருட்களை இட்டுச் சித்தரை வணங்க, கஷ்டங்கள் நீங்குவதுடன் உடம்பில் உள்ள தோல் வியாதிகளும் கரைந்து விடுகின்றன. உப்பு,வெல்லம், தண்ணீரில் கரைவது போல உடம்பிலுள்ள வியாதிகளும் கரையும் என்பது நம்பிக்கை.

ஒவ்வொரு மாதமும் அமாவாசைதினங்களில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் அருள்மிகு சித்திரைத் தரிசனம் செய்து வருகிறார்கள். சித்திரை மாதம் 3வது செவ்வாய்க் கிழமை சித்தர் சிறப்புத் திருவிழா நடைபெறுகின்றது.

அமாவாசையில் அருள்மிகு சித்தரை தரிசித்தால் கோரும் நலம் யாவும் பெறலாம்.

**கோயிலுக்குச் செல்லும் வழி : சேலத்திலிருந்து இளம்பிள்ளை வழி கஞ்சமலை அருள்மிகு சித்தேசுவர சுவாமி திருக்கோயிலுக்கு பஸ் மூலம் வரலாம்.**

★

# திரைலோககி, க்ஷீராப்தி சயன நாராயணப் பெருமாள்,

ஜி. கிருஷ்ண ரத்தினம்



கலியுகத்தில் நித்ய கர்மானுஷ்டானங்களும், ஞான வைராக்கியங்களும், பக்திப் பரவசமும் நாளுக்கு நாள் தேய்ந்து வருகின்றன. ஆனால், பரமனோ, தன்னை மறந்தவர்களைக் கூட நேசித்து, உய்விக்கக் காத்திருக்கின்றான்.

காலங்காலமாய்த் தவமிருந்து அறிய வேண்டிய தன்னை, இந்த வேடிக்கை மனிதர்கள் மிக மிகச் சுலபமாய் அறியட்டும், தரிசிக்கட்டும், தஞ்சமடையட்டும், மேன்மையடையட்டும், வையத்துள் வாழ்வாங்கு வாழட்டும், கடைத்தேறட்டும் என்ற பரிபூரண சிந்தனையுடன் அர்ச்சாவதாரம் என்ற சுலப நிலைக்கு வந்து இறைவன் திருக்கோயில்களில் குடிகொள்கிறான்.

தாயுமானவர் சொன்னபடி, "நெஞ்சகமே கோயில்; நினைவே சுகந்தம்; அன்பே மஞ்சன நீர்; பூஜை கொள்ள வாராய் பராபரமே" என்ற திண்மை நம்மில் பலருக்கு இல்லை. ஆழ்வார்களும், நாயன்மார்களும் எம்பெருமானின் .உதாரணகுணத்தை அவரது அர்ச்சாவதாரத்தில் உணர்ந்து, அனுபவித்துப் பாடல்களாய்ப் பாடி வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஓர் அற்புதத் திருத்தலம் தான் 'திரிலோக்கி' என்ற ஊரில் உள்ளது. 'திரிலோக சுந்தரம்' என்பது ஊரின் பெயர்.


முதலாம் ராஜராஜ சோழனின் மனைவியருள் ஒருவராகிய 'திரைலோக்கிய மாதேவியார்' என்பவர் பெயரில் உண்டான ஊர். இங்குள்ள பெரிய சிவன்கோயில்மூலவர் சுந்தரம் எனப் பெயர் கொண்டவர். அதனால் திரைலோக்கிய சுந்தரம் என ஆனது. பழங்காலத்தில் இவ்வூர், 'திரைலோக்கிய மாதேவியார் சதுர்வேதி மங்கலம்' என அழைக்கப்பட்டுள்ளது.

இத்தலம், தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாளுக்குத் தென் கிழக்கில், 5.கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம், மயிலாடுதுறை, திருப்பனந்தாள் முதலிய ஊர்களிலிருந்து பேருந்து வசதி உண்டு. திருப்பனந்தாளிலிருந்து, ஆட்டோவிலும் பயணிக்கலாம்.

இவ்வூரில் உள்ள கோயில்களில், ஸ்ரீ சுந்தரேஸ்வரர் - அகிலாண்டேஸ்வரி, கைலாசநாதர் கோவில்களும், க்ஷீராப்தி சயன நாராயணப் பெருமாள் திருக்கோயிலும் பிரசித்தமானவை. இப்பெருமாள் கோயில் ஊருக்குள் சற்றுத் தள்ளி, உட்புறமாய் இருக்கிறது. திருமாலுக்கும் லக்ஷ்மிக்கும் சிவபெருமான் ரிஷபாரூடராகக் காட்சியளித்ததும், இத்தலத்தில் தான்.

இங்குத் திருமால், பெரிய பாம்பணை மேல், சயன கோலத்தில் பெரிய திருமேனியுடன் காட்சி தருகிறார். பாற்கடலில் உறைவதால், க்ஷீராப்திசயனர் ஆனார். இவரைப் பார்த்தவுடனேயே நமக்கு நினைவுக்கு வருவது **"க்ஷீர சாகர சயன"** என்ற தியாகராஜ ஸ்வாமிகளின் தேவகாந்தாரி ராகப் பாடல்தான். **"பாற்கடல் அலைமேலே பாம்பணையின் மடியில், பள்ளி கொண்ட ரங்க நாதா"** என்ற அற்புதத் தமிழ்ப் பாடலும், நினைவலையாய் எழுகின்றன.

இந்தத் தலம் பற்றிய புராண வரலாறு இதுதான். இத்தல மகிமை பற்றி மார்க்கண்டேய முனிவரிடமிருந்து லக்ஷ்மி



கேட்டறிந்தாள். திருமாலிடமிருந்து க்ஷணநேரமும் பிரியாதிருக்கும் வரம் பெற வேண்டி மகாலக்ஷ்மி, இத்தலத்தில் உள்ள க்ஷீர தீர்த்தத்தில் நீராடி ரிஷபாரூடரை வணங்கி, வில்வ மரத்தடியில் அமர்ந்து தவமியற்றினாள். அப்போது திருமகளிடமிருந்து வெளிப்பட்ட இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய ஸ்வாச நாளங்களிலிருந்து தோன்றியதுதான் திரிதளம் என்ற மூன்று தள வில்வம். வில்வாஷ்டகம் என்ற வடமொழி கிரந்தம், த்ரி தளம் என்ற சொல்லிலேயே ஆரம்பமாகிறது.

மகாலட்சுமியின் இந்தத் தவத்தை அங்கீகரித்து, அவருக்குத் தன்பால் உள்ள அன்பை உணர்ந்து, திருமால் மகாலக்ஷ்மிக்குத் தன் திருமார்பை அளித்தார்.

சுதையினால் ஆன இத்திருமேனி, எப்பொழுதும் தைலக் காப்பில் உள்ளது. பெருமாள் தலையைத் தென்பால் வைத்துக் கிழக்கு நோக்கிய பார்வையுடன் உள்ளார். ஐந்து தலை கூடிய ஆதிசேஷன் மேல் பள்ளி. நாபிக் கமலத்தில் பிரம்மா மற்றும் ஸ்ரீ தேவி பூமிதேவி சகிதராகக் காட்சி.

இதைக் காண்கையில்,

“முன்னை வண்ணம் பாலின் வண்ணம்
முழுதும் நிலைநின்ற
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்,
வண்ணம் எண்ணுங்கால்,
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம்
புரையும் திருமேனி
இன்ன வண்ணம் என்று காட்டீர்”

என்று திருஇந்தளூரிலேயே திருமங்கையாழ்வார் பாடிய பெரிய திருமொழியே நம் நினைவுக்கு வரும்.

இத்தலத்தில், யோக நரசிம்மர், விஷ்வக்ஸேனர் இவர்களுக்கும் மூர்த்தங்கள் உண்டு. மஹாமண்டபத்தில் வரதராஜர் மற்றும் ஆஞ்சநேயர் சந்நிதிகள் உள்ளன. வெளிமண்டபத்தில் தெற்குப் பார்த்த விஷ்ணு துர்க்கை. பலி பீடமும், கருடாழ்வார் சந்நிதியும் உள்ளன. க்ஷீர தீர்த்தம் புஷ்கரணி; தலமரம் வில்வம்.

வில்வம் தல விருட்சமாய் ஒரு பெருமாள் கோயிலில் இருப்பது வெகு அபூர்வம். சைவ-வைணவ ஒற்றுமைக்கு இது சான்றுதானே!

இக்கோயிலில், வைகானச ஆகமப்படி பூஜைகள் நடந்து வருகின்றன. தனுர் மாதம் காலையில் பூஜைகள் நடத்தப்படுகின்றன. வைகுண்ட ஏகாதசிக்கு மட்டும், பெருமாளுக்குச் சற்று விமரிசையான வைபவம்.

இத்தலத்திற்கு வந்து இங்கு உறையும் பெருமாள், மகா லெட்சுமியைத் தரிசனம் செய்வோர்களுக்குத் தாம்பத்ய ஒற்றுமை, மாங்கய பலம், ஸ்திர சொத்துக்கள் கூடும் வாய்ப்பு, இழந்த பொருட்களை மீண்டும் அடைதல் போன்ற நல்ல மாற்றங்கள், வாழ்வில் நிகழும் என நம்பப்படுகின்றது.

★


திருக்கோயில்
திங்கள் இதழ்



சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| தனி இதழின் விலை | - ரூ | 10/- |
| ஓராண்டுச் சந்தா | - ரூ | 120/- |
| பத்து ஆண்டுச் சந்தா | - ரூ | 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | - ரூ | 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**“திருக்கோயில்” இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

திருத்திய விளம்பரக் கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| 1 | பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) ரூ. | 15,000/- |
| 1 | முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) ரூ. | 10,000/- |
| 2 | பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) ரூ. | 7.500/- |
| 3 | உள்புறம் முழுப்பக்கம் ரூ. | 5,000/- |
| 4 | உள்புறம் அரைப்பக்கம் ரூ. | 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை-600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# சுந்தரரை வா என்றழைத்த
# திருமழபாடித் திருக்கோயில்

**கி. ஸ்ரீதரன்** . எம்.ஏ.,
பதிவு அலுவலர்,
தொல்லியல் துறை, சென்னை.

காவிரி ஆற்றின் வடகரைத் தலங்களில் மிகச் சிறந்த தலமாக திருமழபாடி வைத்தியநாதசுவாமி திருக்கோயில் விளங்குகிறது. பாடல் பெற்ற தலம்.

பல்லவ மன்னரான ஐயடிகள் காடவர்கோன் நாயனார் தன்னுடைய சேத்திர வெண்பாவில் '**மழபாடி ஆண்டானை ஆரமுதை நெஞ்சே நினை**' என்று மனம் உருகிப் போற்றுகின்றார்.

தேவார மூவரான ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் இத்தலத்து இறைவனைப் போற்றிப் பாடியுள்ளனர். '**மழபாடி வைரத்தூண்**' என்று நாவுக்கரசர் பெருமான் போற்றுகின்றார். '**மழபாடி மருந்து**" என்றும், "**மழபாடியைப் புரிந்து கைதொழுமின் வினையாயின போகுமே**" என்றும் சம்பந்தர் பெருமான் போற்றுகின்றார்.

சுந்தரர் பெருமான் காவிரி தென்கரையில் உள்ள திருவாலம் பொழில் தலத்தைத் தரிசித்து விட்டு உறங்கிய பொழுது இறைவன் அவர் கனவில் தோன்றி "மழபாடி வர மறந்தனையோ?" எனக் கேட்க, சுந்தரர் பெருமான்

**"பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை . நினைக்கேனே"**

என்று போற்றுகின்றார்.

இத்தலத்து இறைவன் வைத்திய நாதர், மழுவாடீசுவரர், வைரத்தூண் நாதர், வச்சிரதம்பேசுவரர் என்றும், இறைவி அழகம்மை (சுந்தராம்பிகை) என்றும் அழைக்கப்படுகின்றார். இத்தலத்தின் தலவிருட்சம் பனைமரம். எனவே இவ்வூர் 'தாலவனம்' என அழைக்கப்படுகிறது. சந்திரன் களங்கத்தை அகற்றியதால் வைத்தியநாதர் எனவும் அழைக்கப்படுவதாக புராண வரலாறுகளால் அறிகிறோம். இத்தலத்தின் பெருமைகளைக் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் . அருளிய திருமழவாடிப்புராணம் எடுத்துக் கூறுகிறது.

மார்க்கண்டேய முனிவரின் பொருட்டு இறைவன் மழு ஏந்தி நடனமாடிக் காட்சி தந்தமையால் இத்தலம் மழுவாடி எனப் பெயர் பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது. இக்கோயிலில் "மழுவாடீசுவரர்" என்று திருமேனி வழிபடப்பெறுகிறது.

தமது நான்கு கரங்களில் மேலிரு கரங்களில் சூலமும், பாசமும் ஏந்தியுள்ளார். வலது முன் கரம் மழுவை ஓங்கிய நிலையிலும், இடது முன் கரம் வலக்காலின் கீழே கிடக்கும் காலனை (யமனை) சுட்டிக் காட்டுகிறது. சிவபெருமான் காலனைக் கடிந்த கோலம் இக்கோயிலில் அற்புத வடிவமாகக் காட்சி தருகிறது.

இக்கோயிலில் காணப்படும் 100க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் இக்கோயிலின் வரலாற்றுச் சிறப்பினையும், வழிபாட்டுச் சிறப்பினையும் எடுத்துக்கூறுகிறது. சோழ, பாண்டிய, போசள, விஜய நகர



மன்னர்கள், அரியலூர் மழவராயர்கள் இக்கோயிலுக்குப் பெருந்தொண்டு செய்துள்ளனர்.

இறைவன் திருமழுவாடி ஆழ்வார், திருமழுவாடி உடையார் என்றெல்லாம் பெயரிட்டு அழைக்கப்படுவதைக் காண்கிறோம்.

இறைவன் அபிடேகத்திற்காக காவிரி ஆற்றிலிருந்து நீர் எடுத்து வரவும், பால் அபிஷேகம் செய்யவும், தும்பை மலர் சாற்றவும் தானம் வழங்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அரச மாதேவியர்களும், அரச குலப் பெண்கள் பலரும் தானமளித்துள்ளனர். குறிப்பாக செம்பியன்மாதேவி இக்கோயிலுக்கு பெருந்தொண்டு செய்துள்ளார்.

"உத்தமசோழனின் தேவி மழபாடித் தென்னவன் மாதேவி" எனக் குறிப்பிடப்படுகிறார். முதலாம் இராஜாதிராஜசோழன் கல்வெட்டில் பெண்கள் அதிகாரிகளாக இருந்தது குறிப்பிடப்படுகிறது. அவர்கள் 'அதிகாரிச்சி' என அழைக்கப்பட்டனர்.

மேலும் திருமழபாடியைச் சுற்றியுள்ள ஆலம்பாக்கம், பழுவூர், கண்டராதித்தம், செம்பியக்குடி எனப்படும் செம்பியன் மாதேவிக்குடி என்ற ஊர்கள் வரலாற்றுச் சிறப்புடன் விளங்குகிறது. சோழர் வரலாற்றில் திருமழபாடி திருக்கோயில் முக்கிய இடம் பெற்று விளங்குகிறது என்றால் மிகையில்லை!

திருமழபாடித் திருக்கோயிலில் நடைபெறும் விழாக்களில் பங்குனி மாதம் நடைபெறும் நந்திதேவர் திருமணவிழா மிகவும் சிறப்பானது. பங்குனி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் நந்திதேவருக்கும், சுயசாம்பிகை தேவிக்கும் திருமணம் நடைபெறுகிறது.

திருமண நாள் அன்று காலையில் திருவையாற்றிலிருந்து ஐய்யாரப்பன், மாப்பிள்ளை நந்திதேவர், மணப்பெண் சுயசாம்பிகை திருமழபாடி வருகின்றனர். மாப்பிள்ளை நந்திதேவர் குதிரைவாகனத்தில்





அழகிய தலைப்பாகை அணிந்து வெள்ளிச் செங்கோலுடன் எழுந்தருளுகிறார். மணப்பெண் சுயசாம்பிகை தனிப் பல்லக்கில் எழுந்தருளுகிறார். திருமழபாடி இறைவர் இறைவியும், கண்ணாடி பல்லக்கில் எழுந்தருளி மாப்பிள்ளை வீட்டாரை கொள்ளிடம் ஆற்றில் எதிர் கொண்டு அழைக்கின்றனர்.

பின்னர் திருமழபாடி ஊருக்கு எழுந்தருளும் ஐயாரப்பனுக்கும், நந்திதேவருக்கும் ஊரார் சிறப்பு வரவேற்பு அளிக்கின்றனர்.

மாலையில் கிழக்குக் கோபுரம் அருகே திருமணம் நடைபெறுகிறது. மேடையில் நந்திதேவர் மாப்பிள்ளைக் கோலத்தில் பெருமிதத்துடன் காட்சிதருகிறார். மணப்பெண் சுயசாம்பிகை சீர் வரிசைகளுடன் அழைத்துவரப்படுகிறார்.

இருவருக்கும் அபிஷேகம் செய்யப்பட்டு புத்தாடை அணிவிக்கப்படுகிறது. குருக்கள் திருமாங்கல்யத்தை எடுத்துத் தர நாத்தனார் எனப்படும் பெண், தாலியை சுயசாம்பிகை கழுத்தில் அணிவிக்கிறார்.

அனைவருக்கும் மகிழ்ச்சி! திருமணவைபவம் முடிந்து தீபாராதனை செய்விக்கின்றனர். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்படுகிறது.


நந்திதேவரும்- சுயசாம்பிகை தேவியும் தம்பதி சமேதராக ஊர் உலா வரும் பொழுது வாணவேடிக்கைகளுடன் வரவேற்கின்றனர். மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டை அலங்கரித்து தங்கள் இல்லத் திருமணம் போன்று நடத்தும் அற்புதக் காட்சியை இங்கே காணலாம். **நந்தி கல்யாணம் பார்த்தால் முந்தி கல்யாணம்** என்ற சொல் வழக்கு இப்பகுதியில் வழங்கப்படுகிறது. எனவே சுற்றுக் கிராமங்களிலிருந்து பெருந்திரளாக மக்கள் இங்கு கூடி வழிபடுகின்றனர். இத் தெய்வீகத் திருமணத்தைக் காண திருமழபாடி அவசியம் செல்ல வேண்டும். திருமழபாடித் திருக்கோயிலில் நடைபெறும் நந்திதேவர்-சுயசாம்பிகை தெய்வீகத் திருமணத்தைக் கண்டு மகிழ்வோம்! வளம் பெறுவோம்! ★

# பக்தர்களின் பாவம் தீர்க்கும்
# சித்ரகுப்தன் திருக்கோயில்

சிவபெருமான் சித்திரத்தில் ஒரு புத்திரன் வரைந்து உயிர் கொடுத்தார். அவர்தான் சித்திரபுத்திரர் எனும் சித்திரகுப்தன். காஞ்சிபுரம் நெல்லுக்காரத் தெருவின் மேற்குப்புறத்தில் பேருந்து நிலையத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது சித்திரகுப்தன் திருக்கோயில்.

கருவறையில் "சித்திராபுத்திரர்" தமது தேவியான கருணகிதேவியுடன் நின்ற கோலத்தில் எழுந்தருளுகின்றார்.

சித்திரகுப்தர் தம் தேவியுடன் எழுந்தருளியுள்ள இத்திருக்கோயில் உலகில் ஒரே தனித் திருக்கோயில் என்பது குறிப்பிடத்தக்கது.



சித்திரா பௌர்ணமியில் இத்திருக்கோயிலில் நடைபெறும் திருக்கல்யாண உற்சவம் மிகச் சிறப்பானது.

முரடனாக வளர்ந்து பாவங்களையே நித்தமும் செய்துவந்த தம் ஒரே மகன் நரகத்தில் என்ன பாடுபட நேருமோ என்று வருத்தப்பட்டாள் ஒரு தாய்.

"மகனே! நான் நல்லது எதைச் சொன்னபோதும் நீ கேட்காமல் மகாபாவங்களையே செய்து வாழ்கிறாய்! என் இறுதி மூச்சு முடியப் போகும் இவ்வேளையில் நான் சொல்லும் இறுதியான அறிவுரை இதுதான். தயவு செய்து கேள்!" என்று வாஞ்சையோடு உரைத்தாள் அத்தாய்.

"சித்ர குப்தாய நம" என்று தினமும் சொல்லி வா. உனக்குச் சித்ரகுப்தன் நல்ல வழி காண்பிப்பார் என்று அறிவுரை கூறி மறைந்து போனாள் அவள்.

அன்று முதல் அம்முரடனும் தினமும் ஒரு முறை "சித்ர குப்தாய நம" என்று கூறிவந்தான்.

உலகில் பரம்பொருள் சிவன், திருமால், பிரம்மா, சக்தி, விநாயகர், முருகன் எனப் பற்பல பெயர்களில் அருள் பாலிக்க, இம்முரடன் "சித்ரகுப்தாய நம" என்று தம் பெயர் உச்சரிப்பதைக் கண்டு உளம் மகிழ்ந்தார் சித்ரகுப்தர்.

ஒருநாள் சித்ரகுப்தர் அம்முரடனின் ஏட்டைப் புரட்டிப் பார்க்க அவன் ஏழுநாளில் இறந்து போவான் என எழுதியிருக்கக் கண்டார்.

அம்முரடனின் கனவில் சென்று "நீ செய்யாத பாவங்களே இல்லை. உடனே உன் நிலத்தில் ஒரு குளம் வெட்டு. ஒரு மாடு அதில் நீர் அருந்தினால் நீ மூன்றே முக்கால் நாழிகை சுவர்க்கவாசம் செய்வாய். இப்படி உன் குளத்தில் தினமும் பல மாடுகள் நீர் அருந்தினால் நிரந்தரமாக சொர்க்கவாசம் அனுபவிக்கலாம்" என்று கூறி மறைந்தார்.

முரடனும் சித்ரகுப்தன் கூறியவாறு ஒரு குளம் வெட்டினான். ஏராளமான ஆட்கள் இரவு பகலாக வேலை செய்தும் பொட்டு தண்ணீர் குளத்தில் ஊறவில்லை. எல்லாம் அவன் செய்த பாவ வினை.

ஏழாவது நாள் குளத்தில் ஓர் ஓரத்தில் மிக மெல்லிய ஊற்று சுரந்தது. சித்ரகுப்தனே மாடாக வந்து முதலில் நீர் அருந்தினார்.

சித்ரகுப்தன் மாடாக நின்று குரல் கொடுக்க மேலும் பல மாடுகள் ஓடிவந்தன. அதில் ஒரு மாடு தண்ணீர் குடித்த வேளையில் முரடனின் உயிரும் பிரிந்தது.

யமதர்மன்முன் குளம் வெட்டிய முரடன் நிறுத்தப்பட்டான்.

சித்ரகுப்தன் ஏடுகளைப் புரட்டிப் படித்தான். "இவன் பெரும் பாவி.ஒரே ஒரு புண்ணியம் செய்துள்ளான். உயிர் பிரியுமுன் இவன் வெட்டிய ஒரு குளத்தில் ஒரே ஒரு மாடு தண்ணீர் குடித்துள்ளது".

"மூன்றே முக்கால் நாழிகை, இவன் விருப்பப்படி இவனை முதலில் சொர்க்கம் கொண்டு செல்லுங்கள். பிறகு நரகத்தில் வாட்டுங்கள்" என்று ஆணை பிறப்பித்தார் எமதர்மராஜா.

முரடன் சொர்க்கத்திற்கு அனுப்பப்பட்டான். அவன் வெட்டிய குளத்தில் மாடுகள் தொடர்ந்து வந்து தண்ணீர் குடித்தன. அதனால் அவன் புண்ணியக் கணக்கு ஏறிக் கொண்டே போக, சொர்க்கத்திலேயே சுகமாக இருக்கலானான்.

சித்திரகுப்தனை வழிபட்ட பயனாக அப் பாவியும் சொர்க்கவாசம் பெற்றுவிட்டான். ★

# மாதவப் பெருமாள் கோயிலில் அலங்கார ராமாயணம்



அனுமந்த வாகன சேவை

ஸ்ரீ ராமனும், இலக்குவனும், சீதையும் இதர கதாபாத்திரங்களும் உயிர் பெற்று எழுந்து விக்கிரக உருவில் அலங்காரங்களுடன் நின்று காட்சிகளை விளக்கும் அலங்கார ராமாயணம், சென்னை- 4 மயிலாப்பூர் அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகிறது.

9 நாட்கள் நடைபெறும் ஸ்ரீ ராமநவமி உற்சவம் 8 நாட்கள் காட்சிகளால் விளக்கப்பட்டு 9-ம் நாள் அனுமந்த வாகனத்தில் ராமபிரான் காட்சி தருவது சிறப்பானதாகும்.

மேலும், இங்கு செய்யப்படும் அலங்காரங்கள் அனைத்தும் கம்பராமாயணக் களத்தை ஒட்டியே செய்யப்படும் அலங்காரங்கள் ஆகும்.

முதல்நாள் : விசுவாமித்திரர் யாகம் காத்தல்

இரண்டாம் நாள் : அகலிகை சாப விமோசனம்

மூன்றாம் நாள் : வில் முறித்தல்

நான்காம் நாள் : சீதா ராமர் திருமணம்

ஐந்தாம் நாள் : கங்கையைக் கடத்தல்

ஆறாம் நாள் : சூர்ப்பனகை கர்வ பங்கம்

ஏழாம் நாள் : மாரீசவதம்

எட்டாம் நாள் : ராமர் பட்டாபிஷேகம்

ஒன்பதாம் நாள் : அனுமந்த வாகன சேவை

"மாருதி தன்னை ஐயன் மகிழ்ந்து
இனிது அருளின் நோக்கி
ஆர்உதவிடு தற்கு ஒத்தார்
நீயலால் அன்று செய்த
பேருதவிக்கு யான்செய் செயல்
பிறிதில்லைப் பைம்பூண்
போர் உதவிய திண்தோளாய்
பொருந்துறப் புல்லுக என்றான்".

கம்பராமாயணப் பாடல்களை ஒட்டியே இத்திருக்கோயிலில் அலங்காரங்கள் நெடுநாட்களாய் செய்யப்பட்டு வருகின்றன.

தகவல் : **இரா. இரகுநாதன்**, செயல்அலுவலர்.



சீதாராமர் திருமணம்



சூர்ப்பனகை கர்வபங்கம்



இராமர் பட்டாபிஷேகம்


# நாடிய நாலாயிரத்தைத் தேடித் தந்த நாதமுனிகள்!



"ஜோதிடச் சக்ரவர்த்தி"
ஏ.எம்.ஆர்.

நமது அறியாமையினாலும், அலட்சிய மனப்பான்மையினாலும் நாம் இழந்த பொக்கிஷங்கள் பல.

அவ்வளவு ஏன்? மனிதகுலத்தின் அறிவுக் களஞ்சியமான வேதங்களில் கூட ஒருசிலவற்றையே இன்று நாம் அறிந்திருக்கிறோம். கடலனைய, கரையற்ற வேதங்களை நாம் அறிந்து கொள்வது அவ்வளவு எளிதல்ல என்பதை உணர்ந்த வியாச பகவான், நான்கு வேதங்களாக அவற்றை வகுத்து நமக்களித்து அருள் புரிந்திருக்கிறார். நம்மீது கொண்ட அன்பு, இரக்கம் ஆகியவற்றால், இத்தனை எளிதாக வேதங்களை நான்காக வகுத்தளித்தும் அவற்றின் பெருமைகளை நாம் உணர்ந்து கொள்ளவில்லை.



வேதங்களில் இல்லாத விஷயங்களில்லை. ஜெர்மானிய நாட்டு அறிஞர்கள் இன்றும் நமது வேதங்களையும், அவற்றில் பொதிந்துள்ள பொக்கிஷங்களையும், அதிகப் பொருட்செலவுகள் செய்து ஆராய்ந்து வருகின்றனர்.

இது போன்றே புரந்தரதாசர், ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் போன்ற மகான்கள் இயற்றியுள்ள பல்லாயிரக்கணக்கான ஈடிணையற்ற தெய்வீக சக்தி வாய்ந்த பாடல்களையும் கீர்த்தனைகளையும் நாம் இழந்துவிட்டோம். நமக்கு ஒரு சில தெய்வீகப் பாடல்களே இன்று கிடைத்துள்ளன.

ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்யப் பிரபந்தம், தமிழ்மறை அல்லது தமிழ் வேதம் என்று போற்றிப் புகழப்படுகிறது. பல காரணங்களினால் ஈடிணையற்ற இந்தத் திவ்யப் பிரபந்த பாசுரங்கள் ஒரு காலத்தில் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டன. ஆழ்வார்கள் அளவற்ற பக்தியுடன் பாடியுள்ள இந்தப் பாசுரங்களை நாம் எப்போது ஏன் இழந்தோம் என்ற தெரியவில்லை.

இன்று காட்டுமன்னார்கோயில் என்று பெயர்பெற்ற திருத்தலம். புராதன காலத்தில் வீரநாராயணபுரம் என்ற புகழ் பெற்ற திருத்தலமாக விளங்கியது. ஆச்சார அனுஷ்டானங்களில் பிரசித்திபெற்ற பல மகான்கள் அக்காலத்தில் இங்கு வசித்து வந்தனர். இந்தச் சிற்றூரில் தான் நாதமுனிகள் என்ற மகாபுருஷர் அவதரித்தார். இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள வீரநாராயணப் பெருமானுக்கும், ஸ்ரீமரகதவல்லித் தாயாருக்கும் நித்ய கைங்கர்யம் (தினப்பூஜை, ஆராதனை) செய்து வந்தார் இவர். ஒருநாள் அத்திருக்கோயிலுக்கு வந்திருந்த

யாத்ரீகர்களில் சிலர் - பக்திப் பரவசத்துடன் "ஆரா அமுதே, அடியேன் உடலம் அன்பாயே..." என்று ஆரம்பிக்கும் நம்மாழ்வாரின் பத்து திருவாய்மொழிப் பாசுரங்களை அனுசந்தித்தனர். (பாடினர்). அப்போது அதில்வரும், **ஓராயிரத்து இப்பத்தும்..;** என்று வரும் அடிகளை செவிமடுத்த நாதமுனிகள், அவற்றின் சொல் அழகையும், கருத்தாழத்தையும், பக்திச் சுவையையும் கண்டு அதிசயித்து, அவர்களைப் பார்த்து 'ஆயிரம் பாடல்களையும் நீவீர் அறிவீரோ?" என்று வினவ, "நாங்கள் அறிய மாட்டோம்" எனப் பதில் வந்தது.



அதிஅற்புதமான அந்த ஆயிரம் பாடல் பொக்கிஷங்களை எவ்விதமாவது கண்டுபிடித்தே ஆகவேண்டும் என்று அக்கணமே தீர்மானித்தார் நாதமுனிகள். அந்தப் பாசுரத்தில் **திருக்குருகூர் சடகோபன்** என்று வரும் வரிகளை மனத்தில் உறுதியாகப் பிடித்துக் கொண்டார். குருகூர் என்பது சிற்றூரான ஆழ்வார்திருநகரியாகும். ஆதலால், உடனடியாக ஆழ்வார்திருநகரிக்குச் சென்று, அங்குள்ள பெரியோர்கள் அனைவரையும் சந்தித்து, "அந்தத் திவ்யப் பிரபந்த ஆயிரம் பாடல்களை அறிந்தவர் எவரேனும் உண்டோ?" என்று நாதமுனிகள் விசாரித்தார். ஆனால் அங்கிருந்த எவருக்கும் அதுபற்றித் தெரியவில்லை என்பதையறிந்து மனமுடைந்து போனார்.

ஆனால், ஆழ்வார்த்திருநகரியில் இருந்த சில வைணவப் பெரியவர்கள் **ஸ்ரீ மதுரகவிகள் நம்மாழ்வாரைப் பற்றிப் போற்றிப் பாடிய கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்..** என்று ஆரம்பிக்கும் பத்துப் பாசுரங்களைப் பன்னிரண்டாயிரம் (பன்னீராயிரம்) தடவை, நம்மாழ்வார் எழுந்தருளியிருந்த புளிய மரத்தின் அடியில் அமர்ந்து ஜெபித்தால், அவரது தரிசனம் கிடைக்கும். அப்போது, நாம் இழந்த ஆயிரம் பாசுரங்களைப் பற்றியும் அவரிடமிருந்து அறிந்து கொள்ளலாம் என்று அறிவுரை கூறினார்கள்.

அதன்படியே, நாதமுனிகளும், மனஉறுதியுடன், மனத்தை நம்மாழ்வாரிடம் செலுத்திப் பக்தியுடன் பன்னிரண்டாயிரம் முறை அந்தப் பத்துப் பாசுரங்களையும் ஜெபித்தார். இதனால் திருவுள்ளம் மகிழ்ந்த ஸ்ரீநம்மாழ்வாரும் நாதமுனிகளுக்குத் தரிசனமளித்தார். தரிசனம் அளித்தது மட்டுமல்லாமல், நம்மாழ்வாரின் ஆயிரம் பாசுரங்களையும், அத்துடன் மற்றைய ஆழ்வார்களின் மூவாயிரம் பாசுரங்களையும் தந்தருளினார். அவை மட்டுமின்றி, அஷ்டாங்க யோக ரகஸ்யம் என்ற கிடைத்ததற்கரிய யோக ரகசியங்களையும் உபதேசித்து அருளினார். மேலும் **ரகஸ்யத்ரயம்** என்ற பரம சூட்சமமான மந்திர ரகசியத்தையும் நாதமுனிகளுக்கு உபதேசித்தார் நம்மாழ்வார்.

(பத்ரி ஆசிரமத்தில் ஸ்ரீமந் நாராயணன், நரனுக்கு உபதேசித்த திருமந்திரம்; ஸ்ரீ மகாலட்சுமிகசகு பகவான் உபதேசித்த த்வயம் மற்றும் குருக்ஷேத்ர புண்ணிய பூமியில் அர்ஜுனனுக்குக் கண்ணன் உபதேசித்த சரமஸ் லோகம் ஆகியவற்றின் தொகுப்புதான். இந்த ரகஸ்யத்ரயம்)

**ஸ்ரீமத்ராமானுஜரின் அவதார ரகசியம் முன்கூட்டியே தெரிதல்**

கலியுகத்தில் மக்கள் பாவச்செயல்களில் ஈடுபடுவதால், அவர்கள் படும் அளவற்ற துன்பங்களைத் தனது தவவலிமையால் அறிந்த நம்மாழ்வார், மக்களின் துன்பத்தைப் போக்க ஸ்ரீமத் ராமானுஜர் என்ற அற்புத மகான் அவதாரம் செய்யப் போவதையும் **கலியும் கெடும்கண்டுகொண்மின்...**


## திருக்கோயில் குறுந்தகடுகள்

திருக்கோயில்களின் வரலாறு, கட்டிடக்கலை, திருவிழாக்கள் போன்றவற்றை அனைவரும் எளிதில் அறிய ஏதுவாக ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்து குறுந்தகடாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.
முதற்கட்டமாக 18 திருக்கோயில்களில் இக்குறுந்தகடு வெளியிடப்படும்.



மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
திருமிகு. பி.சி.இராமசாமி அவர்கள்

## அரங்கிற்குப் பரிசு





சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் நம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அரங்கிற்கு இரண்டாம் பரிசு வழங்கப்பெற்றது. மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திருமிகு அ. மில்லர் அவர்கள் பரிசிற்கான கேடயத்தை வழங்க, நம் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

என்று நாதமுனிகளிடம் கூறி, ஸ்ரீமத் ராமானுஜரின் விக்ரகத்தை நாதமுனிகளிடம் தந்தருளினார். (கலியுகத்தில் பாவங்களினால் விளையும் துன்பங்களை ராமானுஜர் தடுத்து, மக்களுக்கு நன்மைகளைத் தந்தருள்வார் என்பதையே, **கலியும் கெடும் கண்டு கொண்மின்..** என்ற சொற்களால் முன்கூட்டியே உணர்த்தியதுடன், ஸ்ரீமத் ராமானுஜரின் அதிஅற்புத விக்ரகம் ஒன்றையும் நாதமுனிகளுக்குத் தந்தருளினார்.

இத்தகைய மகத்தான மகாபுருஷரான நாதமுனிகளின் பேரன்தான் வைணவ மகானான ஸ்ரீ ஆளவந்தார். இவரது அவதார ஸ்தலமும் காட்டு மன்னார்கோயில்தான். ஆளவந்தார் என்ற இந்த மகானால்தான் ஸ்ரீமத்ராமானுஜர் என்ற பெறற்கரிய வைணவ ரத்தினம் - பெறற்கரிய பொக்கிஷம்-துன்பப் பிணிபோக்கும் தூயமருந்து-கலியில் நம் கண்ணீரைத் துடைத்து இன்னருள் புரியும் நம் தெய்வமான ஸ்ரீமத் ராமானுஜர் நமக்குக் கிடைத்தார்.

இவ்விதம் நம்மாழ்வாரின் தரிசனமும் அவர்மூலம் நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களையும் நமக்காக-நம் எதிர்காலத்திற்காக மீட்ட ஸ்ரீமந் நாதமுனிகள், பேருவகை, அடைந்தார். ஒருநாள் அவரது கனவில் எம்பெருமான் வீரநாராயணன் தோன்றி, காட்டு மன்னார்கோயில் திரும்புமாறு கட்டளையிட, அதன்படியே தனது ஊருக்குத் திரும்பினார் இம்மகான்.

மீட்கப்பட்ட தமிழ் வேதமான நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாசுரங்களுக்கு ராகம், தாளம், நாட்டியம் ஆகியவற்றை அமைத்து வைணவத் திருக்கோயில்கள் அனைத்திலும் தினமும் அவற்றை அனுசந்திக்க (பாடுவதற்கு) ஏற்பாடு செய்தார். இவ்விதம் ஏற்பட்டதே வைணவத் திருக்கோயில்களில் உற்சவ காலங்களில் நாட்டியமாக அபிநயிக்கப்படும் அரையர் சேவை ஆகும். திவ்யப் பிரபந்தப் பாசுரங்களில் பொதிந்துள்ள ஆழ்ந்த அர்த்தங்களையும், கருத்துக்களையும் சாதாரண மக்கள் கூட எளிதில் அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும், அவர்கள் மனத்தில் பக்தி ஊற்றுப் பெருக்கெடுக்கவும், இந்த திவ்யப் பிரபந்தப் பாசுரங்களும், அரையர் சேவையும் பெரிதும் உதவின.

நாதமுனிகள் இல்லையென்றால், இன்று நமக்கு நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாசுரங்கள் எதுவும் கிடைக்காது. அதற்காக அவர் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. மகான்கள் அனைவருமே தமக்கென வாழா பிறர்க்கு உரியவர்கள்தான். இந்த மகானால்தான் நமக்கு ஆளவந்தார் கிடைத்தார். ஆளவந்தாரால்தான் இன்று இல்லந்தோறும் துணையிருந்து, நமது துயரினைத் தீர்த்து, கவசமென நம்மைக் காத்துவரும் ஸ்ரீமத் ராமானுஜர் கிடைத்தார். ஆதலால் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். எத்தனை பிறவிகளெடுத்தாலும் அவர் நம்மீது காட்டிய கருணைக்கு நாம் பிரதிசெய்ய முடியாது.

★

சிறப்பாசிரியர் மற்றும் திருமிகு **த.பிச்சாண்டி** இ.ஆ.ப., ஆணையர்,
வெளியிடுவோர் : தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையஆட்சித்துறை, சென்னை - 600 034.தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் அச்சு மற்றும் உபபொருள்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட். சென்னை-14. தொலைபேசி எண் : 28485670

# அமெரிக்காவில் ஓர் அற்புத ஆலயம்
# (கன்கார்டு சிவ-முருகன் ஆலயம்)



வட அமெரிக்காவில் ஃகலிபோர்னியா மாநிலத்தில், கன்கார்டு என்னும் நகரத்தில் (1819 இரண்டாம் தெரு, கன்கார்டு, ஃகலிபோர்போனியா -94519), பக்தர்களுக்கெல்லாம் அருள்வடிவமாய், அமைதியின் பிறப்பிடமாய் விளங்கி வருகிறது சிவ-முருகன் ஆலயம். அமெரிக்காவில் வாழும் இந்திய மக்களுக்கெல்லாம் தாய் வீடு போல் விளங்கும் இத்திருத்தலம் தான், அமெரிக்க நாட்டில் தோன்றிய முதல் இந்துத் திருத்தலம் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திருத்தலம் 1947 ஆம் ஆண்டு, இந்திய நாட்டின் சுதந்திரத்திற்கு பின், சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் என்பவரால் அமெரிக்காவில் நிறுவப்பட்டது. முதலில் சான்பிரான்சிஸ்கோ (Sanfrancisco)வில் நிறுவப்பட்ட இத்திருத்தலம், பின் பக்தர்களின் போக்குவரத்து நலன் கருதி, கன்கார்டு நகரத்தில் மாற்றி அமைக்கப்பட்டது.

1995 ஆம் ஆண்டு சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் கனவில் தோன்றிய இறைவன், அவரிடம் தனக்கு அமெரிக்காவிலுள்ள ஹவாய் தீவில் ஓர் திருத்தலம் அமைக்கும் படி ஆணையிட்டார். இறைவனின் ஆணையை நிறைவேற்றும் கடமையையேற்று சுவாமிகள் ஹவாய் புறப்பட்டார். அப்போது இக் கன்கார்டு திருத்தலத்தின் நிர்வாகப் பொறுப்பை இந்து மக்கள் சமுதாயம் ஏற்றது. 1998 ஆம் ஆண்டு தொடங்கி, இந்திய நாட்டிலிருந்து பிள்ளையார்பட்டி Non-Profit Organization மூலம் இங்கு அர்ச்சகர்கள் வரவழைக்கப்பட்டு இத்திருத்தலத்தில் சிவாகம முறைப்படி பூஜைகள் செவ்வனே நடந்து வருகின்றன.



இத்திருத்தலத்தில் இருகாலப் பூஜைகள் சிறப்புற நடைப்பெற்று வருகின்றது. இங்கு வரலட்சுமி விரதம், கோகுலாஷ்டமி, விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி, கந்தசஷ்டி, கார்த்திகை தீபம், ஆங்கில புத்தாண்டு, பொங்கல், தைப்பூசம், பங்குனி உத்திரம், தமிழ்புத்தாண்டு, சித்திரைப் பெருவிழா, வைகாசி விசாகம் போன்ற அனைத்துப் பண்டிகை நாட்களிலும் சிறப்புப் பூஜைகள் செய்யப்படுகின்றன. மேலும் இத்திருத்தல அர்ச்சகர்கள் பக்தர்களின் இல்ல கிரகபிரவேசங்கள், வாகனப் பூஜைகள், திருமணம் மற்றும் பலவித சாந்திப் பூஜைகளும் செய்து வருகின்றனர். இத்திருத்தல பக்தர்கள் பலர் வெள்ளிக்கிழமைகளிலும், விசேஷ நாட்களிலும் தங்கள் இல்லங்களில் பிரசாதங்களைத் தயார் செய்து கொண்டு வந்து, ஆண்டவனுக்குப் படைத்து, பிற பக்தர்களுடன் ஏற்றத்தாழ்வின்றிப் பகிர்ந்து உண்டு மகிழ்கின்றனர்.

இத்திருத்தலத்தில் பலவித கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. இந்தியப் பாரம்பரிய கலைகளான பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம், வீணை, வயலின் போன்ற அனைத்து வித கலைகளும் இங்கு ஊக்குவிக்கப்படுகின்றன.



இத்திருத்தலம் விநாயக பெருமான் சந்நிதி, சிவ-முருகன் சந்நிதி, துர்க்கை அம்மன் சந்நிதி என மூன்று சந்நிதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு ஆறுபடை வீடு முருகன், 63 நாயன்மார்கள், நடராஜர், நாராயண மூர்த்தி, மகாலட்சுமி, கலைவாணி மற்றும் நவகிரகங்களின் விக்ரகங்கள் உள்ளன.

இத்திருத்தலத்தில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமானை நோக்கி மாத மாதம் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை மேற்கொள்ளும் பக்தர்கள் சந்தான பாக்கியம் பெறுகிறார்கள். இத்திருத்தல முருகப் பெருமானின் திருக்கல்யாணத்தைத் திருமண வரம் வேண்டி நடத்தி வைக்கும் பக்தர்கள் உடனே திருமண பாக்கியம் அருளப் பெறுகிறார்கள். இத்திருத்தலத்திற்கு வரம் வேண்டி வரும் பக்தர்களுக்கெல்லாம் காலமறிந்து முருகன் கருணைப் புரிவதனால்,

"காலம் அறிவார்; கருணைபுரிவார்; கான்கார்டு முருகர்" எனப் பக்தர்கள் போற்றி மகிழ்கின்றனர்.

இத்திருத்தலத்தின் அம்மனின் வடிவழகைக் காண ஆயிரம் கோடி கண் வேண்டும். இத் தாயின் நேர் எதிரே அமைந்துள்ளன நவகிரகங்கள். என்றும் அன்னையின் பார்வையிலேயே நவகிரகங்கள் அமைந்துள்ளமையால் , இத்தாயை வழிபடுவோர் வாழ்வில், கிரகங்கள் நன்மையை மட்டும் வாரி வழங்குகின்றன.




இத்திருத்தலத்தின் சிறப்புக்குச் சிறப்புச் சேர்ப்பதாய் அமைந்துள்ளது இத்திருத்தலத்தின் அர்ச்சகர்கள், திரு அனந்து சிவாச்சாரியார் மற்றும் திரு விஸ்வநாத சிவாசாரியார் அவர்கள் தொண்டு. இவர்கள் திருத்தலப் பூஜைகள் சிறப்புற செய்வது மட்டுமின்றி, பக்தர்களிடம் பரிவன்புடன் அவர்களின் இல்லப் பூஜைகள், விசேஷங்கள் அனைத்தையும் சிறப்புற நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரியது.

தாய் நாட்டைவிட்டு திரவியம் தேடி அமெரிக்காவில் வாழும் இந்திய மக்களுக்குத் தாய் வீடாக விளங்குகின்றது இத்திருத்தலம், இந்து மக்கள் மட்டுமின்றி, பலவித மதத்தினரும், நாட்டவரும் நாடிவந்து நம்பித் தொழும் புனிதத் திருத்தலமாய் விளங்கிவருகின்றது கன்கார்டு சிவ-முருகன் ஆலயம்.

**வெற்றிவேல் முருகனுக்கு அரோஹரா!**
**கன்கார்டு முருகனுக்கு அரோஹரா!**

- திருமிகு R.A. செல்வமணி, B.E.,(Computer)
திருமதி அருள்செல்வி செல்வமணி, B.E.,(Computer)
e-mail : arulselvi@hotmail.com

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 03-05 / WPP No. 451 / 03-05



# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

# 1414-ம் பசலி சித்திரைப் பெருவிழா

| தேதி | | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| 12.4.05 | பங்குனி 30 செவ்வாய் | வாஸ்து சாந்தி. சதுர்த்தி |
| 13.4.05 | பங்குனி 31 புதன் | கொடியேற்றம் (காலை 10.00 மணி முதல் 10.24 மணிக்குள்) முதல் நாள் கற்பக விருஷம் சிம்ம வாகனத்தில் பவனி |
| 14.4.05 | சித்திரை 1 வியாழன் | 2-ம் திருநாள், பூத அன்ன வாகனங்களில் உலா |
| 15.4.05 | சித்திரை 2 வெள்ளி | 3-ம் திருநாள், கைலாச பர்வத காமதேனு வாகனங்களில் பவனி |
| 16.4.05 | சித்திரை 3 சனி | 4-ம் திருநாள், தங்கப் பல்லக்குகளில் திருவீதி உலா |
| 17.4.05 | சித்திரை 4 ஞாயிறு | 5-ம் திருநாள், குதிரை வாகனங்களில் பவனி வேடர் பறி லீலை |
| 18.4.05 | சித்திரை 5 திங்கள் | 6-ம் திருநாள். ரிஷப வாகனம், விருஷபாரூட தரிசனம், சைவ சமய ஸ்தாபித வரலாற்று லீலை |
| 19.4.05 | சித்திரை 6 செவ்வாய் | 7-ம் திருநாள், நந்திகேஸ்வரர் யாளி வாகனங்களில் புறப்பாடு |
| 20.4.05 | சித்திரை 7 புதன் | 8-ம் திருநாள், அருள்மிகு மீனாட்சியம்மன் பட்டாபிஷேகம் மாலை 6.58 முதல் இரவு 7.22 வரை வெள்ளி சிம்மாசனங்களில் பவனி |
| 21.4.05 | சித்திரை 8 வியாழன் | 9-ம் திருநாள், திக்கு விஜயம், பிரதோஷம், இந்திர விமானத்தில் எழுந்தருளல் |
| 22.4.05 | சித்திரை 9 வெள்ளி | 10-ம் திருநாள், திருக்கல்யாணம், காலை 9.22 முதல் 9.46 வரை. திருப்பரங்குன்றம் சுவாமி சுப்பிரமணியர், ஸ்ரீ பவளக்கனிவாய் பெருமாள், மதுரை எழுந்தருளல், இரவு-பூப்பல்லக்கு, புஷ்பப் பல்லக்கில் பட்டணப் பிரவேசம். |
| 23.4.05 | சித்திரை 10 சனி | 11-ம் திருநாள், திருத்தேர், அதிகாலை 5.15 முதல் 5.45 மணிக்குள் தேருக்கு எழுந்தருளல், காலை 6.00 மணி தேர்வடம் பிடித்தல். |
| 24.4.05 | சித்திரை 11 ஞாயிறு | 12-ம் திருநாள் உற்சவம் முடிவு, தீர்த்தவாரி, தேவேந்திர பூஜை, சித்திரா பௌர்ணமி |

சித்திரைப் பெருவிழாவிற்கு வருகை தரும் பக்தகோடி பெருமக்கள் அனைவரையும் மனங்கனிந்து வரவேற்கின்றோம்.

**பா. பாஸ்கரன்,** பி.எஸ்.சி.,பி.எல்.,
இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி

**கருமுத்து தி.கண்ணன்**
அறங்காவலர் குழுத் தலைவர்

அறங்காவலர்கள் : **பி.கே.எம். செல்லையா , அ. துரைப்பாண்டி, எல்.ஆர். உமாபதி, மா. செல்விமாரி**